# களத்தில்

ஒரு தேசிய விடுதலை இயக்கத்துடன் அணி சேர்ந்து கொள்வதன் மூலமே, தொழிலாள வர்க்கம் தேசியப் போராட்டத்திற்கு உருப்படியான முறையில் பங்களிக்க முடியும். இதுவே உழைக்கும் மக்களின் விடிவிற்கும் விமோசனத்திற்கும் வழிகோலும்.

*- தமிழீழத் தேசியத் தலைவர்*

திருவள்ளுவர் ஆண்டு 2028 (23.04.1997) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (133) அன்பளிப்பு: 60 p


# ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து படைகளை விலக்குக! 53 அரச சார்பற்ற நிறுவனங்கள் வற்புறுத்தல்

நா. மனித உரிமைக்குழுவின் 3வது அமர்வில், ஐ. நா. மனித உரிமை ஆணைக் குழுவில் நிரந்தர அங்கத்துவம் வகிக்கும் 53 அரச சார்பற்ற நிறுவனங்கள், "தமிழ் மக்களுக்கு எதிரான சகல இராணுவ நடவடிக்கை களையும் நிறுத்தி, ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து படைகளை விலக்குமாறும் வடக்கு - கிழக்குக்கான பொருளாதாரத் தடைகளை நீக்கி மனிதாபிமான உதவிகளை அனுமதிக்குமாறும் சிறிலங் காவை வற்புறுத்துமாறு" கூட்டாக வேண்டுகோள் விடுத்த வரலாற்றுச் சம்பவம் ஏப்ரல் 9ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. 1993இல் நடந்த அமர்வில் "மனித உரிமைகளும் மனிதாபிமான சட்டங்களும் சிறிலங்காவினால் மிக அதிகமான அளவில் வன்முறைப்படுத் தப்படுவதினால் சிறிலங்கா இருநாடுகளாக பிளவுபடும் நிலை அண்மித்துவிட்டது" என இதே ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு முன்பாக 24 அரச சார்பற்ற நிறுவனங்கள் பிரகடனம் விடுத்திருந்தன. அந்நாள் முதலாக இது தொடர்பான கவனம் சர்வதேச அரச சார்பற்ற நிறுவ னங்களிடையே அதிகரித்து வந்து தற்பொழுது முன்னரை விட இரு மடங்காகி உள்ளது. தமிழீழ மக்களினை சிறிலங்கா இனஅழிப்புச் செய்வதைச் சர்வதேச சமூகம் கூர்மையுடன் நோக்கி வருவதையே இது சுட்டிக்காட்டுகின்றது.

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## ஆதாரமற்ற குற்றச்சாட்டு

### – அமெரிக்க அகதிகள் நிறைவேற்றுக் குழு

தமிழ் மக்கள் அகதிகளாக இந்தியாவின் தமிழ்நாட்டு மாநிலத்திற்கு இடம்பெயர்வதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளே காரணமென இலங்கை, இந்திய அரசுகள் சாட்டிய குற்றச்சாட்டு ஆதாரமற்றது என அமெரிக்க அகதிகள் நிறைவேற்றுக் குழு தெரிவித்துள்ளது.

"சிறிலங்காவில் பிரச்சினைகளும் இடப்பெயர்வும்" எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட அமெரிக்க அகதிகள் நிறைவேற்றுக் குழுவின் அறிக்கையில், யாழ்ப்பாணமானது ஒரு இராணுவ ஆட்சியின் கீழுள்ள நகரமாகக் காட்சியளிப்பதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

மேலும், இங்கு மக்கள் அச்சத்துடனும் பீதியுடனுமே வாழ்வதாகத் தெரிவித்துள்ள அவ் அறிக்கையில், சோதனைச் சாவடிகள், அனுமதிப் பத்திர முறை, ஊரடங்குச் சட்டங்கள் போன்றவை யாழ். மக்களின் வாழ்க்கை முறைமையை ஆக்கிரமித்துள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அவ் அறிக்கை, வேலை வாய்ப்பு அங்கு தலை விரித்தாடுவதாகவும் எடுத்துக் காட்டியுள்ளது. ✷

## நாங்கள் பாதுகாப்புடன் சுதந்திரத்துடன் மக்களாக வாழ உதவுங்கள்!

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு முன் அதி வண. கலாநிதி இம்மானுவேல் சாட்சியம்

சாட்சியத்தின் முழு விபரமும் உள்ளே.....



## வன்னிப் பகுதி மீது பாரிய இராணுவ நடவடிக்கைக்கு முயற்சி

- போர் விமானங்கள் வாங்க அதிகாரிகள் அமெரிக்காவுக்கு விரைவு
- கொழும்பின் பாதுகாப்பு இறுக்கப்படுகிறது

சிறிலங்கா அரசு வன்னிப் பகுதி மீதான மற்றொரு பாரிய இராணுவ நடவடிக்கைக்கு ஆயத்தங்களை மேற்கொண்டு வருவதாக அவதானிகள் கருதுகின்றனர்.

முன்பு, யாழ். குடாநாடு மீதான தாக்குதல்களைத் திட்டமிடும் பொழுது "சமாதானத்தில் அக்கறை காட்டுவது போல்" பரப்புரை செய்து கொண்டு கொடூரமான போர்த் திட்டத்தைத் தயாரித்து முடித்தது போன்றே தற்பொழுதும் "வாயளவில் சமாதான பரப்புரை செய்து கொண்டு வன்னி மீதான மற்றொரு ஆக்கிரமிப்புப் போருக்கான முழு முயற்சிகளிலும் ஈடுபட்டு வருவதாகச் செய்தியாளர்கள் கருதுகின்றனர்.

வவுனியாவில் இருந்து கிளிநொச்சி நோக்கிய

தொடர்ச்சி 4 ம் பக்கம்...



"பிரபாகரனின் படைகள் நகரும் தமிழன் கொடிகள் உயரவே ! எதிராளிகளின் படைகள் சரியும் தமிழர் தேசம் விடியவே !!"

## மன்னார் கடற்பரப்பில் சமர்

- 9 கடற்படையினர் பலி
- ஒரு விசைப் படகு சிதறடிப்பு

மன்னார் பேசாலைக் கடற்பரப்பில் இரு விசைப்படகுகளில் சென்ற சிறிலங்காக் கடற்படையினரை இடைமறித்து கடற்புலிகள் கடும்தாக்குதலை மேற்கொண்டனர். இம் மாதம் 10ஆம் திகதி காலை 7.30 மணியளவில் தலைமன்னாரில் இருந்து பேசாலை நோக்கி இரு விசைப்படகுகளில் கடற்படையினர் சென்று கொண்டிருந்த வேளையிலேயே கடற்புலிகளால் வழிமறித்துத் தாக்கப்பட்டனர். இச் சண்டையில் ஓர் விசைப்படகு முற்றாகச் சிதறடிக்கப்பட்டது. இதன்போது ஒன்பது கடற்படையினர் கொல்லப்பட்டனர். அத்துடன் மற்றைய விசைப்படகு

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

### உள்ளே... ☞


- ❆ மே-தினம் நினைவாக.... (நடுப்பக்கம்)
- ❆ உலக அரங்கு இந்தியா - தலைமைகள் பந்தயம்
- ❆ கனடா (நீதிமன்ற) வழக்கு....
- ❆ சர்வதேச அரங்கில் தமிழீழ...
- ❆ சிறையிருப்பு.... (சிறுகதை)
- ❆ தமிழீழச் செய்திகள்...
- ❆ மக்கள் பணியில் த.பு.க. (TRO)
- ❆ த.பொ.மே.க. (TEEDOR).


புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# வன்னிப் பிரதேசத்திற்கான நிவாரண உதவிகள் நிறுத்தம்

வன்னிப் பிரதேச மக்கள் பெற்று வந்த மிகச் சொற்ப அளவிலான நிவாரண உதவிகளையும் சிறிலங்கா அரசு நிறுத்தியுள்ளது. இவ் அறிவித்தலை சந்திரிகா அரசு விடுத்ததை அடுத்து, சித்திரை 15ஆம் நாள் முதல் இந்த நிவாரண உதவிகள் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

உணவு நெருக்கடி, மருந்து நெருக்கடி, தொற்றுநோய் பரவுதல் போன்றவற்றால் இப் பகுதி மக்கள் அனுபவிக்கும் துன்ப வாழ்வைப் பல சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் சிறிலங்காவிற்கு எடுத்துக்கூறி நிவாரணங்களை அதிகரிக்குமாறு கேட்டு வந்தன.

ஆனால், சந்திரிகா அரசோ இப் பகுதி மக்கள் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்வதனால் பெற்றுவந்த சொற்ப பணத் தொகையையும் நிறுத்தி இப் பகுதி மக்களின் வாழ்வினை மேலும் மோசமாக்கியுள்ளது.

இவ்வாறாக, தனது குடிமக்கள் எனக் கூறிக்கொள்ளும் பேரினவாதச் சிந்தனை கொண்ட சந்திரிகா அரசு, அந்த மக்களுக்கான சகல அடிப்படைத் தேவைகளையும் மறுத்து வருகிறது. இதனால் தமிழீழ மக்கள் தமது சுதந்திரத்தைத் தாமே நிர்ணயிக்க வேண்டிய கட்டாயம் தவிர்க்க முடியாதது என்பது இதனால் உறுதியாகிறது.

# சர்வதேச - உள்ளூர் அவதானிப்பாளர்களை யாழ். குடாநாட்டுக்குள் செல்ல அனுமதிக்குக! -சர்வதேச மன்னிப்புச் சபை வேண்டுகோள்

யாழ். குடாநாட்டுக்குள் சர்வதேச மன்னிப்புச் சபையின் சர்வதேச – உள்ளூர் அவதானிப்பாளர்கள் செல்வதற்கு அனுமதிக்கும்படி சர்வதேச மன்னிப்புச் சபை சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. 1983 முதல் 1987 நடுப்பகுதி வரை காணாமல் போனவர்கள் என 860 பதிவுகளே செய்யப்பட்டதாகவும், ஆனால் தற்போது ஒரு வருடத்தில் 600 பேர் காணாமல் போயுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள சர்வதேச மன்னிப்புச் சபை, பொதுமக்கள் காணாமல் போவதற்குக் காரணமாக இருக்கும் இராணுவத்திற்கு இந்த அதிகாரத்தையும் வாய்ப்பையும் அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்றவைகளே வழங்குகின்றன எனவும் சுட்டிக் காட்டியுள்ளது. இவற்றில் மாற்றங்கள் கொண்டு வரப்படல் வேண்டும் எனவும் சர்வதேச மன்னிப்புச் சபை சிறிலங்காவை வலியுறுத்தியுள்ளது.

# 6 தமிழர்களும் இராணுவத்தினராலேயே கொல்லப்பட்டமை உறுதியாகிறது

கடந்த ஆண்டு தென்மராட்சிப் பகுதியில் ஆழமற்ற புதைகுழிகளில் இருந்து கண்டெடுக்கப்பட்ட 6 தமிழ்ப் பொதுமக்களது சடலங்களுள் 4 சடலங்கள் அடையாளங் காணப்பட்டன. எழுதுமட்டுவாளைச் சேர்ந்த பொன்னு அழகரெட்ணம் (33), கந்தையா தியாகராஜா (44), சிறீகணேஸ் வித்தியாலய மாணவன் கந்தையா குலேந்திரராஜா (16), மிருசுவிலைச் சேர்ந்த தம்பு மாணிக்கம் (45) ஆகியோரது சடலங்களே இனங்காணப்பட்டன. இவ் ஆறு பேரும் சிறிலங்கா இராணுவத்தால் கடந்த ஐப்பசி மாதம் கைதானவர்கள் என்ற விபரமும் வெளிவந்துள்ளது.

அப்பொழுது இராணுவத்தினர் இவர்களைத் தாம் கைது செய்யவில்லை என அறிவித்தனர். ஆனால், தற்போது இவர்கள் சிறிலங்கா இராணுவத்தினராலேயே கொல்லப்பட்டனர் என இராணுவப்பொலிஸ் விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது.

இதனை, சிறிலங்காவின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற பிரதிநிதி ஜோசப் பரராஜசிங்கம் சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் மகிந்த பந்து சேனவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# வடக்கு - கிழக்கு தமிழர்கள் வேறு மலையகத் தமிழர்கள் வேறு அல்ல

வடக்கு–கிழக்கு தமிழர்கள் வேறு, மலையகத் தமிழர்கள் வேறு அல்ல. வடக்கு–கிழக்கை அழிப்போம் என சில அரச தலைவர்கள் கூறியமையே மலையக மக்கள் பலர் அரசிற்கு எதிராக வாக்களிக்கக் காரணமாக அமைந்தது.

இவ்வாறு, கண்டி மாவட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சிறிலங்காப் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். இராசரட்ணம் அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை மீது சிறிலங்கா பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

மேலும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையிலான உடன்பாடு பாரிய அளவில் பிரசித்தம் செய்யப்படுகிறது. ஆனால், இது அரசின் அதிகாரப் பரவலாக்கல் யோசனைக்கு தமது கட்சி ஆதரவு வழங்குவதாக அர்த்தப்படக்கூடாது என எதிர்க்கட்சித் தலைவர் இப்பொழுதே கூறிவிட்டமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் கூறினார்.

அத்துடன், உள்ளூராட்சித் தேர்தலின் போது தோட்டப் பகுதிகளில் அரச ஆதரவாளர்களால் தமிழ் வாக்காளரின் அட்டைகள் பறிக்கப்பட்டன – தமிழர்கள் தாக்கப்பட்டனர் எனவும் சிறிலங்காப் பாராளுமன்றத்தில் எடுத்துக் கூறினார்.

# வீடு பார்க்கச் சென்றவர்கள் இராணுவத்தால் சுட்டுக் கொலை

உருத்திரபுரத்தில் தமது வீட்டைப் பார்வையிடச் சென்ற பொதுமக்கள் மீது, சிறிலங்கா இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொன்றுள்ளனர். இக் கோர வெறியாட்டத்தின் பொழுது ஐந்து பொதுமக்கள் பலியாகியுள்ளதாக காயங்களுடன் தப்பி வந்த 16 வயது மணியம் பரமநாதன் தகவல் தெரிவித்துள்ளார்.

இராணுவ ஆக்கிரமிப்பை அடுத்து இடம் பெயர்ந்த மக்கள் மீளவும் தமது வீடுகளைப் பார்வையிடவெனச் சென்றிருந்த வேளையிலேயே இராணுவத்தினர் இக்கொலையைப் புரிந்துள்ளனர்.

இச் சம்பவத்தின்போது பலியான பொதுமக்களின் விபரம் வருமாறு:

குமாரசாமி கந்தசாமி (39)
முத்துச்சாமி மகாதேவன் (25)
ஆனந்தன் கேதீஸ்வரன் (18)
சின்னவன் (19)
தயாளன் (17)

# காணாமல் போனவர்களின் பெற்றோர்கள் சங்கம்

யாழ். குடாநாட்டில் காணாமல் போனவர்களின் பெற்றோர், சங்கம் ஒன்றை அமைத்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அச்சங்கம், "காணாமல் போனவர்களின் பெற்றோர்கள் சங்கம்" என அழைக்கப்படுகின்றது. யாழ். குடாநாட்டில் இராணுவ கெடுபிடிக்குள் காணாமல் போகும் இளவயதினரின் தொகை பெருகுவதைச் சுட்டிக்காட்டியுள்ள இச் சங்கம், காணாமல் போன தங்கள் பிள்ளைகளைக் கண்டுபிடிக்க ஆவன செய்யுமாறு சிறிலங்கா ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

# அமெரிக்க தலைமை பிரதிநிதி கண்டனம்

"யாழ். குடாநாட்டில் இராணுவக் காவலில் வைக்கப்பட்ட 700க்கு மேற்பட்ட மக்கள் காணாமல் போயுள்ளார்கள். இது குறித்து விசாரணை செய்வதைச் சிறிலங்கா அரசு மிக மெதுவாகவே நடாத்தி வருகிறது".

இவ்வாறு, அமெரிக்காவிற்கான ஐ. நா. மனித உரிமைகள் சபையின் தலைமைப் பிரதிநிதி நான்சி ரூகின் அம்மையார் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 53வது அமர்வில் உரையாற்றுகையில் குறிப்பிட்டுள்ளார்.

# நாச்சிக்குடாவில் சிறிலங்கா வான்படை வெறியாட்டம் 3 பொதுமக்கள் படுகொலை 6 மீனவர்கள் கடுங்காயம்

மன்னார் மீன்பிடிக் கிராமமான நாச்சிக்குடாவில் இம் மாதம் 10ஆம் திகதி சிறிலங்கா வான்படையின் இரண்டு 'கிபீர்' போர் விமானங்கள் நடாத்திய கோரத் தாக்குதலில் மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டு, ஆறு மீனவர்கள் கடுங்காயமுற்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மீன்பிடி இறங்குதுறையில் மீன்களைச் சந்தைப்படுத்துவதற்காக இறக்கிக் கொண்டிருந்த மீனவர்கள் மீது, 11.10 மணியளவில் நடாத்தப்பட்ட இந்த விமானத் தாக்குதலில் பொதுமக்களின் 35 மீன்பிடிப் படகுகள் சேதமடைந்ததாகவும் அதில் இருபது படகுகள் முற்றாக அழிந்து போயுள்ளதாகவும் புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடுங்காயமடைந்த ஆறு மீனவர்களும் வைத்தியசாலையில் கவலைக்கிடமான நிலையில் உள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தெரிவிக்கின்றன.

# சக்திவாய்ந்த கண்ணிவெடித் தாக்குதல் இராணுவ வாகனம் சுக்குநூறாகியது

யாழ். குடாநாடு வடமராட்சிப் பகுதியில் நாகர்கோவில் எனும் கிராமத்தில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவ வாகனம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் மிகச் சக்திவாய்ந்த கண்ணிவெடி தாக்குதல் ஒன்றினை நடாத்தியுள்ளனர். இவ்வெற்றித் தாக்குதலில் இராணுவ வாகனம் முற்றாகத் தகர்க்கப்பட்டதோடு, வாகனத்தில் இருந்த அனைத்து இராணுவத்தினரும் பலியாகியுள்ளதாகத் தெரிகிறது.

# இராணுவ உயர்மட்ட உளவாளிகள் சுட்டுக் கொலை

சிறிலங்கா இராணுவத்தின் இரு உயர்மட்ட உளவாளிகள் மட்டக்களப்பு செங்கலடியிலும், திருமலை மூதூரிலும் விடுதலைப் புலி வீரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

சார்ஜன்ட் கருணாதிலக எனும் செங்கலடிப் பிரிவு இராணுவ உளவுப் பிரிவுத் தலைவர் உட்பட இரு உயர்மட்ட உளவுத்துறை அதிகாரிகளே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர்.

# காணாமல் போனவர் இராணுவத்தால் கொல்லப்பட்டிருக்கலாம் என அச்சம்

ஓமந்தை இளமருதங்குளத்தைச் சேர்ந்த கோபாலசிங்கம் எனும் பொதுமகன், இம் மாதம் 5ஆம் திகதி காட்டுப் பகுதிக்குச் சென்றதாகவும் அன்றுமுதல் இவரைக் காணவில்லை எனவும் இவரின் உறவினர்கள் அறிவித்துள்ளனர். இவர் சிறிலங்கா இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டு கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

# புத்தாண்டு தினத்தை குழப்புவதற்காக தமிழர்கள் மீது பொலிசார் சூடு

தமிழ்ப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு திருகோணமலை அபயபுரம் மைதானத்தில் நிகழ்ந்த இசைநிகழ்ச்சியொன்றைப் பார்க்கச் சென்ற தமிழ் மக்கள் மீது, சிறிலங்காப் பொலிசார் கண்மூடித்தனமாகச் சுட்டுள்ளனர். இச் சம்பவத்தில் பல பொதுமக்கள் காயமடைந்ததாகவும் இருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் திருகோணமலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

'சமாதானத்திற்கான போர்' என்ற தனது நாடகத்தில், சிறிலங்கா அரசு தான் ஆக்கிரமித்த பகுதிகளில் நிலைமை வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது எனும் அடுத்த காட்சியை சர்வதேச சமூகத்திற்கு நடித்துக் காட்டிக் கொண்டிருக்கிறது.

1) தமிழ் மக்களின் உட்கட்டுமானங்களை அழித்து அவர்களது பாரம்பரிய தாயகமான தமிழீழத் தேசத்திற்கு அவர்கள் இயல்பாகவே தோற்றுவிக்கக்கூடிய தேசிய பாதுகாப்புக்கான நிதி மற்றும் மூலவள பிரயோகங்களைத் தடுத்து அப் பிரதேசங்களை ஆக்கிரமிப்பதையும் –

2) தமிழர்களின் தேசிய பாதுகாப்பு அமைப்பும் அரசு நோக்கிய அரசுமான தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து இராணுவ வலிமை கொண்டு தமிழ் மக்களை அந்நியப்படுத்தி அவர்களை அடிமை கொள்வதையும் நிறைவேற்றுவதற்கு – சந்திரிகா அரசு முழு அளவிலான இனஅழிப்புடன் கூடிய, சர்வதேசச் சட்டங்களுக்கு புறம்பான போர் ஒன்றை தமிழ் மக்கள் மேல் நடாத்தி, அதனைச் சமாதானத்திற்கான போர் என்ற நாடகத்தின் மூலம் சர்வதேச சமூகத்திலிருந்து மறைக்க முற்பட்டு தோல்வி கண்டுவரும் சிறிலங்கா அரசு, தனது நாடகம் அம்பலமாகும் நிலையை இனங்கண்டு அடுத்த அத்தியாயத்தை அவசரம் அவசரமாக அரங்கேற்றத் தொடங்கியுள்ளது.

இந்த நிலைமை வழமை என்ற நாடகம் பல உட்காட்சிப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. முதலாவது, குடாநாட்டில் தினமும் காணாமல் போதல், பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள், இனக்கொலைகள், மாணவர்கள் மீதான திட்டமிட்ட கொலைகள் என்பன இராணுவத்தினால் இழைக்கப்படுவதற்கு அனுமதியும் சட்டப் பாதுகாப்பும் அளிக்கும் சிறிலங்கா – இவைகளை சட்டம் ஒழுங்கு என்பவற்றின் முன்கொண்டு வந்து நீதி நியாயம் வழங்குவதற்கு விருப்பும் செயற்பாடும் உள்ள அரசாகத் தன்னைக் காட்ட முற்படுகிறது. இரண்டாவது, தமிழ் மக்களுக்கு மிகக் குறைந்தபட்ச உணவு வழங்கலை காலதாமதமாகவும் உணவுகள் பழுதடைந்த நிலையிலும் வழங்கும் சிறிலங்கா, வெறும் புள்ளிவிபர கணக்குகள் மூலம் தான் ஒழுங்கான உணவு வழங்கலில் ஈடுபட்டுள்ளது போல் சர்வதேச நாடுகளுக்குக் காட்ட முற்படுகிறது. மூன்றாவதாக, தனது இராணுவ பயங்கரவாதத்தினால் உயிர் பாதுகாப்புத் தேடி குடாநாட்டை விட்டு வெளியேற முற்பட்ட மக்களை அதே தனது இராணுவ சுற்றிவளைப்பு மூலம் முற்றுகையிட்டுள்ள சிறிலங்கா, அம் மக்கள் அப் பிரதேசத்தில் இயல்பான நிலைக்கு திரும்புவதுபோல் காட்ட முற்படுகிறது. நான்காவதாக, தமிழ் மக்களின் பல கோடி ரூபா பெறுமதியான உட்கட்டுமானங்களை



## தொடர் நாடகம்

திட்டமிட்ட வகையில் இராணுவ நாசப்படுத்தலுக்கு உட்படுத்திவரும் சிறிலங்கா, இப்பொழுது அவைகளை மீளவும் கட்டியெழுப்புவதற்கான அக்கறையுள்ள அரசு போல் வெளிநாடுகளில் புனர்நிர்மாண, புனர்வாழ்வு மானியங்களையும் உதவிகளையும் கோரி நாடகமாடி வருகிறது. மேலும் எல்லாவற்றுக்கும் மேலாக இராணுவ பலவந்தத்தின் மூலம் தமிழ் மக்களின் அரசியல் பணிவைப் பெற முயற்சிக்கும் சிறிலங்கா, தனது இராணுவச் சர்வாதிகாரத்தை ஜனநாயக ஆட்சிமுறைமை எனக்காட்டுவதற்கான அரசியல் சட்டவாக்கங்களை உருவாக்குவதற்கு எடுக்கும் முயற்சிகளுக்கு அரசியல் தீர்வு என்ற சுலோகத்துடன் சர்வதேச உலகைப் பல வழிகளில் ஏமாற்ற பல மதிநுட்பமான திட்டங்களைத் தீட்டி நாடகமாடுகிறது.

இவைகள் தமிழ் மக்களை அவர்களது சொந்தப் பாரம்பரிய தாயகத்திலேயே நாடற்றவர்களாகவோ அல்லது இரண்டாந்தரப் பிரசைகளாகவோ மாற்றுவதற்கான நீண்டகாலத் திட்டத்தின் தொடர் நடவடிக்கைகள்தான் என்பதற்கு செயல்முறையில் சிறிலங்கா எவ்வித மாற்றங்களையும் ஏற்படுத்தாமல் தனது இராணுவ ஆக்கிரமிப்பை நாளுக்கு நாள் அதிகரித்துவரும் சம்பவங்கள் நடைமுறைச் சான்றுகளாக உள்ளன. அண்மைய செய்திகளை ஆராய்ந்தால் முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா என எங்கு பார்த்தாலும் வழமையான இராணுவ ஆக்கிரமிப்பு முயற்சிகள், எறிகணைத் தாக்குதல், குண்டுவீச்சுகள், காரணமில்லாக் கைதுகள், இருப்பிடம் தெரியாமல் மக்கள் காணாமல் போதல் போன்ற அடுக்கடுக்கான தமிழின – தமிழீழப் பிரதேச அழிவுகளையே காணக்கூடியதாக உள்ளது. இந்த இலட்சணத்தில் அமைதி என்றும் அரசியல் தீர்வு என்றும் முணுமுணுக்கும் சந்திரிகாவின் பசப்பு வார்த்தைகளில் மயங்க எந்தத் தமிழரும் தயாராக இல்லை. உண்மையில், சந்திரிகாவானாலும் சரி, சந்திரிகா – ரணில் கூட்டு முயற்சியானாலும் சரி அமைதிக்கான தேடலாக அமைய வேண்டுமாயின், எந்த இராணுவ ஆக்கிரமிப்பு இன்றைய சம்பவங்களுக்குப் பொறுப்பாக உள்ளதோ அந்த இராணுவ ஆக்கிரமிப்பு விலக்கப்பட்டு, எந்த பயங்கரவாத அவசரகால சட்டங்கள் நாடு முழுவதிலுமே சட்டத்தையும் ஒழுங்கையும் செல்லாக் காசாக்கி உள்ளதோ அவைகள் பின்வாங்கப்பட்டு, எந்தப் பேரினவாத உணர்வு தமிழர்களது பாரம்பரிய தாயக வரலாற்றை ஏற்க மறுக்கிறதோ அந்த மனநிலை மாற்றப்பட்டு இலங்கைத் தீவின் அரசியல் யதார்த்தத்தினை ஏற்று தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கான சூழலை ஏற்படுத்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் கூறும் நல்லிணக்க ஆலோசனைகள் வழிநடப்பது ஒன்றே வழியாகும். இந்த உண்மையை, இலங்கைத் தீவின் யதார்த்தத்தை, எமது தமிழ் மக்களின் நியாயமான பாதுகாப்புடனான அமைதிக்கான ஆவலை உலகுக்கு அறிவிக்க வேண்டிய கடமை புலம் பெயர் தமிழர்களாகிய நமது வாழ்க்கைப் பணியாக உள்ளது. அவ்வாறே எமது மக்களின் நல்வாழ்வுக்கும் விடுதலைக்குமான மதி வழங்கலையும் நிதி வழங்கலையும் வேகப்படுத்த வேண்டியது சர்வதேசத்திலும் வாழும் எமது பொறுப்பாக உள்ளது. ✷

# நாங்கள் பாதுகாப்புடன் சுதந்திரத்துடன் மக்களாக வாழ உதவுங்கள்!

✻ ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு முன் அதி வண. கலாநிதி இம்மானுவேல் சாட்சியம்

ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவின் 53வது அமர்வு 10-03-97 அன்று ஜெனிவாவில் தொடங்கியது. இதன்போது யாழ்ப்பாண கத்தோலிக்க சபையின் அதி வணக்கத்திற்குரிய கலாநிதி எஸ்.ஜே. இம்மானுவேல் அவர்கள் அனைத்துலக அமைதிச் சபையின் சார்பாக (International Peace Bureau) மனித உரிமைகள், பாரிய இடப்பெயர்வு, மக்கள் இடப்பெயர்வு எனும் தலைப்பில் தமிழ் மக்கள் சிறிலங்கா அரச படைகளின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் அனுபவிக்கும் துன்பங்களை விளக்கி, இத் துன்பங்களை நீக்க ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை குழுவுக்கு வேண்டுகோள் விடுத்தார். அவரின் சாட்சியம் வருமாறு:

சிறிலங்காவில் வாழும் தமிழ் மக்களின் உயிர் பிழைத்தலுக்கான ஓர் முக்கிய அறிக்கையை விடுப்பதற்கு என்னை இங்கு அனுமதித்ததிற்கு எனது நன்றியைக் கூறுகிறேன். சிறிலங்காவில் நடைபெற்றுவரும் இனப்பிரச்சினைகளால் 'அனைத்துலக அமைதிச் சபை' நீண்டகாலமாக ஓர் அதிருப்தி அடைந்துள்ளது. ஆகவே இலங்கைத் தீவில் வடக்கு-கிழக்கில் துன்பப்படும் மக்களின் நிலைகளை எடுத்துக்கூறும் முதன்மையாக உண்மைச் சாட்சியத்தை வெளியிடுவதில் மகிழ்வடைகிறது.

நான் யாழ்ப்பாண கத்தோலிக்க மறைமாவட்டத்தின் குரு முதல்வர். எனது தேசத்தில் கடந்த சில ஆண்டுகளாக நடந்துவரும் பயங்கரமான சம்பவங்களினால் பாதிக்கப்பட்டவனாகவும் உள்ளேன். நான் எனது மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள், மரணங்கள், அழிவுகளுக்குச் சான்று பகர்வதற்காக இங்கு வந்துள்ளேன். இந்தத் துன்பங்கள், சிறிலங்கா அரசு போர்ச் சட்டங்களை வன்முறைப்படுத்தி வருவதினால் ஏற்பட்ட நேரடி விளைவான பாரிய இடப் பெயர்வுகளால் ஏற்பட்டவையாகும். நாங்கள் மக்களாக வாழ, பாதுகாப்புடன் சுதந்திரத்துடன் உயிர் வாழும் உரிமையை அனுபவிக்க எங்களுக்கு உதவும்படி உறுதியான அவசர வேண்டுகோள் ஒன்றை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு விடுக்க விரும்புகின்றேன். உள்ளக இடப்பெயர்வுக்குள்ளானோர் தொடர்பாக திரு. பிரான்சிஸ் டெங் 1994இல் நடைபெற்ற 50வது மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணைக்குழு E/CN/4, 1994 / 44 / ADD இலக்க அறிக்கையை சமர்ப்பித்ததின் பின்னர் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. எனது தேசமாகிய வடக்கு – கிழக்கில் இந்த நீண்ட காலப் போரினால் 50,000 பொதுமக்கள் கொல்லப்பட்டு, சொத்துக்களுக்குப் பாரிய நாசங்கள் விளைவிக்கப்பட்டு, பாரிய இடப்பெயர்வுகளும் புலம் பெயர்தலும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

### 1995 இல் முதலாவது பாரிய இடப்பெயர்வு

நீண்டகாலமாக மனிதாபிமானமற்ற முறையில் எம்மீது மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரத் தடைகளினால் வாழ்வின் விளிம்புக்கே தள்ளப்பட்டிருந்த எம்மேல், "சமாதானத்திற்கான போர்" என்ற பெயரில் போர் மேற்கொள்ளப்பட்டது.

ஐந்து தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகள் 7-7-95 முதல் தொடங்கப்பட்டு ஆயிரக்கணக்கான மக்களினை குடிமனைகளிலிருந்து வெளியேற வைத்து, அவர்களது வாழ்வையே அழித்து இடம்பெயர்ந்து பணம் ஏதுமின்றி வாழும் அவலநிலையை அவர்களது தாயகத்திலேயே தோற்றுவித்தது.

17-10-95இல் அடுத்த தொடர் இராணுவ நடவடிக்கை 'ரிவிரச' என்ற பெயரில் யாழ்ப்பாணத்தை கைப்பற்றும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ச்சியான குண்டு வீச்சுக்களும் எறிகணைத் தாக்குதலும் இரவுகளிலும் கூட

தொடர்ச்சி 4 ம் பக்கம்....

## வாசகர் கவனத்திற்கு !



இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை (தலைப்புடன்) வரையுங்கள்.

உங்கள் ஆக்கங்களை 23 - 05 - 1997 இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடிய வாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:
**'Kalathil',**
**Eelam House,**
**202Long Lane,**
**LondonSE1 4QB.**

களத்தில் ஆசிரியர் குழு

# மன்னார் கடற்பரப்பில் ....

கடற்புலிகளால் கைப் பற்றப் பட்டது. கைப்பற்றப்பட்ட விசைப் படகோடு அதன் இயந்திரம், தொலைத் தொடர்பு சாதனம், ஆயுதங்களும் கொல்லப்பட்ட ஒன்பது கடற்படையினரின் சடலங்களும் எடுத்துச் செல்லப்பட்டன.

சர்வதேச போர்ச் சட்டங்களின் பிரகாரம் கைப்பற்றப்பட்ட படையினரின் சடலங்களை 12ஆம் திகதி அன்று விடுதலைப் புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் திடம் கையளித்தனர். ✷

# ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து படைகளை ....

இந்த 53 அரச சார்பற்ற நிறுவனங்களும் ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதாரம் மற்றும் சமூக சபையில் அங்கத்துவம் வகிக்கின்றன. International Commission of Jurists, உலக திருச்சபைகளின் சபை, சர்வதேச மனித உரிமைகள் சட்டக்குழு, மனித உரிமைகளுக்கான றெபேர்ட் எப் கென்னடி நிலையம், சர்வதேச பத்திரிகையாளர் ஒன்றியம், ஆசியாவின் மனித உரிமைக ளுக்கான பிராந்திய சபை, பாக்ஸ் கிறைஸ்ட் சர்வதேச அமைப்பு, பாக்ஸ் றோமனா, மக்களது விடுதலைக்கும் உரிமைக ளுக்குமான சர்வதேச கூட்டமைப்பு ஆகியன தமிழர் தாயகத்தில் நடாத்தப்பட்ட புதிய ஆக்கிர மிப்புக்களைச் சுட்டிக்காட்டியுள்ளன.

அத்துடன், "சாதாரண தமிழ் மக்கள் கூட்டு மொத்தமாக இராணுவ நடவடிக்கைகளின் இலக்கு களாக்கப்படுவது தொடர்ந்து கொண்டிருப்பதாகவும் எடுத்துக்கூறி மனித உரிமைகளும் மனிதாயச் சட்டங்களும் சிறிலங் காவால் வன்முறைப்படுத்தப்படு வதாகவும் விளக்கி ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்திய இவ் அமைப்புக்கள், இது குறித்து உடன் கவனம் செலுத்துமாறும் கேட்டுக் கொண்டுள்ளன. மேலும், அவ் அறிக்கையில் உணவு, குடிநீர், மருந்துத் தட்டுப்பாடு களுக்கு மத்தியில் இடம் பெயர்வுற்ற 825,000 தமிழ் மக்கள் வாழ்கின்ற அவலநிலையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. போர் தொடர்ந்து கொண்டிருப்பதால் பொதுமக்கள் அநியாயமாகக் கொல்லப்படுதல், ஆயுதப் படையினரால் நடாத்தப்படும் சித்திரவதைகள், காரணமில்லாக் கைதுகள், காலவரையற்ற தடுப்புக் காவல்கள் என்பன தொடர்வதும் விளக்கப்பட்டது. இத்தகைய சூழலில் உடனடியாகத் தமிழ் மக்கள் தங்களது சொந்த அரசியல் தேசிய நிலைகளைத் தெரிவு செய்வதற்கு, தங்களது அரசியல் நிலையைத் தீர்மானிப்பதற்கு உள்ள உரிமையை அங்கீகரிக்கக்கூடிய அரசியல் தீர்வை நாடி நிற்கின்றனர் என்பதையும் பிரகடனப் படுத்தியுள்ளது.

பங்குனி மாதம் 13ஆம் திகதி "சுயநிர்ணய உரிமைக்கான மக்களின் உரிமையும், காலனித் துவ அல்லது அந்நிய மேலாண்மை அல்லது ஆக்கிர மிப்பில் உள்ள மக்களுக்கு அதன் பிரயோகமும்" என்ற தலைப்பில் நிகழ்ச்சி நிரல் இலக்கம் 7இன் கீழ் 10 அரச சார்பற்ற நிறுவனங்கள் தமிழ் மக்கள் "சுயநிர்ணய உரிமை உள்ள மக்கள் எனும் வரைவுக்கு உரியவர்கள்" என்பதை பிரகடனப்படுத்தியதன் தொடர்ச்சியாக இந்த 53 அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டறிக்கை சித்திரை 9ஆம் திகதி, மனித உரிமைகள் அடிப்படைச் சுதந்திரம் என்பன உலகின் எப்பகுதிகளிலும் வன்முறைப்படுத்தப்படுதல் மற்றும் காலனித்துவ மற்றும் தங்கி வாழும் நாடுகள் எல்லைகள் தொடர்பான பிரச்சினைகள் எனும் நிகழ்ச்சி நிரல் இலக்கம் 10இன் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த 53 அரச சார்பற்ற நிறுவனங்களும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவைத் தமிழ் மக்களுக்கு எதிரான எல்லா இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்தி, ஆக்கிரமித்துள்ள தமிழர் தாயகத்திலிருந்து படைகளை விலக்கி, வடக்கு - கிழக்குக்கான பொருளாதாரத் தடைகளை நீக்கி, மனிதாபிமான உதவிகளை அனுமதிக்குமாறு தீர்மானம் மேற்கொள்ளுமாறு வற்புறுத்திக் கேட்டுள்ளன. ✷

# நாங்கள் பாதுகாப்புடன் சுதந்திரத்துடன் ....

நடாத்தப்பட்ட பொழுது முழு குடாநாடுமே இடிமுழக்க அதிர்வு போல் அதிர்ந்தது. நாம் பயத்தினால் நடுநடுங்கியபடி வாழ்ந்தோம். ஐப்பசி 30ஆம் திகதிக்கு மேல் எம்மால் தாக்குப் பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டது. முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினரின் குண்டு வீச்சுக்களால் அச்சுறுத் தப்பட்டு துரத்தப்பட்ட நாம், எங்கள் பாதுகாப்புக் கருதி இடப்பெயர்வு அடைந்தோம். அந்த 30-10-95 இரவில் நானும் 500,000 மக்களில் ஒருவனாக இடம்பெயர்ந்தேன். எங்கள் தேச வரலாற்றின் மிக மோசமான செயல் - எங்கள் மக்களின் 2000 ஆண்டு கால வரலாற்றின் மிக மோசமான செயல் நடந் தேறியது. போர்த் துக்கேயரின், டச்சுக்காரரின், பிரித் தானியர் களின் காலனித்துவ ஆட்சியில் கிட்டத்தட்ட 450 ஆண்டுகள் எம்மால் வாழ முடிந்தது. ஆனால் மனிதாபிமானமே இல்லாத சிறிலங்கா இராணுவத் திடமிருந்து உயிர் தப்பு வதற்காக நாம் இடம் பெயர்ந்தோம்.

## யாழ்பாண நகரம் சிதைக்கப்பட்டது

எங்கள் பழமை வாய்ந்ததும் பெருமைகளுக்கு உரியதுமான யாழ்ப்பாணம் சிறிலங்கா இராணு வத்தால் வரலாற்றுச் சிதைவுக்கு உள்ளாக்கப்பட்டது.

அவர்கள் எங்கள் நகரத்தை கைப்பற்றிவிட்டதாக - வெறுமனே ஒரு அந்நியக் கொடியை மட்டும் ஏற்றவில்லை. மனிதரே இல்லாத வெற்று நகரமாகிவிட்ட யாழ்ப் பாணத்திலும் தலைநகரமான கொழும்பிலும் தமது ஏகாதிபத்திய வெற்றியைக் கொண்டாடி மகிழ்ந்தனர். கொழும்பில் அரச ரீதியான வைபவ கொண்டாட் டத்திற்கு ஜனாதிபதி சந்திரிகாவே தலைமை வகித்தார். அவர்கள் எமது வீடுகளில் 80 வீதமான வற்றை குண்டு வீசி அழித்தனர். இது அரசின் பிரதிநிதிகளால் பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எமது கலாச்சாரச் சொத்தான பொது நூல் நிலையத்தினை எரித்து அழித்தனர். கடைசித் தமிழ் மன்னனான சங்கிலியனின் நினைவுச் சிலை உட்பட பல வரலாற்று நினைவுச் சின்னங்களை உடைத்தெறிந்தனர். எமது கற்பகதரு விருட்சமான பனை, தென்னை மரங்களை ஆயிரக்கணக்கில் வெட்டித் தறித்தனர். போரில் இறந்த தமது எதிர்ப்படை வீரர்களின் அடக்க தலங்களை(மாவீரர் துயிலும் இல்லங்களை) பழிவாங்கும் முகமாக பாரிய இயந்திரங்கள் கொண்டு தகர்த்தனர்.

## இடம்பெயர்ந்தோரை பலவந்தமாக திருப்பினர்

இடம்பெயர்ந்தோரை தம்மால் "கைப்பற்றப்பட்டு சிதைக்கப்பட்ட நகரமான" யாழ்ப்பாணத்துக்கு பலவந்தமாக திருப்பி அனுப்பும் முயற்சியாக 19-04-96 புதிய இராணுவ நடவடிக்கை ஒன்றைத் தொடங்கினர். கிளாலி ஏரியில் நூற்றுக்கணக்கான படகுகளை குண்டு வீசி அழித்து மக்கள் பாதுகாப்புத் தேடி வெளியேறாமல் தடுத்து, இடைவழியில் நின்ற மக்களை மீளவும் யாழ்ப் பாணத்திற்கு போகும்படி இராணுவ அழுத்தங்களை ஏற்படுத்தினர்.

இன்று தினமும் ஊரடங்குச் சட்டத்துக்குள், பலமான இராணுவ நிலை கொள்ளல் மக்களின் சுதந்திர நடமாட்டங்களை ஒடுக்கின்ற நிலையும், அடிக்கடி இடம்பெறும் இளம்பெண்கள், பள்ளி மாணவிகள் மீதான இராணுவத்தினரின் பாலியல் வன்முறைகளும், இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணாமல் போகும் நூற்றுக்கணக்கான இளவயதினருமாக, சிறிலங்கா இராணுவத்தைக் குறிப்பிட்டுச் சொன்னால் ஓர் சிங்கள அந்நிய இராணுவம் எனது தாயக பூமியை ஆக்கிரமித்துள்ளது.

## ஆடி 96இல் காட்டுக்குள் இரண்டாவது இடம்பெயர்வு

அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான குறைந்தபட்ச விநியோகமும் தடுத்து நிறுத்தப்பட்ட பின்னர், 18-7-96இல் சிறிலங்கா அரசால் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. அரச சார்பற்ற நிறுவனங்களுக்குக் கூட நடமாட உத்தரவு மறுக்கப்பட்டது. நிவார ணங்களுக்கான மூலப்பொருட்களும் நடமாட்டமும் இல்லாத நிலையில் தாம் அங்கிருப்பதில் பிரயோசனமோ அர்த்தமோ இல்லை என்ற நிலையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் 25-7-96 அன்று அங்கிருந்து வெளியேறின.

26-07-96 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கையை சிறிலங்கா இராணுவம் ஆரம்பித்து, குண்டு வீச்சுக்களையும் எறிகணை வீச்சுக்களையும் நடாத்திய பொழுது மக்கள் திறந்த காடுகளை நோக்கி தப்புவதற்காக ஓடினர். அரச சார்பற்ற நிறுவனங்களால் எதுவித உதவியையும் வழங்க முடிய வில்லை. தங்குவதற்கு ஒரு கட்டிடம் கூடக் கிடைக்கவில்லை. தண்ணீர் குடிப்பதற்கு ஒரு கிணறு கூட இருக்கவில்லை. ஆயிரக்கணக்கான மக்கள் மரங்களின் கீழ் பட்டினி கிடந்தமைக்கு நானே கண்கண்ட சாட்சியாக இங்கு நிற்கிறேன்.

## 'எடிபல" நடவடிக்கை

பொருளாதாரத் தடைகளினால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வன்னி மக்கள், தமது உதிர உழைப் பினால் பயிரிட்டு நம்பிக்கையுடன் அறுவடை நாளை எதிர்பார்த் திருந்த வேளையில், சிறிலங்கா இராணுவம் தனது முன்நகர்வு நடவடிக்கையாக 'எடிபல' எனக் குறியீடு கொண்ட இராணுவ நடவடிக்கையைத் தொடங்கி, அறுவடைக்கு நெல் விளைந் திருந்த பூமிகளை எல்லாம் அழித்து நாசமாக்கி கிட்டத்தட்ட 15,000 மக்களை நிர்க்கதியாக்கி மடுவைச் சுற்றிய காட்டுக்குள் இடப்பெயர்வு அடைய வைத்தது.

## சிறிலங்காவை விட்டு புலம்பெயர்ந்த தமிழர்கள்

1983ஆம் ஆண்டு பேரழிவுகளை அடுத்து சிறிலங்காவிலிருந்து வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்து வாழும் 800,000 தமிழ் மக்கள் குறித்து மதிப்புக்குரிய தலைவர் அவர்களே உங்கள் கவனத்தைத் திருப்ப விரும்புகிறேன். இந்தத் தமிழர்களின் இடப்பெயர்வும் பரவலும் உயிர்கள் பறிக்கப்படும் பயங்கரச் சூழலிருந்து தப்பு வதற்குத் தமது சொத்துக்களை எல்லாம் விற்றாவது தமது தாய்நாட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்பதினாலேயே ஏற்பட்டன. பணம் பறிப்பதையே நோக்காகக் கொண்ட கள்ளக் கடத்தல்காரர்களிடம் இழந்துள் ளனர். இவர்கள் நண்பர்கள், உறவினர்களை இழந்துள்ளனர். அந்நிய - நட்புத் தன்மையற்ற அரசுகளிடம் அகப்பட்டு பலர் மனிதாபிமானமற்ற முறையில் சிறையிலடைக்கப்பட்டனர். அந்நிய உலகை அந்நியச் சூழ்நிலையில் அனுபவிக்கின்றனர்.

சிறிலங்கா இராணுவத்தின் கொடுமைகளிலிருந்து தப்பு வதற்கு முயற்சிக்கையில் ஆயிரக் கணக்கானவர்கள் கொல்லப்பட்ட நினைவுகள் மனதுக்கு மேலும் வேதனை அளிக்கிறது. ஆயிரக் கணக்கானவர்கள் தாயகத்தில் அமைதி ஏற்பட்டு எப்போது அங்கே திரும்புவோமென ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

## எங்களது கோரிக்கை

தாங்கொணாத துன்பங்கள், உயிரிழப்புக்கள், அழிவுகள், இடப்பெயர்ச்சிகள் இவைதான் "சமாதானத்திற்கான போர்" என்ற பெயரில் மூடிய கதவுகளுக்குள் நடாத்தப்படுகின்றன. இது குறித்து சர்வதேச நாடுகள் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டுமென கேட்கின்றோம். இதனால் பின்வரும் கோரிக்கைகளை உறுதியான மனதுடன் ஆணைக்குழுவிடம் முன்வைக்க விரும்புகிறேன்.

-சிறிலங்கா, போர்ச் சட்டங்களை மீறுவதின் நேரடி விளைவே பாரிய இடப்பெயர்வுகள்

-இந்தப் போரைக் கண்டித்து இந்தப் போருக்கான சகல சர்வதேச உதவிகளையும் நிறுத்துக!

-மெதுவாக மெதுவாக சாகடிக்கப்படும் எமது மக்க ளைக் காப்பாற்ற உண்மை கண்டறியும் குழுவினை வடக்கு-கிழக்குக்கு உடன் அனுப்புக!

-சிறிலங்காவை, தமிழர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக் கைகளை நிறுத்துமாறு அழுத்தங்களை பிரயோகித்து, ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளரின் உதவியுடன் பேச்சுவார்த்தைக்கான சூழலை உருவாக்குக!

தமிழாக்கம்: சூ. பற்றிமாகரன்

# வன்னிப் பகுதி மீது ...

தரைப்பாதையைத் திறத்தல் என்ற போலிக் காரணத்துடன் இந்தப் புதிய இராணுவ ஆக்கிரமிப்பு ஆரம்பமாகலாம் என எதிர்பார்க் கப்படுகிறது.

இதேவேளை, சிறிலங்கா விமானப் படைக்கு மேலும் பல போர் விமானங்கள் கொள்வனவு செய்வ தற்கான முயற்சிகளில் சிறிலங்கா இறங்கியுள்ளது. கடற்படைக்கென அதிவேக தாக்குதல் படகுகள், துருப்புக் காவிகள், நவீன ஆயுதங்கள் பொருத்தப்பட்ட சண்டைக் கப்பல்கள் வாங்கப்பட இருப்பதாகவும் இதன்மூலம் கடற்படையின் பலத்தை மும்ம டங்காகப் பெருக்கி தமிழீழ விடுதலைப் புலிகளின் மூலபலமாக உள்ள கடற்புலிகளை எதிர்கொள் ளலாம் என கடற்படை அதிகாரி ஒருவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் விமானப் படைக்கு புதிய விமானங்களை கொள்வனவு செய்யவென சிறிலங்கா பாதுகாப்புத் துறை அதிகாரிகள் அமெரிக் காவுக்கு பயணமாகியுள்ளனர். அமெரிக்க நிறுவனம் ஒன்றிட மிருந்து உளவு விமானங்களையும் ஆசிய நாடு ஒன்றிடமிருந்து எம்.ஐ.24 ரக தாக்குதல் உலங்கு வானூர்திகளையும் கொள்வனவு செய்ய சிறிலங்கா முயன்று வருகிறது.

இதற்கிடையில் சந்திரிகா யாழ். நூலகத்தைப் புனரமைக்க நிதி கொடுக்கும்படி வேண்டுகோள் விடுப்பதும், கதிர்காமர் "சிங்கள வர்கள் இனவாதிகளாக ஒருபொழு தும் இருந்ததில்லை" என சத்தியப் பிரமாணம் செய்வதும், தொடங்க முயலும் பாரிய இராணுவ நடவடிக்கையை சிங்கள பௌத்த பேரினவாத நடவடிக்கை அல்ல என உலகுக்கு எடுத்துக் காட்டும் தந்திர முயற்சிகளாக அவதானிகள் கருதுகின்றனர்.

ஆயினும், சிறிலங்கா இத்தகைய பாரிய நடவடிக்கைகளைத் தொடங்கினால் அது "தற்கொ லைக்கு ஒப்பான செயலாக" அமைந்துவிடும் என விடுதலைப் புலிகளின் பலத்தையும் கள நிலவரங்களையும் நன்கறிந்தவர்கள் சிறிலங்காவை எச்சரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

மேலும், புதிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுகையில் ஏற்படக்கூடிய எதிர்விளைவுகளுக்கு முன்னேற்பாடாக கொழும்பு நகரும் அதன் சுற்றுப்புறங்களும் மேலும் பலப்படுத்தப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ✷

# தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் பாரம்பரிய தாயகமும் தன்னாட்சி உரிமையும் எமக்குண்டு

- அன்ரன் ராஜா

*13-04-97 அன்று அவுஸ்திரேலிய தேசிய வானொலியான SBS இன் விசேட ஒலிபரப்புச் சேவையின் தமிழ் நிகழ்ச்சி அறிவிப்பாளர் திரு. ஜோய் மகேஸ் அவர்கள், தேசிய இனப்பிரச்சினையில் சிறிலங்காவின் இரு பிர-தான அரசியல் கட்சிகளும் பொது அணுகு முறையினைக் கடைப்பிடிக்க வேண்டுமென பிரித்தானிய அரசு அண்மையில் எடுத்த முயற்சி தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்வி களுக்கு, விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பேச்சாளர் திரு. அன்ரன் ராஜா அவர்கள் அளித்த பதில்கள் வருமாறு:*

**கேள்வி:** அண்மையில் பிரித்தானிய அரசு, சிறிலங்காவின் இரு பிரதான அரசியல் கட்சிகளுடனும் பேசி அவர்களுக் கிடையே புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் பட்சத்தில் கருத்து வேறுபாடின்றி ஒற்றுமையைக் கடைப்பிடிக்க இணக்கமொன்றை ஏற்படுத்தியுள்ளது. இதைத் தொடர்ந்து புலிகளுடன் பேச்சுவார்த்தை ஏற்படும் சாத்தியக்கூறுகள் தென்படுவதாகப் பல மட்டங்களிலும் செய்திகள் பரவுகின்றன. இவ் விடயத்தில் விடுதலைப் புலிகளின் தற்போதைய நிலைப்பாடு என்ன?

**பதில்:** இரு பேரினவாதக் கட்சிகளும் தேசிய இனப்பிரச் சினையில் பொது அணுகுமுறையினைக் கடைப்பிடிப்பது தொடர்பாக ஏற்பட்ட உடன்பாடு பல்வேறு வதந்திகளைக் கிளப்பிவிட்டுள்ளது.

உண்மையில் இவ் உடன்பாடு, பொது அணுகுமுறை தொடர்பானது எனக் கூறப்படினும், இதனை தேசிய இன ப்பிரச்சினை தொடர்பாக, இரு கட்சிகளும் ஒரு பொது வேலைத் திட்டத்தில் இணைந்து செயற்பட உடன்பட் டுள்ளன என்றோ அல்லது ஒரே தீர்வுத் திட்டத்திற்கு உடன்பட்டுக் கொண்டுவிட்டன என்றோ, அர்த்தப்படுத்திக் கொள்ள முடியாது. இவ் இரு கட்சிகளும் தமக்கிடையே ஏற்பட்டுள்ள உடன்பாட்டைத் தொடர்ந்து கடைப்பிடி ப்பார்களா என்பதனை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## தேசிய இனப் பிரச்சினையின் வளர்ச்சிக்கு சிங்கள பௌத்த பேரினவாத ஒடுக்கு முறையே காரணம்

பேச்சுவார்த்தை தொடர்பாக, விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு தெளிவானது. 1996 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி தேசியத் தலைவர் தமது மாவீரர் நாள் செய்தியில் இதனைத் தெளிவாக வெளிப்படுத் திவிட்டார். அதாவது,

அ. விடுதலைப் புலிகள் இயக்கம், தேசிய இனப்பிரச்சினைக்கு சமாதான முயற்சிகளில் தீர்வு காணப்படுவதற்கு எதிரானது அல்ல.

ஆ. சிறிலங்காவின் அரசுகள், தமிழ் மக்களுக்கு தொடர்ச்சியாகத் துரோகம் இழைத்து வந்தமையால், சர்வதேச மத்தியஸ்துவத்தினை புலிகள் இயக்கம் வலியு றுத்தி வந்திருக்கின்றது.

இ. இராணுவ அழுத்தங்களின் மத்தியில், இடம்பெறும் பேச்சுக்கள், நீதியானதாகவும் சமத்துவமானதாகவும் இருக்க முடியாது.

ஈ. இராணுவ அழுத்தம் நீங்கிய சூழலில், பேச்சுக்கள் நடைபெறவும், மக்கள் பாதுகாப்பு உறுதிப்படவும் எந்த ஒரு அரசியல் ரீதியான பேச்சுவார்த்தைகளுக்கும் முன்நிகழ்வுகளாக நெருக்கடி நிலையினைத் தணித்தல், படைகளை விலக்கல், அமைதி நிலையினை ஏற்படுத்தல் போன்றவை இடம்பெற வேண்டும்.

உ. நெருக்கடி நிலையினைத் தணித்து, படைகளை விலக்கி, அமைதியினை ஏற்படுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தைக்கு, புலிகள் இயக்கம் தயாராக இருக கின்றது.

ஊ. எந்த ஒரு நிபந்தனையுடனான பேச்சுவார்த்தை களையும் எக்காரணத்திற்காகவும் விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளாது.

எ. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இந் நியாயமான நிலைப்பாட்டை சிறிலங்கா அரசு ஏற்றுக் கொள்ளும் என எதிர்பார்ப்பதற்கில்லை.

இதுவே பேச்சுவார்த்தை தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு. தலைவர் கூறியதுபோல இந் நியா யமான நிலைப்பாட்டை, சிறிலங்கா அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. பேச்சுவார்த்தை நடைபெறுவதானால் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் போன்ற நிபந்த னைகளை விதிக்கின்றது. சர்வதேச மத்தியஸ்துவத்தை நிராகரிக்கின்றது. நெருக்கடிகளைத் தணிக்கும் முயற்சிக்குப் பதிலாக பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு, இராணுவ ஆக்கிரமிப்புக் கொள்கை யினைத் தீவிரமாக அமுல்படுத்த முனைகின்றது. தற்போதும் குடாநாட்டிற்கான தரைவழிப் பாதையினைத் திறப்பதாகக் கூறிக்கொண்டு பாரிய இராணுவ நடவடிக் கைக்கான தீவிர ஆயத்தங்களைச் செய்து வருகின்றது. இத்தகைய நிலையில், பேச்சுவார்த்தைக்கான உகந்த சூழல் நிலவுவதாக நாம் கருதவில்லை. பேச்சுவார்த் தைகள் தொடர்பான போலி நம்பிக்கையில் சிக்கிக் கொள்ளாது, மக்கள் விழிப்பாக இருத்தல் வேண்டும்.

**கேள்வி:** சிறிலங்காவின் இரு பிரதான கட்சிகளுக்கிடையே ஒற்றுமை ஏற்படுத்துவதால் தமிழ் மக்களுக்கு இலாபங்கள் ஏதாவது உள்ளனவா?

**பதில்:** சிறிலங்காவின் இரு பிரதான கட்சிகளும், ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். அதாவது, சிங்கள பௌத்த பேரினவாதம் எனும் குட்டையில் ஊறிய மட்டைகள். இலங்கைத் தீவில், சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை நிலை நிறுத்தி வைப்பதே இக் கட்சிகளின் நோக்கமாக இருந்திருக்கின்றது. இவ் இரு கட்சிகளும், தமிழ் மக்களின் உரிமைகளைப் போட்டி போட்டுக் கொண்டு பறித்து வந்த வரலாற்றைக் கொண் டவை. இதனால் இக் கட்சிகளுக்கிடையில் ஏற்படக்கூடிய ஒற்றுமை, தமிழ் மக்களை மேலும் அடிமைப்படுத்தி, சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை உறுதியாக நிலை நிறுத்துவதற்குத்தான் உதவ முடியுமே தவிர, தமிழ் மக்களுக்கு உதவுமென எதிர்பார்க்க முடியாது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உக்கிரத்திற்கு முன், சிங்கள பௌத்த பேரினவாதத்தால் சமாளிக்க முடியாமல் போகும் போது, தாம் ஒன்றுபட்டாயினும் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை நிலைநிறுத்தவே இக் கட்சிகள் முயலக்கூடும்.

**கேள்வி:** பிரித்தானிய அரசு தற்போதோ அல்லது கடந்த காலத்திலோ புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கு மிடை யிலான பேச்சுவார்த்தைகளில் தாம் ஈடுபடத் தயாராக இருப்பதாக புலிகளுக்கோ அல்லது பொதுவாகவோ அழைப்பு விடுத்துள்ளார்களா?

**பதில்:** சிறிலங்கா அரசுடனான பேச்சுவார்த்தை தொடர்பாக, பிரித்தானிய அரசு எம்முடன் நேரடியாகப் பேசவில்லை எனினும், பிரித்தானிய வெளிநாட்டமைச்சர், இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையின் தீர்விற்கு, சிறிலங்கா அரசி ற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையே மத்தியஸ்துவம் வகிக்கத் தயாராக இருப்பதாக, கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் பொதுவாகப் பகிரங்கமாக அறிவித்திருந்தார். அந்த அழைப்பினைச் சிறிலங்கா அரசு நிராகரித்துவிட்டது.

## சிங்கள பௌத்த பேரினவாதத்தினை தோற்கடிப்பதன் மூலமே போரை முடிவுக்குக் கொண்டுவர முடியும்

**கேள்வி:** சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், புலிகள் கணிசமான ஆயுத ஒப்ப டைப்பைச் செய்யும் பட்சத்திலேயே பேச்சுவார்த்தை களுக்கு இடமுண்டு என்று மீண்டும் கூறியுள்ளார். இக் கூற்று பற்றிய விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன, பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு விடுதலைப் புலிக ளும் ஏதாவது முன் நிபந்தனைகளை வைத்துள்ளனரா?

**பதில்:** அ. தமிழ் மக்களின் முன்னணிப் படையான விடுதலைப் புலிகளின் கைகளில் உள்ள ஆயுதங்கள் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு அடிப்படையானவை. தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளின் பாதுகாப்புக்குக் கவசமாக விளங்குபவையும் இவ் ஆயுதங்கள்தான். இதனால் எந்த ஒரு சூழலிலும் ஆயுதங்களைக் கீழே போடுதல், ஆயுதங்களை ஒப்படைத்தல் என்ற பேச்சுக்கே இடமிருக்காது.

ஆ. விடுதலைப் புலிகள், பேச்சுவார்த்தையின் ஒழுங் கமைப்புத் தொடர்பாக வலியுறுத்துகிறார்களே அன்றி, பேச்சுவார்த்தைகளுக்கு முன்நிபந்தனை விதிக்கவில்லை. நான் முன்னர் குறிப்பிட்டவாறு அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் படைகளை விலக்கி, இயல்பு நிலையினை ஏற்படுத் துவது தொடர்பான விடயங்களில் உடன்பாடு காணப்பட வேண்டும் என்பதே புலிகளின் நிலைப்பாடு. இவை அரசியல் தீர்வு குறித்த பேச்சுவார்த்தைக்கு முன்நிபந்த னையாக இடம்பெற வேண்டும்.

படைகளை விலக்கி, இயல்புநிலையை ஏற்படுத்துவது தொடர்பான பேச்சுக்கள், சிறிலங்கா அரசுக்கும், எமக்குமிடையேயான இரு தரப்பு பேச்சுவார்த்தையாக இருக்கும் அதேவேளை, பேச்சுக்கள் சுமூகமாக நடை-பெற மூன்றாம் தரப்பு மத்தியஸ்துவத்தின் தேவையை நாம் வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

**கேள்வி:** மக்களிடையே போர் தொடர்ந்து கொண்டே போகிறது என்ற ஓர் அங்கலாய்ப்புத் தெரிகின்றது. இப் போரை முடிப்பதற்குப் புலிகள் தற்போது என்ன முயற் சிகளை எடுத்து வருகிறார்கள்?

**பதில்:** இப் போர் மூலம் எமது மக்கள் மீது சொல் லொணாத் துயரங்கள் சுமத்தப்படுகிறது என்பதனை நாம் அறிவோம். அதேவேளை, இப் போருக்கும் இப் போரினால் மக்கள் மீது சுமத்தப்படும் போர்ச் சுமைகளுக்கும் காரணம் சிறிலங்கா அரசே என்பதனை எமது மக்கள் அறிவார்கள். போர்ச் சுமை ஏற்படுத்தும் தாக்கத்தினால் கௌரவமான ஒரு அரசியல் தீர்வு விரை வில் கிடைப்பதினை மக்கள் விரும்புவது இயல் பானதுதான். தமிழ் மக்களின் ஏகோபித்த அரசியல் கோரிக்கையான, தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதனையும் எமக்குப் பாரம்பரிய தாயகமும், தன்னாட்சி உரிமையும் உண்டு என்பதனையும் அங்கீகரித்து அரசி யல் ரீதியான பேச்சுவார்த்தைகளின் ஊடாக தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு எந்த ஒரு சிங்கள அரசுகளும் தயாராக இல்லை. நாம் எமது நியா யமான உரிமைகளைக் கோரும் போதெல்லாம் இராணுவ அடக்குமுறையினையே சிங்கள அரசுகள் எமது மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டு வந்துள்ளன. புலிகள் இயக்கத்தின் பிறப்பின் முன்னரே, சிங்கள அரசுகளின் இராணுவ ஆக்கிரமிப்புக் கொள்கை எமது மக்களைக் கொடுமைப்படுத்தத் தொடங்கிவிட்டது.

தேசிய இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு எடுக்கப்பட்ட சகல முயற்சிகளிலும் சிங்கள அரசுகள் ஏமாற்றத்தனத்துடனேயே நடந்து வந்துள்ளன. சிறிலங்காவின் அரச கட்டமைப்பில் சிங்கள பௌத்த பேரினவாதம் பரவிப் புரையோடிப் போயிருப்பதனால்தான் தமிழ் மக்களின் நியாயமான நிலைப்பாடுகள் சிங்கள அரசுகளினால் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளன. இந்தச் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் ஒடுக்குமுறை குணாம் சத்தினாலேயேதான் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை வரலாற்றுப் பூர்வமாக வளர்ச்சியடைந்தும் வந்திருக் கின்றது.

சிங்கள அரசுகளின் நீண்ட கால ஒடுக்குமுறைக்கு முகங்கொடுத்தபோதும் தமிழ் மக்கள் சிங்கள அரசுகள் எதிர்பார்த்தவாறு சிங்கள பௌத்த பேரினவாதத்திடம் சரணடைந்துவிடவில்லை. தொடர்ச்சியான போராட்ட த்தின் ஊடாக, சிங்கள பௌத்த பேரினவாதம் ஆட்டங் காணத் தொடங்கியிருக்கும் இன்றைய சூழலில், உறுதி தளராது தன்னம்பிக்கையுடன் போராடுவதன் ஊடாக சிங்கள பௌத்த பேரினவாதத்தினை தோற்கடிப்பதே, இப் போர் நியாயமான முறையில் முடிவுக்கு வருவதற்கான வழிமுறையாக இருக்க முடியும்.

# தமிழீழ விடுதலைப் போர் விடுதலைப் புலிகளின் "ஓயாத அலைகள்"

**Why the LTTE did not confront "Operation Edibala"?**

They relay did not face us in "Operation Edibala". I feel they were completely surprised and were not prepared to take us on.

**On the army's success?**

"Operation Edibala"'s our third major operation after Riviresa and Sathjaya.

Operation Riviresa was a great success. So was Operation Sathjaya. They were meticulously planned operations that were executed well. We achieved the elements of both surprise and speed.

**The impact of military operation on the LTTE?**

Firstly, the LTTE Has lost important ground in strategic areas. Secondly it has lost the people whom it was making use of, mainly by force, to maintain its terrorist organization financially as well as to recruit carders to its ranks.

**On whether the LTTE is weakened?**

Wherever it the LTTE put up a fight it lost its treained, experienced cadres and middle rung leadership. You can very clearly say it is weakened. It tried to attack the Paranthan defences. It was beaten back. It had abandoned the operation. It is definitely not strong as before........

**"எடிபல இராணுவ நடவடிக்கை"யின் போது விடுதலைப் புலிகள் ஏன் இராணுவத்தை எதிர்கொள்ளவில்லை?**

"எடிபல இராணுவ நடவடிக்கை"யின் போது அவர்கள் உண்மையில் எங்களை எதிர் கொள்ளவில்லை. நான் நினைக்கிறேன், அவர்கள் முற்றாக ஆச்சரியப்பட்டுப்போனார்கள். அதனால் அவர்கள் எங்களோடு மோதத் தயாராயிருக்கவில்லை.

### இராணுவத்தின் வெற்றி பற்றி ?

"எடிபல இராணுவ நடவடிக்கை" ரிவிரச, சத்ஜய இராணுவ நடவடிக் கைகளுக்கு அடுத்த மூன்றாவது பெரிய இராணுவ நடவடிக்கைஆகும். ரிவிரச இராணுவ நடவடிக்கை பெரிய வெற்றியை ஈட்டியது. சத்ஜய இராணுவ நடவடிக்கையும் அவ்வாறானதே. இவைகள் மிக நுட்பமாகத் திட்டமிட்டு நிறைவேற்றப்பட்ட நடவடிக்கைகளாகும். நாங்கள் ஆச்சரியம் வேகம் இவற்றைப் பெற்றிருந்தோம்.

### விடுதலைப் புலிகள் மீது இந்த இராணுவ நடவடிக்கைகளின் தாக்கங்கள்?

முதலாவது, விடுதலைப் புலிகள் முக்கிய கேந்திரப் பிரதேசத்தை இழந்து விட்டார்கள். இரண்டாவது, அவர்கள் தங்களது பயங்கரவாத இயக்கத்தை பணம் மூலம் பராமரிக்கவும், இயக்கத்துக்கு ஆள் சேர்க்கவும் தங்கள் பிடியில் வைத்திருந்த, பெரும்பாலும் பலோத்காரமாக மக்களை இழந்து விட்டார்கள்.

### விடுதலைப் புலிகள் பலவீனப் பட்டுப் போனார்களா?

விடுதலைப் புலிகள் எங்கெல்லாம் எதிர்கொண்டு சண்டை பிடித்தார்களோ அங்கெல்லாம் தங்களது பயிற்றப்பட்ட, அனுபவசாலிகளான போராளிகளையும் நடுமட்டத் தலைவர்களையும் இழந்து விட்டார்கள் என்பதைத் தெளிவாகச் சொல்லலாம்.

மட்டக்களப்பு இராணுவத் தலைமையகம் இவற்றின்மீது 06-03-97இல் பாரிய அதிரடித் தாக்குதல்களை மேற்கொண் டார்கள்.

அதாவது, தளுவத்தையின் செவ்வி வெளியான பத்திரிகையின் மை காய்வதற்கு முன்பாகவே, விடுதலைப் புலிகளது பெருந்தாக்குதல்கள் சிறிலங்கா இராணுவத்திற்கு எதிராக முடுக்கி விடப்பட்டன.

மிகவும் பாதுகாப்பான விமானத்தளமான சீனன்குடா விமானத்தளத்தை ஊடுருவிய விடுதலைப்புலிகள் அங்கிருந்த விமானக் கோபுரம், இராணுவக் கட்டுப்பாட்டு நிலையம், ராடர் நிலையம் இவற்றை ரொக்கட் மற்றும் மோட்டார் குண்டுத் தாக்குதல்களினால் சேதமாக்கினார்கள். விமான ஓடுதளமும் மோட்டார் குண்டுத்தாக்குதலினால் பெரும் சேதத்திற்குள்ளாகியது. ஒரு 'வை-12' சீன தயாரிப்பு விமானம் முற்றாகத் தகர்க்கப்பட்டது. எம்.ஐ.17 ரக குண்டுவீச்சுத் தும்பியும் சேத மாக்கப்பட்டது.

இது போலவே வவுணதீவு, வலையிறவு இராணுவ முகாம்களும் முற்றாக ஊடுருவப்பட்டன.

பெருந்தொகையான ஆயுதங்களும் இராணுவத் தளபாடங்களும் விடுதலைப் புலிகளினால் அள்ளிச் செல்லப்பட்டன.

எம்.ஐ ரக குண்டுவீச்சு தும்பியில் வானத்தில் இருந்து கொண்டு, முகாமை விடுதலைப்புலிகளின் கைகளில் விழாமல் காப்பாற்றுமாறு சிங்கள இராணுவச் சிப்பாய்களை இராணுவத் தளபதி கெஞ்சிக் கேட்டும் அது பயனில்லாமல் போயிற்று.

முகாம் தாக்கப்படும் வேளையில் மட்டக்களப்பிலிருந்து மேலதிக படையினர் உதவிக்கு வரவதைத் தடுப்பதற்காக வலையிறவுப் பாலத்தை விடுதலைப்புலிகள் குண்டுவைத்துத் தகர்த்தார்கள்.

அது மட்டுமன்றி, இராணுவத்தினரைத் தடுமாற வைப்பதற்காக மட்டக்களப்பு வாடிவீடு, வெபர் விளையாட்டுத் திடல் ஆகிய பகுதிகளைச் சுற்றிவளைத்து அமைக்கப்பட்டுள்ள இராணுவத் தலைமையகம் மீது எருமைத் தீவிலிருந்து 122 மி.மீற்றர் நீண்டதூர வீச்சுக்கொண்ட பீரங்கிகளினால் விடுதலைப் புலிகள் குண்டுகளைப் பொழிந்து தள்ளினார்கள்.

இந்தத் தாக்குதலில் இராணுவம் தங்கியிருந்த கட்டிடங்கள் சேதமடைந்தன. மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டு பதினாறுபேர் காயமடைந்தார்கள். விடுதலைப்புலிகள் 122 மி.மீற்றர் பீரங்கிகளைப் பாவித்திருப்பது இது மூன்றாவது முறையாகும்.

பரந்தன் - ஆனையிறவு இராணுவ முகாம்கள் தாக்கப்பட்டபோது, இந்த ரக பீரங்கிகளை முதன்முறையாகப் பாவித் தார்கள்.

அதன்பின் வவுனியாமீது நடத்தப்பட்ட தாக்குதலில், இந்த ரகப் பீரங்கிகள் பயன்படுத்தப்பட்டன.

இப்போது மூன்றாவது முறையாக விடுதலைப்புலிகள் இந்தரகப் பீரங்கிகளைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

எருமைதீவு மட்டக்களப்பிலிருந்து ஆறு மைல் தூரத்தில் உள்ளது. அப்படி இருந்தும் அங்கிருந்து விடுதலைப் புலிகள் ஏவிய குண்டுகள் குறி தப்பாது மட்டக்களப்பு இராணுவத் தலைமை யகத்தைக் கச்சிதமாகப் பதம்பார்த் துள்ளது.

முன்னர் தடியைக்கொடுத்து அடியை வாங்கிக் கொள்ளும் பழமொழியைப் பற்றித்தான் கேள்விப்பட்டிருக்கிறோம்.

இப்போது பீரங்கியைக் கொடுத்து, குண்டடி வாங்குகிற புதுமொழியைச், சொல்லவேண்டியுள்ளது.

இந்த 122 மி.மீற்றர் பீரங்கிகள் முல்லைத்தீவுப் பெருஞ்சமரில் கைப்பற்றப்பட்டதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

"முல்லைப் பெருஞ்சமர்" நேரடிக் காட்சியைப் பார்த்தவர்கள் இந்த ரக 122 மி.மீட்டர் பீரங்கிகளை விடுதலைப் புலிகள் கைப்பற்றிச் செல்வதைக் கவனிக்கத் தவறியிருக்கமாட்டார்கள்.

விடுதலைப் புலிகளைப் பலவீனப் படுத்திவிட்டோம், இனி அவர்களால் எழுந்து நடக்கவே முடியாது என்று இராணுவத் தளபதி றோகான் தளுவத்த போன்றவர்கள் பிதற்றிக் கொள்வது இது முதற்தடவையல்ல.

இதற்கு முன்னரும் அப்படிக் கூறியவர்கள் இருக்கிறார்கள்.

துணைப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த அவர்களில் ஒருவராவர்.

அப்படி அவர் சொல்லி வாய்மூடும் முன்னரே, முல்லைத்தீவு இராணுவத்தளம் விடுதலைப்புலிகளால் நிர்மூல மாக்கப்பட்டது.

அங்கிருந்த சுமார் 1400 சிங்களச் சிப்பாய்கள் நேரே எமலோகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

அவர்களைக் காப்பாற்ற வந்த விசேட அதிரடிப்படையணிக்கும் அதே கதிதான்.

தொடர்ச்சி 14 ம் பக்கம்...

செச்சினியாவிலிருந்து உருசியப் படையை, எரித்திரியாவிலிருந்து எத்தியோப்பியப் படையை அந்நாட்டுப் புரட்சிப் படைகள் நல்ல பாடம் படிப்பித்து விரட்டியடித்துத் துரத்தியது போல, சிங்களக் காட்டுமிராண்டிப் படையையும் எங்கள் தமிழீழ தாயகப் பூமியிலிருந்து, எங்கள் அப்புவும் ஆச்சியும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் மகிழ்ந்து குலாவியிருந்த மண்ணிலிருந்து, நாங்கள் கண்ணாம் பூச்சி விளையாடித் திரிந்த பூமியிலிருந்து விரட்டும் வரை, சாவுக்கு ஓலை அனுப்பிவிட்டு சிரித்த முகத்துடன் செங்களம் ஆடிவரும் புலிப்படை ஓயப்போவதில்லை. ஏனெனில் தமிழீழ விடுதலைப்போர், விடுதலைப்புலிகளின் ஓயாத அலைகள்.

இந்தக் கேள்வியைக் கேட்டவர், 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் கட்டுரையாளர் இக்பால் அத்தாஸ். கேள்விகளுக்கான பதிலை முத்துக்களாக உதிர்த்திருப்பவர், சிறிலங்கா இராணுவத்தின் தளபதி லெப். ஜெனரல் றோகான் தளுவத்த. இந்தச் செவ்வி 02-03-97 திகதியிட்ட சண்டே ரைம்சில் வெளியாகியிருந்தது.

இந்தக் கட்டுரையாளர் இக்பால் அத்தாஸ் பற்றி ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். **Situation Report** என்று தலைப்பிட்ட இராணுவ சம்பந்தமான ஆய்வுக் கட்டுரையை வாராவாரம் எழுதுபவர். மூச்சுக்கு மூச்சு முன்னூறு தரம், விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்று திட்டித் தீர்ப்பவர். விடுதலைப்

**- நக்கீரன் -**

புலிகளை எப்படி ஒழித்துக்கட்டலாம் என்று சந்திரிகா அரசுக்கு இலவச ஆலோசனை வழங்குபவர். இவர் மட்டுமல்ல சண்டை லீடர், த ஐலண்ட் போன்ற கொழும்புப் பத்திரிகைளில் ஆய்வுக் கட்டுரைகள், விமர்சனக் கட்டுரைகள் தீட்டும் கட்டுரையாளர்களும் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று திட்டித்தீர்ப்பதையே தங்கள் முழுநேரத் தொழிலாகக்கொண்டு இருக்கிறார்கள். அந்தப் பத்திரிகை ஆசிரியர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. அவர்களுக்கும் அதே தொழில்தான். இனி றோகான் தளுவத்தையின் செவ்விக்கு வருவோம்.

றோகான் தளுவத்தையின் செவ்வி வந்த திகதி 02-03-97. விடுதலைப்புலிகள் சமகாலத்தில் சிறிலங்காவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சீனன் குடா விமான நிலையம், வவுணதீவு, வலையிறவு இராணுவ முகாம்கள்,

## சந்திரிகா அம்மையாரே!

# தங்கள் தீர்வுப்பொதி அரக்கத்தனமான ஷெல்! தங்களின் உரை குண்டைவிடக் கொடியது!

**தமிழ் மக்களுக்குப் பரிவு காட்டும் வகையில் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகாவினால் தினகரன் பத்திரிகையில் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு. தன்மானத் தமிழர்கள் அளித்த யதார்த்தமான விளக்கமே இது.**

**தமிழ் மக்களின் பேரில் மிகுந்த பரிவோடு தாங்கள் விடுத்திருந்த வேண்டுகோளை 05.01.97 திகதிய தினகரன் பத்திரிகையில் கண்ணுற்றோம். தங்கள் உரையின் ஒவ்வொரு சொல் லுங்கூட தமிழ்க்குலம் செத்துக் கொண்டிருப்பதை எண்ணி கண்ணீர் வடிப்பதைப் பார்க்கும்போது, "ஆடு நனைகின்றதென்று அழுது புலம்பும் ஓநாய்" கதைதான் எமக்கு ஞாபகத்திற்கு வருகின்றது.**

### சிங்கள தமிழர் சமாதானமும் ஒத்துழைப்பும்......

**"எமது நாட்டில் வாழும் இனங்கள் நீண்டகாலமாகச் சமாதானத்துடனும் ஒத்துழைப்புடனும் வாழ்ந்தன என்பது**



**நாடறிந்த உண்மையாகும்"** எனப் பரந்த மனத்தோடு கூறியுள்ளீர்கள். நீண்ட காலம் என்பது, மகாவம்ச விசயன் காலத்துக்கு முன்னரா? பின்னரா? என்பதில் எமக்குப் பெருத்த ஐயம் முளைக்கிறது. தமிழன் இரத்தத்தைக் குடித்து 'கர்ப்பகால அவா' வைத் தீர்த்துக்கொண்ட விகாரமகாதேவி கதைகள் மூலமாக இனவாத நஞ்சை மகாவம்சம் கக்கிக் கொண்டிருப்பதை உலகறியும். வர்லாற்றுக் காலத்திலிருந்தே பிக்குகளும், ஆட்சியாளரும், பௌத்த சிங்கள இதிகாசங்களும், தமிழர்தம் உயிர் வேரை அறுப்பதிலேயே குறிப்பாக இருப்பதை நாங்களும் அறிவோம். அப்படியானால், மேன்மை தங்கிய தங்களின் கருத்திலே 'நீண்டகாலம்' என்பது பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலம் என்று பொருள்படக்கூடுமோ? அப்படிப் பொருள்கொள்வதெனில், ரிவிரசக்களும், சத்ஜயக்களும், கிபீர்– புக்காராக் குண்டுமழையும் விவிலிய காலத்துக்குப் பின்னே தமிழீழத்தில் நடந்த, நடக்கின்ற மாபெரும் 'புலப்பெயர்வுகளும், சமாதானம் ஒத்துழைப்பு என்பதிலே தங்களுக்குள்ள காதலாலேதான் நிகழ்வதாகக் கொள்ள வேண்டும்.

### சிங்களப் பேரினவாதம்

**"சிங்கள, தமிழ் மக்களுக்கிடையே குறுகிய இனவாதம் இருக்க வில்லையென்பதை எமது அனுபவத்தின் மூலம் கூற முடியும்"** என்ற தங்களின் கூற்றானது வரலாற்றின் மீதான தங்களின் அறிவும், அனுபவமும் பற்றிய ஐயத்தைக் கிளப்புவதாக உள்ளது.

தமிழ்ப் படையெடுப்புக்களிலிருந்து தம்மைக் காத்துக் கொள்வதற்காகக் காலம் காலமாகச் சிங்கள மக்கள் செய்த விடுதலைப் போராட்டம்தான், 'சிங்கள தேசிய உருவாக்கத்துக்குக் காரண மென்று நிறுவமுயலும் சிங்களப் புத்திஜீவிகளும் தமிழர்களும், கடலும் நெருக்குவதால் கால்நீட்டி உறங்க முடியவில்லையென்று பேசும் மகாவம்சத் துட்டகைமுனுவும், அவனைத் தேசிய வீரனென்று அறிமுகப் படுத்தி, அவன் வழியிலே தேசத்தைக் காக்கவாரீர் என்று மாணவர்களுக்கு இனவாத அழைப்பு விடும் பாடசாலை வரலாற்றுப் பொத்தகங்களும், 15–ம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் தமிழன் வடகிழக்கிலே வாழத் தொடங்கினான் என்று வரலாற்றைப் புரட்டும் சிங்கள மேதாவிகளும்தான், சிங்கள மக்களிடை யேயுள்ள பரந்த பொதுமையுணர்வின் குறியீடுகளென்று தங்களின் சொந்தப் பட்டறிவு உணர்த்துகின்றதெனின் நாம் உங்களுக்காக அனுதாபப்படுவதா? உங்கள்மீது ஆத்திரப்படுவதா? .......

### எவருக்காக ஏக்கப் பெருமூச்சு?

**யுத்தத்தில் இதுவரை இறந்துபோன உயிர்களையும், அழிந்துபோன அசையும், அசையாச் சொத்துக்களைப்பற்றியும்** ஏக்கப் பெருமூச்சு விட்டுள்ளீர்கள்.

எந்த மக்களின் சாவுகளுக்காகவும், எவரது சொத்துக்களின் அழிவுக்காகவும் உங்களின் ஏக்கப் பெருமூச்சு.......? தென்னிலங்கையில் வாழும் சிங்கள வரைவிட, போரின் கொடுமையை நன்குணர்ந்து அனுபவிக்கும் தமிழ் மக்களுக்காகவா? எம்மால் நம்ப முடியவில்லை!

கடந்த சில ஆண்டுகளுக்கு முன், காணாமற்போன சிங்கள மக்களின் குடும்பங்களுக்குக் கோடிகோடியாகக் கொட்டிக்கொடுக்கும் தாங்கள், பலமுறை இடம்பெயர்ந்து இடர்ப்படும் தமிழ் மக்களுக்கு உணவு, உடை, உறைவிடம் கொடுக்கவில்லையே! கையிழந்தும் காலிழந்தும், உயிரிழந்தும், உடமையழிந்தும், கதியிழந்து நிற்கும் தமிழ்மக்களைக் கடைக் கண்ணாலும் பார்க்கவில்லையே! போகிறோம்! போகிறோம்! என்று ஓடிவந்த தமிழர்களைக்கூட, கோழிக்கூண்டுக்குள் அடைத்து வைத்துக் குதூகலப் படுகிறீர்களே! நீங்கள் தமிழர் மீது விடுகின்ற ஏக்கப் பெருமூச்சின் விளைவே இத்துணைத் துயரங்க ளென்றால், நீங்கள் கோபப்பட்டால் விளைவு எப்படியிருக்கும். தமிழர் உயிரையும், சொத்தையும் அழிப்பதற் கென்றே, ஆளணி, ஆட்டிலறி, கிபீர், புக்காராவென்று அனுப்பிவிட்டு, 'அழிகிறதே அழிகிறதே' என்று அழுவதில் என்ன நியாயம்? உலக நாடுகளுக்கு முன்னே உண்டியல் குலுக்குவதற்கு இந்தக் கண்ணிய வேடம் பயன்படலாம். ஆனால், தமிழ் மக்களின் நெஞ்சினைத் தொடுமா?

இந்தப் பாவித் தமிழ் மக்கள், இனியும் இனியும் துன்பப் படாமல் செத்துப்போகட்டும் என்ற அனுதாப உணர்வினாற்தான், மருந்து வகை களைக்கூடத் தாண்டிக்குளத்தைத் தாண்டவிடாது தடை விதித்திருக் கிறீர்களா?




### மனிதநேய அழிவின் அளவு?

**"யுத்தத்தினால் அழிக்கப்படும் மனித நேயத்தின் அளவை நாம் அளவிட முடியுமா?**

என்று கவலை வேறு தெரிவித்திருக்கிறீர்கள். உண்மைதான்! மனித நேயமின்றிக் கொலை வாளோடு திரியும் தங்கள் தளபதியும், தானைகளும் கணக்குப்பார்த்தா அழிவு வேலைகளைச் செய்கிறார்கள்? உங்கள் காலத்தில், உங்கள் கண்முன்னால் நிகழும் அழிவுகளையே கணக்கிட முடியாத நிலையில், முன்னைய கணக்குகளை எப்படிப் பார்க்கமுடியும்?

### தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்கவா? தமிழரைத் தீர்க்கவா?

**"எந்த ஒரு அரசாங்கமும் தமிழர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் போதிய அளவில் முயற்சிகள் எடுக்கவில்லை யென்றும் தாம் அதிகாரத்திற்கு வருவதற்கான ஒரு கருவியாகவே இதனைப் பயன்படுத்தினவென்றும்** கூறியிருக்கின்றீர்கள்.

தமிழர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு என்பதைவிட, தமிழர்களைத் தீர்ப்பதற்கு என்று சொல்லியிருந்தால், நீங்கள் உண்மை பேசுகிறீர்கள் என நாங்கள் ஒப்புக்கொள்ளலாம்.

தமிழர்களைத் தீர்த்துக் கட்டும் விடயத்தில் வேறெவரையும்விடத் தங்களின் குடும்பத்தினரே முனைப்பாக நின்றதை நாம் அனுபவபூர்வமாக உணருகிறோம்.

'24 மணி நேரத்தில் சிங்களம் மட்டும்' என்று முழங்கியவர் S.W.R.D. பண்டாரநாயக்கா, புத்தபிக்குகளின் விழியுருட்டலுக்கு வளைந்து பண்டா–செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தவரும் தங்கள் தந்தையார்தானே! டட்லி–செல்வா உடன்படிக்கைக்கு எதிராக வெளிக் கிளர்ச்சி செய்து இனவாதப் பூதத்தை உற்சாகமாக உலவவிட்ட சிறிமாவோ தங்களது தாயார்தானே! இறுதியாக இராணுவத்திற்கு இரகசியமாக ஆயுதங்களை வாங்கிக்குவித்துக் கொண்டு, புலிகளோடு பேச்சுவார்த்தை நாடகமாடியவர் தாங்களல்லவா! எனவே, அரசுகள் அனைத்துமே இனப்பிரச் சினையைத் தீர்ப்பதற்குக் கிடைத்த சந்தர்ப்பங்களைத் தொடர்ச்சியாகக் கைவிட்டுவந்துள்ளன என்ற கூற்று, தங்களையும் தங்களின் அரசையுங்கூட உள்ளடக்குகின்றது என்ற உண்மையை ஒப்புக்கொள்வீர்கள் என நினைக்கிறோம்.

### 1958 இனக்கலவரம் மறப்பா? மறைப்பா?

இதுவரை இலங்கையிலே நடந்து முடிந்த இன வன்முறைகளைப் பற்றிய தங்களின் கூற்று எம்மை வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது. **"1977, 1979, 1981, விசேடமாக 1983 கறுப்பு யூலைக் கலவரங்கள் சிங்கள, தமிழரிடையே பாரிய இடைவெளியை ஏற்படுத்திய நிகழ்வு களாகும்"** எனக் கூறியிருக்கிறீர்கள். ஆனாலும், 1958–ம் ஆண்டு கலவரத்தை எப்படி மறந்தீர்கள் என்பதே எமக்கேற்பட்ட வியப்பாகும். இலங்கைத் தீவில், சுதந்திர மாயைக்குப் பிறகு, முதன்முதலில் சிங்களப் பேரினவாதப் பூதம் தமிழர் இரத்தத்தைச் சுவைத்துப் பார்த்தது 1958ஆம் ஆண்டில் அல்லவா! தமிழரைத் தாக்கிய சிங்களக் குண்டருக்கு ஊக்கமும் ஒத்துழைப்பும் கொடுத்து உதவியவர் தங்களின் தந்தையார்தான் என்பதையும் உலகமே அறிந்திருக்கும்போது, நீங்கள் மறந்து போனது எவ்வாறு?

### கொடுமை இழைப்பதில் வரலாற்றுச் சாதனை

**"இனமோதல் காரணமாகச் சொல்லொணாத் துயரங்களை அனுபவிப்பதில் 20ஆம் நூற்றாண்டில் தமிழ் மக்கள் வரலாறு படைத்திருக்கிறார்கள்"** என்று வருத் தத்தோடு கூறியுள்ளீர்கள். உங்களுடைய தன்னடக்கப் பண்பு உயர்வானது. அதனால் எமது பாராட்டைத் தெரிவிக்கிறோம். 20ஆம் நூற்றாண்டின் உச்சத் துன்பத்தை அனுப விப்பவர்களாகத் தமிழ்மக்கள் வரலாறு படைத்திருக்கிறார்கள் என்றால், அத்தகைய கொடிய துன்பங்களை அவர்களுக்குக் கொடுப்பதிலே தாங்கள் வரலாறு படைத்திருக்கிறீர்கள். இந்த உண்மையைச் சொல்லவிடாமல், உங்களின் தன்னடக்கம் தடுத்திருக் கக்கூடும். ஆனால், உலகம் இதனை நன்றாகவே அறிந்து வைத்திருக்கின்றது. பொருளாதாரத் தடையால் பட்டினிச்சாவு: மருந்துத்தடையால் நோய்ச்சாவு: படுகாயப் படுத்தல், சித்திரவதை, வாவிகளில்

தொடர்ச்சி 8 ம் பக்கம்...

# தங்கள் தீர்வுப்பொதி அரக்கத்தனமான .....

எறிதல், கடலிலே மிதக்கவிடல், மலக்குழி- புதைகுழிக்குள்ளே சமாதி வைத்தல் போன்ற யுத்திகளால் அவலச்சாவுகளை அப்பாவித் தமிழருக்குப் பரிசளித்து, நவாலிப் படுகொலை, நாகர் கோயிற் படுகொலை, நாவற்குழிப் புதைகுழி எனப் பல சிறப்புப் பரிசுகளையுமளித்து, எவராலும் முறிக்க முடியாத வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தியுள்ளீர்கள். இதனை முகஸ்துதியாகவன்றி, உண்மையாகவே கூறிக்கொள்கிறோம்.

## சமாதானப் புறாவின் கழுத்தை நெரித்தது யார்?

ஆட்சியிலிருந்த எந்த ஒரு அரசாங்கமும் நடந்து கொள்ளாத முறையில் நாம் செயற்பட்டுள்ளோம் என்று தொடங்கி, சமாதான நடவடிக்கை, பிரபாகரனுக்கு அழைப்பு, பேச்சுவார்த்தை, பிரதிநிதிகள், போர் நிறுத்த உடன்பாடு, கடிதப்பரிமாற்றங்கள் வரை மிக நீளமான உரை கூறியிருக்கிறீர்கள். இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கிடையே, ஒருவருக்கும் தெரியாமல் படைபலப் பெருக்கத்திற்கான ஆயுதக் கொள்வனவு செய்ததை மட்டும் சொல்லாமல் விட்டிருக்கிறீர்கள். நீங்கள் அன்று பேசியவற்றை தமிழ் மக்கள் அவ்வளவு விரைவாக மறந்துவிடுவார்கள் என்றா நினைக்கிறீர்கள்? பேச்சு நடக்கும். அமைதிக் காலத்தைப் பயன்படுத்தி புலிகளை ஒழிக்கப் பொறி சமைத்த கதையை, நீங்களே சொல்லி நாங்கள் அறிந்திருக்கிறோம். எனவே, உள்ளார்ந்த நன்நோக்குடன் பேச்சுவார்த்தைக்கு வராமல், கை வாய் கட்டப்பட்ட ஊமைகளைப் பேச்சுக்கு அனுப்பிவிட்டு, சமாதானப் புறாவின் கழுத்தைப் புலிகள்தான் நெரித்தார்கள் என்று தாங்கள் எப்படிக் கூறமுடியும்? மற்ற அரசுகளைப் போலத் தங்கள் அரசும் தமிழ் மக்களின் முதுகிலே குத்தத்தானே முயற்சி செய்தது?

## பொருட்தடை யாருக்கு எதிராக?

**"சமாதான காலத்தில், போருக்குப் பயன்படுத்தப்படாத அனைத்துப் பொருட்களையும் வடக்குக்கு எடுத்துச் செல்ல அனுமதித்ததாகவும், அது தமிழரை வந்தடைய வேண்டுமென எதிர் பார்த்ததாகவும், தமிழர் வாழ்க்கையைச் சுமூகமாக்க முயற்சித்ததாகவும் கூறியிருக்கிறீர்கள்.**

பேச்சுவார்த்தை முறிந்து போர் தொடங்கியதற்கும், யுத்தத்திலே பயன்படாத பொருட்களுக்கான தங்கள் தடைக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? எமக்குப் புரியவில்லை. புலிகள் கெடுத்துவிட்டார்கள். அதனாலே தடை என்று கூறுவதானால், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் உள்ள தமிழர்களை, குடிமக்களாகக் கருதவில்லை- பகை மக்களாகக் கருதுகிறீர்கள் என்றல்லவா பொருள். யுத்தத்துக்குப் பயன்படாப் பொருள்களை அனுப்புவதில் நீங்கள் பேரம் பேசியது எதனால்? சவர்க்காரத்தையும், மருந்துப் பொருட்களையும், சாப்பாட்டுப் பொருட்களையும், உடைகளையும் எதற்கெதிராகத் தடை செய்தீர்கள். புலிகளுக்கெதிராகவா? தமிழருக் கெதிராகவா? புலிகளுக்கெதிரான தடைகளென்றால், வடக்கிலே வாழும் அனைவரும் புலிகள் என நீங்கள் கூறுவதாகவே அமையும். தமிழருக் கெதிரான தடைகள் என்றால், தமிழரைப் பகைவராக நீங்கள் பிரகடனம் செய்கிறீர்கள் என்று பொருள்படும். உண்மையைச் சொன்னால், தமிழ் மக்களின் நலத்திலே உங்களுக்கோ அல்லது முன்னைய எந்த அரசுக்குமோ எவ்வித அக்கறையும் இருந்ததில்லை. தமிழருக்கெதிரான கோசங்களே சிங்கள அரசியலாளரின் வாக்கு வங்கியை எப்போதும் நிறைத்து வந்திருக்கிறது. புலிகளிடமிருந்து பிடித்துவிட்டோம் என்று பெருமை பேசப்படும் யாழ்ப்பாணத்தில், ஒரு தீப்பெட்டிகூடக் கொண்டுசெல்லத் தடைவிதிக்கும் நீங்கள், "சொர்க்கலோக வசதிகளை தமிழ் மக்களுக்குத் தர முயல்வதாகக் காட்டிக்கொள்வது கேலிக்குரியதாகும்".

## இனிப்பான அறிக்கையும் வெறுப்பான நடத்தையும்

**சாதாரண மக்களுக்கு சேதம் ஏதும் ஏற்படாத வகையில் பொறுப்பாக நடக்குமாறு படைகளைப் பணித்துள்ள தாகவும், அவர்கள் அதன்படி நடப்பதாக அறிக்கை கிடைத் துள்ளதாகவும் துணிவாகச் சொல்லியிருக்கிறீர்கள்.**

தமிழ் மக்களின் துன்ப நிலையையும், வேதனையையும் நன்கறிந்த ஒரு தாயின் நிலையிலிருந்து வேண்டுகோள் விடுக்கின்ற தங்களின் இந்தக் கூற்றுத்தான் உண்மையில், எமக்கு மிகுந்த அதிர்ச்சியையும் அவமானத்தையும் அளிக்கிறது.

கிருஷாந்தி போன்ற மாணவ மொட்டுக்களையும், ராஜினி போன்ற பருவப் பெண்களையும் பாலியல் வல்லுறவினால் இராணும் பலி கொண்ட அறிக்கை கிடைத்த பிறகு கூடவா படையினர் தங்களின் கட்டளைப்படி நடந்ததாகத் தங்களின் மேன்மைக்குரிய தாய்மனம் கருதுகிறது? அப்படியெனில், தமிழ் மாணவிகளைக் கருக்கவும், மலகுழி, சுடலைப்புதைகுழிக்குள்ளே போட்டு மூடவும், ஆணைகொடுத்து அனுப்பியது தங்களின் தாய்மனம் தானா? ஆசிரியர்கள், அதிபர்கள், அப்பாவிகள், இளைஞர்கள் என்று பல நூற்றுக் கணக்கானவரைக் கைதுசெய்து, முகவரிகளை அழிக்குமாறு ஆணையிட்டு அனுப்பியது தங்களின் தாய்மனந்தானா?

## 15 இலட்சம் தமிழரைக் காணவில்லை!

இந்த நாட்டிலே வாழும் 10 இலட்சம் தமிழ் மக்களினதும், 11 இலட்சம் மலையகத் தமிழரினதும் பிரச்சனைகளுக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என்றும், இந்த வரலாற்றுச் சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடாது என்றும் முழங்கியுள்ளீர்கள். **25 இலட்சம் தமிழ் மக்களை 10இலட்சம் எனக் குறிப்பிடுவதன் பின்னோக்கம் என்ன?** மிகுதி 15 இலட்சம் பேரையும் பேர் ஊர் தெரியாமல் கொன்று புதைத்துவிடுவதுதான் தங்கள் கூற்றின் உள் நோக்கமா? இரண்டு பிரதமர்களின் மகளாகப் பிறந்து, பிரான்சிலே படித்து, அரசியல் மேல்மட்டப் பின்னணியிலேயே வளர்ந்து, அமோக வரவேற்புடன் சனாதிபதியான தங்களுக்குத் தமிழர்களின் தலைக் கணக்கு தெரியாமலிருக்க நியாயமில்லை.

ஆகவேதான், மகாவம்ச விகார மகாதேவியாகும் விருப்பம் தங்களுக்கும் வந்ததால் 15 இலட்சம்பேரைக் கணக்கிலே சேர்க்காமல் விழுங்கி விட்டீர்களோ எனக் கவலையுறுகிறோம்.

## தீர்க்கும் திறண் இல்லாத் தீர்வுப்பொதி

தீர்க்கும் எதுவும் தரும் திறண் இல்லாத தங்களின் தீர்வுப்பொதி மறுக்கப்பட்டு மாற்று அரசு பதவிக்குவரின் 10 ஆண்டுகளில் இந்நாடு பொஸ்னியா ஆகும் என்று எச்சரிக்கைக் குரல் தந்து மிரட்டியிருக்கிறீர்கள். ஆனால் அதிஷ்டவசமாக இழப்பதற்கு தமிழரிடம் உயிரைத் தவிர வேறெதுவும் கிடையாது. அதுவும்கூட, பௌத்த சித்தாந்தப்பரோபகாரத் தடைகளால் பசியாலும் நோயாலும் போராலும் அழிகிறது. எனவே, தாங்கள் வழங்கும் நச்சுப் பொதியைப் பிரித்துண்டு, கும்பிட்டு நக்கிச் சாவதைவிட, வரப்போவதாக மிரட்டும் பொஸ்னியா வாழ்வை ஏற்பது எளிதானதெனத் தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

## அர்த்தப்படுத்தப்பட்ட கோஷம்

**புலிகள்அர்த்தமற்ற கோஷத்தை முன் வைத்து யுத்தம் செய்கின்றனர் என்றும் சகோதரத் தமிழர்களை மேலும் படுபாளத்தில் தள்ளுகிறார்கள் என்றும் குற்றம் சாட்டியுள்ளீர்கள்.**

தமிழ் மக்களை, சிங்கள மேலாண்மை படுபாதாளத்துக்குள்ளே தள்ளியது மட்டுமன்றி, எறியக்கூடிய அனைத்தையுமே தலையின்மேல் எறிந்தது. சிங்களம் மட்டும். 'ஸ்ரீ' குத்தல், இனக்கலவரம், சிறை, கொடுமை, சித்திரவதை, படுகொலை இன்னும் எத்தனையோ! இதனால் சினந்து, சகோதர மக்களின் பாதுகாவலராக ஆயுதம் ஏந்தியவரே புலிகள் "தமிழீழம்" என்பது அர்த்தமற்ற கோஷமன்று. தமிழ் மக்கள், தமது அடிமை வாழ்வுக்கு நாணி, உரிமைப்போருக்கு நாள்குறித்து அர்த்தப்படுத்திய கோஷந்தான் அது. 77ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழ் மக்களின் ஆணைபெற்றது "தமிழ் ஈழக்கோஷம்." புலிகள் தாமாகத் தூக்கிக் கொண்ட கோஷமல்ல அது. தமிழ் ஈழக் கோஷம் அர்த்தம் நிறைந்து பொலிந்ததற்கும், அகற்றப்பட முடியாததாக இருப்பதற்கும் தங்களுடையதும், தங்களுக்கு முன்னதுமான இனவாத அரசுகளின் 'தப்புத் தாளங்கள்'தான் காரணமென்பதை மறுக்க முடியுமா?

## குழந்தையும் சுடுகலன் ஏந்தும்

**விடுதலைப் புலிகள் தமிழ்ச் சிறுவர்களை இராணுவ நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துகிறார்கள் என்று கண்ணீர் வடித்திருக்கிறீர்கள்.** பிள்ளைகளைக் காத்துக்கொள்ளுமாறு தமிழர்களுக்கு ஆலோசனை கூறியுள்ளீர்கள். ஆனால், இராணுவ ஆட்சேர்ப்பு வயதையும், படிப்பு எல்லையையும் 14 வயதாகக் குறைத்து சிங்களக் குழந்தைகளைத் திரட்டுவது யார்? தங்கள் அரசல்லவா.....! திரட்டப்பட்டவர்களில், பாதிப்பயிற்சியிலே பலர் ஓடுவதும், பெருஞ் சமூகவிரோதிகளாக மாறிவருவதும் எங்கே நிகழ்கிறது? தென்னிலங்கையில் அல்லவா.....! தயவு செய்து தங்களைச் சுற்றிலும் ஒருமுறை பாருங்கள். கண்ணாடி வீட்டிற்குள் இருந்து கல்லெறியும் படிப்பா தாங்கள் படித்தது? உயிரையும், உறவையும், உரிமையையும் காத்துக் கொள்ளப் போராடும் சமுதாயத்திலே தேவையேற்பட்டால், வலுவுள்ள குழந்தையும் சுடுகலனைத்தூக்கும்: தனது வரலாற்றுத் தேவையை நிறைவேற்றும்.

## எல்லைகளை உறுதி செய்ய

எங்களது பிள்ளைகளை மீட்டெடுக்க வேண்டிய தேவை இருப்பதனாலும், எல்லைகளை உறுதிசெய்ய வேண்டிய தேவை இருப்பதனாலுமே புலிகள் போர்க்கோலம் கொண்டுள்ளனர். மற்றும்படி புலிகளோ தமிழ் பொதுமக்களோ போரின் காதலர்கள் அல்லர். புலிகள் தமிழரைத் துன்புறுத்துகின்றனர் என்பதும், தமிழர்களின் துயரங்கண்டும் இரங்காதிருக்கின்றனர் என்பதும் தங்களது தேர்தல் கோஷங்களுக்கு வேண்டுமானால் பயன்படலாம். ஆனால், காலம் காலமாக அடக்கப்பட்டு இன்று கிளர்ந்தெழுந்திருக்கும் தமிழ் மக்கள் முன்னே அது எடுபடாது என்பதைத் தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள்.

**"உங்கள் உரிமைகளை வென்றெடுப்பதற்கு தற்போது நீங்கள் உங்கள் உயிர்களை அர்ப்பணிக்க வேண்டிய அவசியமில்லை"** என்று எங்களுக்குக் கூறுகின்றீர்கள். தங்கத் தாம்பாளத்திலே வைத்து எமது உரிமைகளைத் தரப்போகின்றீர்களா? அல்லது நீங்களாக உயிரை அர்ப்பணிக்கத் தேவையில்லை, நாங்களாகவே ஷெல்லும், குண்டும் அடித்து உயிரை எடுத்துக்கொள்கிறோம் என்று சொல்கிறீர்களா?

நீங்கள் தருவதாகச் சொல்லும் தீர்வுப் பொதி, அரக்கத்தனமான ஷெல்லாகவும், அச்சம் தரும் குண்டாகவும் எமது தலையிலே இறங்கும் என்பது அனுபவத்தால் எமக்கு நன்கு தெரியும்.

## புறக்கணிக்கின்றோம்....!

பயங்கரவாதத்தின் கொடூர ஆட்சியின் கீழ் உங்களைத் தொடர்ந்தும் சிறைப் படுத்தியுள்ள பாசிசத் தலைவர்களையும் தனிநபர்களையும் புறக்கணியுங்கள்" என வேண்டுகோள் விடுத்துள்ளீர்கள்.

தங்களின் இறுதி வேண்டுகோளை நாம் முழுமனத்துடன் ஏற்றுக் கொண்டு, **தங்களையும், சிங்கள இனவாதப் பாசிசத் தலைமைகளையும், அதன் அடிவருடித் தமிழ்ப் புலமைகளையும் முற்றாகவே புறக்கணிக்கின்றோம்.**

தங்களின் படை வலிமை, போர்விமானக் குண்டுகள், ஆட்டிலறி ஷெல்கள் என்பனவற்றைவிட தங்கள் உரையின் பாசாங்கு வார்த்தைகள் கொடூரத்தைக் கொண்டவை என்பதை நாங்கள் நன்கு அறிவோம்.

**எனினும் புத்தாண்டு வாழ்த்துக்கு நன்றி!**

**- தன்மானத் தமிழர்கள் -**

**10.01.1997**

# சர்வதேச அரங்கில்

# தமிழீழ விடுதலைப் போராட்டம்

இலங்கைத் தீவில் இன்று நிலவும் 'தேசிய இனப் பிரச்சனை' சிங்கள பௌத்த ஐதீகம் ஒன்றினைச் சுற்றி மையம் கொண்டுள்ளது.

> தமிழர்களுக்குப் பிரச்சனை உண்டு என அறிவிப்பதும் அதை அரசியல் ரீதியாகத் தீர்க்க முயல்வதாகக் காட்டிக் கொள்வதும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் ஏற்பட்டிருந்த அதிருப்தியை மாற்றும் என்பதும் சந்திரிகாவின் கணிப்பு. எனவே சந்திரிகா அரசின் இந்த மாற்றம் அதன் பேரினவாதக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றம் அல்ல. இம் மாற்றம் பேரினவாத சந்திரிகா சிங்கள பௌத்த மேலாதிக்கத்தைத் தமிழ் மக்களின் மீது திணிக்கும் தனது வரலாற்று முயற்சியை இலகுவாக்குவதற்காகத் தந்திரோபாய ரீதியில் மேற்கொண்ட ஒரு மாற்றமேயாகும்.

மகாவம்சத்தில் பிரதிபலிக்கும் தம்ம தீப கோட்பாடே இந்த ஐதீகமாகும். இந்தியத் துணைக் கண்டத்தில் நிலவிய வரலாற்று ரீதியான காரணங்களினால் தேரவாத பௌத்தத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் தோற்றம் பெற்றதே இந்த ஐதீகமாகும். தம்ம தீப ஐதீகம், அடிப்படையில் இலங்கைத் தீவினைத் தேரவாத பௌத்தத்தினைப் பேணிப் பாதுகாக்கும் தேசமாக்குகின்றது. இம் மதத்தைச் சார்ந்தவர்களான சிங்களவர்களை மண்ணின் மைந்தர்களாக்குகின்றது. சிங்களவர்கள் தவிர்ந்த ஏனைய மக்களை அவர்களின் சொந்த நிலத்திலேயே அன்னியர்களாக்குகின்றது. தமிழ் மக்கள் இத் தீவின் வட-கிழக்கில் வரலாற்று ரீதியான தாயகத்தைக் கொண்டுள்ள



போதும், 'தம்ம தீப ஐதீகம்' இந்த உண்மையை ஏற்க மறுக்கின்றது. கடந்த நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் இந்த பிற்போக்கான ஐதீகம் சிங்கள புத்திஜீவிகளினால் நவீன உருவம் பெற்றது. இந்த நவீன தம்ம தீப கோட்பாடு நன்கு மெருகூட்டப்பட்ட மாயையாக, சாதாரண சிங்கள மக்களின் மனங்களில் வேரூன்றியது. இதுவே அவர்களின் சிங்கள பௌத்த தேசியவாதத்தின் அடிப்படையானது. இவ்வாறாக ஒரு பிற்போக்குத்தனமான, சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு ஐதீகம் சிங்கள பௌத்த தேசியவாதத்தின் அடிப்படையானதனால், பிரித்தானியரால் செயற்கையாக உருவாக்கப்பட்ட 'ஒன்றிணைந்த இலங்கை' என்ற தேசியம் அதன் கருவிலேயே சிதைந்து போயிருந்தது. ஏனெனில், தம்ம தீப ஐதீகத்தில் பல்லின மக்களை உள்ளடக்கிய பல்தேசியத்தைக் கட்டி எழுப்புவதற்கு இடமிருக்கவில்லை. மாறாக, சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை ஏனைய மக்கள் மீது திணிக்கும் தன்மையே காணப்பட்டது. இந்த, மேலாதிக்கத்தைக் குறிக்கோளாகக் கொண்ட, சர்வதேச சட்டங்களுக்கு முரணான, பேரினவாத சிங்கள பௌத்த தேசியவாதத்திலிருந்து தமிழ் பேசும் மக்களின் தேசிய நலன்களைப் பாதுகாக்கவென எழுச்சி பெற்றவையே தமிழ் மக்களின் தேசியவாதமும் தமிழீழ விடுதலைப் போராட்டமுமாகும். எனவே, தமிழீழ விடுதலைப் போராட்டம் நியாயபூர்வமானது, சர்வதேச சட்டங்களுக்கு அமைவானது, மிகவும் முற்போக்கானது.

உண்மை இவ்வாறாக இருக்கும்போது, சர்வதேச அரங்கில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தினையும் அதன் சட்டபூர்வமான தன்மையையும் விளக்கி அதற்கான சர்வதேச அங்கீகாரத்தினைப் பெறுவதில் நாம் எதிர்நோக்கும் பிரச்சனைகள் என்ன, போராட்டத்திற்கு எதிரான சக்திகளின் சதித்திட்டங்கள் என்ன, இவற்றை தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச செயற்பாட்டாளர்களும் ஏனைய தமிழீழ ஆதரவுச் செயற்பாட்டாளர்களும் (விடுதலைப் புலிகளின் வழிநடத்தலுடன்) எவ்வாறு எதிர் கொள்கிறார்கள், எதிர்காலத்தில் நாம் எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் என்ன எனும் விடயங்கள் பற்றி ஆராய்வதே, இக்கட்டுரையின் நோக்கமாகும்.



### சிறிலங்காவின் பிரச்சாரத்தில் மாற்றம்(?)

தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த சிங்கள பௌத்த பேரினவாத அரசுகள் தமது சர்வதேச பிரச்சாரத்தினை பின்வரும் கொள்கையினை அடிப்படையாகக் கொண்டே மேற்கொண்டு வந்தன. அதாவது இலங்கையில் தமிழ் மக்களுக்கு பிரச்சனைகள் என்று ஒன்றும் இல்லை. இலங்கையில் பயங்கரவாதப் பிரச்சனையே நிலவுகின்றது என்பதே அதுவாகும். ஆனால் 1994ம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த சந்திரிகா தலைமையிலான அரசு இக் கொள்கையில் மாற்றம் ஒன்றைச் செய்தது. அதாவது இலங்கையில் தமிழர்கள் ஒரு சிறுபான்மையின மக்கள். இவர்களுக்குக் கடந்த அரசாங்கங்களினால் அநீதிகள் இழைக்கப்பட்டுள்ளன என்பதை அது ஏற்றுக் கொண்டது. அத்துடன் அதனால் தோன்றிய பிரச்சனைகளைத்தான் அரசியல் ரீதியாகத் தீர்த்து வைக்கப் போவதாகவும் சந்திரிகா அரசு அறிவித்தது.



காலம்காலமாக தமிழ் மக்களை ஒடுக்கி வந்த சிங்கள பௌத்த பேரினவாத அரச நிறுவனத்திற்கு அரசியல் தலைமை வழங்கும் பொறுப்பை ஏற்ற சந்திரிகா, ஏன் இம் மாற்றத்தை மேற்கொண்டார்?

> தனது முன்னோர்களின் அடிப்படைக் கொள்கையான சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை நிலை நிறுத்துதல் என்பதிலிருந்து சிறிதளவும் பிறலாத சந்திரிகா, தனது தமிழின ஒழிப்பு நடவடிக்கையை வெறித்தனமாக ஆரம்பித்தார். இராணுவச் சண்டித்தனத்திற்காக ரத்வத்தவும், சர்வதேசத்தினைச் சமாளிக்க கதிர்காமரும், அரசியல் முகமூடியினை அழகாக இடுவதற்காக ஜி. எல். பீரிஸ் உம் இவரின் பிரதம கையாட்களாயினர். சந்திரிகாவின் இந்த முயற்சியே தமிழரின் தேசியத்தைச் சிதைப்பதற்காக மேற்கொள்ளப்படும் சிங்கள தேசத்தின் பாரிய அரசியல் - இராணுவ முயற்சியாகும்.

இதற்கு, சந்திரிகா ஒரு இனவாதி அல்ல எனவும் தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளைப் புரிந்து கொண்டவர் எனவும் யாராவது விளக்கம் தருவார்களானால் அவர்கள் சிறிலங்காவிலும் தமிழீழத்திலும் நிலவிய அரசியல், இராணுவச் சூழ்நிலைகளைச் சரிவர ஆழமாகப் புரிந்து கொள்ளவில்லை என்றே கொள்ள வேண்டும். 1994 இல் தமிழீழ விடுதலைப் புலிகளினால் தலைமை தாங்கி முன்னெடுக்கப்படும் தமிழீழ விடுதலைப் போராட்டம் இராணுவரீதியாக வெல்லப்பட முடியாதது என்ற அபிப்பிராயம் சர்வதேசரீதியாகவும் சிறிலங்காவில் சிங்கள மக்கள் மத்தியிலும் வேரூன்ற ஆரம்பித்திருந்தது. இதனால் இனவாத யுத்தத்தினை, தொடர்ந்து தமிழ் மக்கள் மீது நடத்தக்கூடிய சூழ்நிலை மிகவும் குறைவாகவே காணப்பட்டது. அத்துடன், சர்வதேச ரீதியாக, தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த சிறிலங்கா அரசுகளின் அப்பட்டமான இனவாத அரசியல் தொடர்பான அதிருப்திகளும் தோன்ற ஆரம்பித்திருந்தன. இச்சூழ்நிலை தொடர்ந்தால் தமிழீழம் உருவாவதைத் தவிர்க்க முடியாது போய்விடும் என்பதை உணர்ந்து கொண்ட சந்திரிகாவும் கூட்டாளிகளும் ஒரு வித்தியாசமான அரசியல் - இராணுவ தந்திரமொன்றை வகுத்துக் கொண்டனர். அதாவது இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணுதல் என்பதுதான் அது. போரின் மூலம் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிலை நிறுத்தலாம் என்பதில் நம்பிக்கையிழந்திருந்த சிங்கள மக்கள், இக் கொள்கையினை எதிர்க்கப் போவதில்லை என்பதை சந்திரிகா நன்கு அறிந்திருந்தார். (ஆயினும் தீர்வு என ஒன்று வரும் போது சிங்கள பௌத்த மேலாதிக்கம் அதனூடாக நிலை நாட்டப்படுவதையே சிங்கள மக்கள் எதிர்பார்த்தார்கள் என்பதுவும் இதனைச் சந்திரிகா தெளிவாக உணர்ந்திருந்ததோடு, அது பேரினவாதியான அவருக்கு உடன்பாடாக இருந்ததென்பதுவும் வேறு விடயம்) அத்துடன், தமிழர்களுக்குப் பிரச்சனை உண்டு என அறிவிப்பதும் அதை அரசியல் ரீதியாகத் தீர்க்க முயல்வதாகக் காட்டிக் கொள்வதும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் ஏற்பட்டிருந்த அதிருப்தியை மாற்றும் என்புதும் சந்திரிகாவின் கணிப்பு. எனவே சந்திரிகா அரசின் இந்த மாற்றம் அதன் பேரினவாதக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றம் அல்ல. இம் மாற்றம் பேரினவாத சந்திரிகா சிங்கள பௌத்த மேலாதிக்கத்தைத் தமிழ் மக்களின் மீது திணிக்கும் தனது வரலாற்று முயற்சியை இலகுவாக்குவதற்காகத் தந்திரோபாய ரீதியில் மேற்கொண்ட ஒரு மாற்றமேயாகும்.

இதன் மூலம் சந்திரிகா தனது தமிழின அழிப்பு யுத்தத்திற்கான சர்வதேச அனுதாபத்தையும் ஆதரவினையும் பெற்றுக் கொள்ள முயன்றார். அத்துடன், தமிழ் மக்கள் ஒரு தனித் தேசிய இனம் என்ற வரலாற்றுரீதியான உண்மையை மழுங்கடித்து அவர்களைச் சிங்கள பௌத்த சிறிலங்காவில் ஒரு சிறுபான்மை இனம் என்ற மாயையினை



சர்வதேச ரீதியில் ஏற்படுத்த முயன்றார்.

அதாவது, தனது முன்னோர்களின் அடிப்படைக் கொள்கையான சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை நிலை நிறுத்துதல் என்பதிலிருந்து சிறிதளவும் பிறலாத சந்திரிகா, தனது தமிழின ஒழிப்பு நடவடிக்கையை வெறித்தனமாக ஆரம்பித்தார். இராணுவச் சண்டித்தனத்திற்காக ரத்வத்தவும், சர்வதேசத்தினைச் சமாளிக்க கதிர்காமரும், அரசியல் முகமூடியினை அழகாக இடுவதற்காக ஜி. எல். பீரிஸ் உம் இவரின் பிரதம கையாட்களாயினர். சந்திரிகாவின் இந்த முயற்சியே தமிழரின் தேசியத்தைச் சிதைப்பதற்காக மேற்கொள்ளப்படும் சிங்கள தேசத்தின் பாரிய அரசியல் - இராணுவ முயற்சியாகும். இம் முயற்சிக்கு அதன் விளைவுகளை அறிந்து கொண்டும் துணைபோவோராக கொழும்புத் தமிழ்த் துரோகக் குழுக்கள் இருக்கின்றன. **அற்ப சலுகைகளுக்காக இவர்கள் இழைக்கும் இந்த வரலாற்று மோசடி தமிழ் மக்களின் வரலாற்றில் கறைபடிந்த பக்கங்களாகும். நீலன் திருச்செல்வம், டக்ளஸ் தேவானந்தா, சித்தார்த்தன் போன்ற துரோகிகள் சந்திரிகாவின் இந்த பேரினவாத யுத்த தந்திரத்தின் வெற்றிக்காகப் பாடுபடும் கடின உழைப்பாளிகளில் முக்கியமானவர்களாவர்.**

இவ்வாறாக, பேரினவாத சந்திரிகா அரசு நடைமுறைப்படுத்திய திட்டம் சர்வதேச அரங்கில் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றது? இத்திட்டத்தினை முறியடிக்க, சர்வதேச ரீதியில் புலிகளும் ஏனைய தமிழீழ விடுதலைச் செயற்பாட்டாளர்களும் மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

♦

- தீபன்

(தொடரும்)

# மே-நாள் : ஒடுக்கப்பட்ட மக்களின்

## ஈழத்தமிழரின் போராட்டம்

## தாயக விடிவிற்கான போராட்டமே என்பதை இந்நாளில் உலகம் உணரட்டும்

**மே- நாள்.....** உலகெங்கும் உள்ள உழைக்கும் மக்கள் தமது உரிமைகளுக்காக உரத்துக் குரல் கொடுக்கும் நன்னாள்.

**"உலகத் தொழிலாளர்களே, ஒன்றுபடுங்கள்"** என்ற உன்னதமான மகுட வாசகத்தின் கீழ் ஒடுக்கப்பட்ட மக்கள் எல்லாம் தம் உணர்வுகளைப் புலப்படுத்தும் பொன்னாள்.

அனைத்துலகிலும் இருக்கும் தொழிலாள வர்க்க மக்கள் தங்கள் ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தும் திருநாள்.

இடர்ப்பாடுகளுக்கு மத்தியில் தவிக்கும் பாட்டாளி மக்கள் தங்கள் உறவுகளுடன் மானசீகமாகக் கைகுலுக்கிக் கொள்ளும் பெருநாள்.

இந்த நாளை முன்னிட்டு விடுதலைக் காகப் போராடும் தமிழர் தேசமும் தமது உணர்வுகளை வெளிப்படுத்துவது அவசியமானது. விடிவின் வாசலில் - பிரசவத்திற்காகத் துடித்துக் கொண்டிருக்கும் தமிழர் தேசத்தின் இந்த உணர்வுகள், இந்து மா கடல் நடுவில் ஒரு கலங்கரை விளக்கமாக உலகுக்கு விளங்கும் என்பதாலும் - உலகின் மனச்சாட்சிக்கு முன்னால் ஈழத்தமிழர் தேசத்தின் விண்ணப்பமொன்றை இத்தருணத்தில் முன்வைப்பது பொருத்தமானதே எனலாம்.

இலங்கைத் தீவின் தேசிய இனப் பிரச்சினையானது, இப்போதும் உள்வீட்டு விவகாரமாக மட்டும் இல்லை என்பது தெளிவு. சுமார் இருபத்திரெண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே, **சர்வதேச ஜூரர்கள் சபை** (International Jurist Commission), **சர்வதேச மன்னிப் புச்சபை** (Amnesty International), **சிறுபான்மையினர் உரிமைக்குழு** (Minority Rights Group) போன்ற அமைப்புக்கள் இலங்கையின் தேசிய இனச்சிக்கல் குறித்து கருத்து வெளியிட்டிருந்தது தெரிந்ததே. 1975 ஆம் ஆண்டில் சிறுபான்மையினர் உரிமைக் குழுவுக்காக **"இலங்கையில் தமிழர்"** பற்றி ஆராய்ந்த திரு. **வால்டர் சுவோரசு** (Walter Schwarz) அவர்கள் தனது ஆய்வின் முடிவில், "எதிர்காலத்தில் இலங்கையில் இனக்கல வரங்கள், வன்முறைகள், அதிரடி எதிர்ப்பு நடவடிக்கைகள் பரந்தளவில் வட அயர்லாந்திலோ, சைப்பிரசிலோ ஏற்பட்ட வைகளோடு ஒப்பிடத் தூண்டும் அளவுக்கு நிகழக்கூடும்; மொழி, கல்வி, வேலை வாய்ப்பு தொடர்பான சிக்கல்களைத் தீர்ப்பதற்கு இன்னமும் காலம் கடந்து விடவில்லை. இத்தீவில் தமிழர்களுக்கு பாதுகாப்பான இடம் ஒன்று உண்டு என்பதை ஒப்புக்கொள்ளத் தயங்குவதன் மூலம் திரும்பவும் சிறைகள் நிரம்பி வழியவும், குண்டுகள் வெடிப்பதற்கும் அரசு வழிவகுப்பது துயரகரமானதே" எனக் குறிப்பிட்டிருந்தார்.

> **"எதிர்காலத்தில் இலங்கையில் இனக்கலவரங்கள், வன்முறைகள், அதிரடி எதிர்ப்பு நடவடிக்கைகள் பரந்தளவில் வட அயர்லாந்திலோ, சைப்பிரசிலோ ஏற்பட்டவைகளோடு ஒப்பிடத் தூண்டும் அளவுக்கு நிகழக்கூடும் மொழி, கல்வி, வேலை வாய்ப்பு தொடர்பான சிக்கல்களைத் தீர்ப்பதற்கு இன்னமும் காலம் கடந்து விடவில்லை. இத்தீவில் தமிழர்களுக்கு பாதுகாப்பான இடம் ஒன்று உண்டு என்பதை ஒப்புக்கொள்ளத் தயங்குவதன் மூலம் திரும்பவும் சிறைகள் நிரம்பி வழியவும், குண்டுகள் வெடிப்பதற்கும் அரசு வழிவகுப்பது துயரகரமானதே"**
>
> \- வோல்டர் சுவோரசு (1975)

அதன் பின்னர் 1977 லும் 1983 லும் இரண்டு பாரிய இனக்கலவரங்கள் ஏற்பட்டுப் போய் விட்டன. 1979 ஜூலை 13 ஆம் திகதியன்று இராணுவத்தினர் வசம் யாழ்ப்பாணத்தை அரசு ஒப்படைத்தது முதல் இன்று வடக்கு, கிழக்கு மாகாணம் முழுவதும் இராணுவ நெருக்கடியின் கீழே அடக்கப்பட்டு வருகின்றது. இது தவிர சட்டரீதியாகவும், சட்டத்திற்கு புறம்பான வழிகளிலும் தமிழர்கள் மீதான அடக்குமுறை கட்டுமீறிப் பெருகி விட்டது. ஆக இருபத்திரெண்டு ஆண்டுகளுக்கு முந்திய அரசின் நிலையிலிருந்து எந்தவித மாற்றமும் இதுவரை நிகழவில்லை என்பது ஒருபுறம். அடக்குமுறையும் அரசின் அடாவடித்தனங்களும் பெருகி, கொழும்பு அரசுகளின் மீதே தமிழ் மக்கள்






நம்பிக்கை இழந்து போனநிலை மறுபுறம். மேலும், அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் மாநிலம் 1979 மே மாதம் ஒன்பதாம் திகதியன்று இலங்கைத் தமிழ் மக்களின் தமிழீழக் கோரிக்கைக்கு ஆதரவாகத் தீர்மானம் நிறை வேற்றியிருந்தது. அத்துடன், 1979 இன் மே 22 -ம் நாளை அம் மாநிலம் **ஈழம் நாள்** என்றும் பிரகடனம் செய்திருந்தது. இதைத் தொடர்ந்து, அமெரிக்காவின் சோமர்வில்லி மாநகரம் திருகோண மலையைத் தனது சகோதர நகரமாகப் பிரகடனம் செய்திருந்தது. இவ்வாறான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபோது இலங்கைத் தீவில் தமிழர்கள் ஒப்பீட்டளவில் பலம் பொருந்தியவர்களாக இருக்கவில்லை. மறுபுறம், காகிதத் தீர்மானங்களை மட்டும் கண்டு களிப்படைந்து போனவர்களாகவே இருந்தனர். ஆனால், உலகரங்கின் மத்தியிலிருந்து இது போலும் கிடைத்த ஆதரவுகளும், உற்சாகமும் ஈழத்தமிழரின் தாயக விடுதலைப் போராட்டத்திற்கு உந்து சக்தியையும், உத்வேகத்தையும் ஊட்டி வளர்த்தது.

1975 -ல் வால்டர் சுவோரசு குறிப்பிட்டது போல, இலங்கைத் தீவில் தமிழர்களுக்கென பாதுகாப்பான ஒரு இடமுண்டு என்பதை அங்கீகரிக்க அரசாங்கம் மறுப்பதே பிரச்சினைகள் அனைத்துக்கும் தோற்றுவாய் எனலாம். இலங்கைத்தீவு அனைவருக்கும் சொந்தமானது என்ற போலிப் போர்வைக்குள் பெரும்பான்மையினரான பௌத்த சிங்களவரின் நலனை மட்டும்



நிலைநாட்டவும், ஏனையவர்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகத் தள்ளி விடவும் அரசு கட்டிலில் இருப்போர் எடுக்கும் முயற்சிகள்தான், தேசிய இனப்பிரச்சினைக்கான ஊற்று மூலங்கள். இதிலிருந்து திருமதி சந்திரிகா அரசும் விடுபட்டிருக்கவில்லை.

### அரசின் அணுகுமுறை

அரசியல் பேச்சுக்கள் மூலம் சமாதானத்தீர்வு காண்பதுதான் தமது நோக்கமெனத் திருமதி சந்திரிகாவும், அவரது அரசும் கூறிக் கொண்டு ஆட்சிக்கு வந்தது என்னவோ உண்மைதான். ஆனால், நடைமுறையில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையை தேசிய இனப்பிரச்சினையாக அங்கீகரிக்க அரசு தயாராகவில்லை. அத்துடன் அரசியல் அமைப்பிற்கான மாற்றங்கள், அதிகாரப் பரவலாக்கங்கள் என்ற எல்லைக்குள் மட்டும் இனப் பிரச்சினையைக் குறுக்கி, **'ஐக்கிய இலங்கை'** என்ற வரையறுப்புக்குள் ஒரு சமாளிப்பைத் தேடவே திருமதி சந்திரிகா தலைமையிலான அரசு முற்பட்டு நின்றது- நிற்கின்றது. இதிலும், தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளாக விடுதலைப்புலிகளை இனங்கண்ட போதும், அவர்களுடன் அரசியல் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு உகந்த சூழலைத் தோற்றுவிக்கத் தயக்கம் காட்டி அரசியலமைப்பு மாற்றம், அதிகாரப் பரவலாக்கம், தீர்வுப்பொதி என்ற சொற்றொடர்களுக்குள் பின்னால் ஒளிந்து கொண்டு கண்ணா மூச்சி காட்டி வருவதே சந்திரிகா அரசின் செயற்பாடாக உள்ளது. இவ்வாறாக, கடந்த கால அரசுகள் கடைப்பிடித்த அதே கொள்கைகளில் அணுவளவும் பிசகாத அதே கொள்கையைத் திரும்பவும் தமிழ் மக்கள் மீது திணிக்க முற்பட்ட நிலைமை ஒருபுறம். மறுபுறத்தில், கடந்த காலத்தின் இராணுவ அடக்குமுறையிலிருந்து மூச்சுவிடும் இடைவெளியைத்தானும் ஏற்படுத்த விரும்பாத நிலைமை- பூநகரி இராணுவ முகாமை மூடிவிட ஆணித்தரமாக மறுத்தது முதல், "நானும்



சீருடையணிந்து போர்களத்திற்கு வருவேன்" என்ற பிரதிப்பாதுகாப்பு அமைச்சரின் நம்பிக்கை ஊட்டலும், சிறந்த வழிகாட்டலைக் கொண்ட இராணுவத்தால் போரில் வெற்றியீட்ட முடியுமென்ற ஜனாதிபதி சந்திரிகாவின் கற்பனை வரை பல உதாரணங்களை இதற்கு ஆதரவாகச் சுட்டிக்காட்ட முடியும். இவற்றின் மூலம் இராணுவ அடக்குமுறைகள், மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் வாயிலாக அரசியல் கோரிக்கைகளை முனை மழுங்கச் செய்யும் முன்னைய அரசின் போக்குகளிலிருந்து பதிய அரசு எவ்வகையிலும் விடுபட்டிருக்கவில்லை என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

இத்தகைய நிலைமைகளை உலகம் சீர்தூக்கிப் பார்க்குமெனின், விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டின் அடிப்படையைப் புரிந்து கொள்ள முடியும். தமிழ் பேசும் மக்கள் மற்றுமொரு தடவை ஏமாறத் தயாராக இல்லை என்பதன் வெளிப்பாடே, இன்றைய போர்ச்சூழலுக்கான அடிப்படை என்பதையும் தெரிந்து கொள்ள முடியும்.


எனவேதான் அனைத்துலகத் தொழிலாளர் நாளான - உழைக்கும் மக்களின் உரிமைக் குரலான இத்தினத்தில் ஈழத்தமிழர்கள் நடத்தும் விடுதலைப்போர் தாயக விடிவுக்கானது என்பதை உலகம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே ஈழத்தமிழரின் எதிர்பார்ப்பாகும்.

**- இளையவன்**

# உரிமையை வலியுறுத்தும் பெருநாள்

## 'மே நாள்' அறைகூவல்!

எதிர்வரும் முதலாம் திகதி மே நாள். இந்நாளே அனைத்துலக தொழிலாளர் நாளுமாகும். பாட்டாளி வர்க்கத்தினரும் ஒடுக்கப்பட்ட மக்களும், தமது உரிமைகளுக்காக உரைத்துக் குரல் கொடுப்பதும் இந்நாளே.





உரிமையுடன் உறவாட தமிழனுக் கென்றோர் நாடில்லை. ஆட்சி அதிகாரமுமில்லை. அதனால், தமிழன் பல்வேறு ஒடுக்குமுறைகளையும் அனுபவிக்கும் அடிமைப்பட்ட இனமாகவே உலகெங்கும் பரந்து வாழ்கின்றான். தமிழ் மக்கள் மீது, சிங்கள பௌத்த பேரினவாதிகளினால் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அடக்குமுறைகளே இன்று அனைத்து அடக்குமுறைகளிலும் மேலோங்கி நிற்கின்றது. எம்மண்ணையும் எம்மக்களையும் ஆக்கிரமித்து நிற்கும் பேரினவாதப் பேய்களோடு சேர்ந்து, எம்மினத்தில் முளைத்த கூலிப்பிசாசுகளும் எம்மக்கள் மீது அராஜகம் புரிகின்றன. எம்மக்களை ஓட ஓட விரட்டுகின்றன.

இருந்தும் எம்மக்கள் தம்மீது போடப்பட்டுள்ள அடிமை விலங்கை ஒடிக்க, ஒடுக்குமுறைகளை உடைத் தெறிய, உரிமைகளை வென்றெடுக்க விடுதலைப்புலிகளின் தலைமையின் கீழ் ஓரணியில் நின்று போராடி வருகின்றனர். தமிழீழ மக்களின் அடிமை விலங்கை ஒடிக்க, இழந்த உரிமைகளை மீட்டெடுக்க உலகத் தமிழினமே ஒன்றுபடு1

### தமிழீழ மக்களின் உறுதிக்கு, உணர்வுக்கு நாமும் வலு சேர்ப்போம்1

* பேரினவாத விலங்கொடிக்க பொங்கும் பெருவெள்ளமென எங்கும் அணி திரள்வோம்!

* அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக, பொங்கி எழுவோம்!

* தமிழீழ மக்களின் உணர்வுக்கும் உறுதிக்கும் வலு சேர்க்க மே நாள் பேரணியில் நாமும் எழுச்சி கொள்வோம்!

* தமிழீழத் தேசியத் தலைவரின் தலைமையில் தமிழீழத்தை வென்றெடுக்க பங்களிப்போம் வாரீர்!

### "மே" நாள், உழைப்பவர் மாநாள்!

துஞ்சி வரும் பாட்டாளி
துயரேறி மிதித்தாலே
அஞ்சி விழுகின்றான்
அவலம்!

கஞ்சி வரும்
காலம் எது தோழா? !
காத்திருந்த மேனியதன்
கோலஞ் சிவப்பாகிக்
கொளுத்து!

தோலோ வியர்வை
தோழமை பூணக்,
காலடி வைத்தார் வயலில்! – அட
கவலைகள் தானவர் அயலில்!

எலும்போட தோலுரச
எழுந்தாலும் உழைப்பென்று
தழும்போட விழுகின்றாய்
தவித்து!

எழும்போதோ,
நீ வளர்த்த பூமிதில்
நீ வாழ வழியிலையேல்
தீ வளர்த்து வாடா
திளைத்து!

– பாரதிசீலன்


ஒன்றுபடுவோம்

மே 1 1997



மாபெரும் மேதினப் பேரணி

C.G.T. தொழிலாளர் அமைப்புடன் இணைந்து தமிழ் மக்கள் நடத்தும் பேரணி

உலகத் தொழிலாளர்களுடன் கரம் கோர்த்து

உலகுக்கு நாம் ஒரு சேதி சொல்வோம்

தமிழீழத்தை விட்டு சிங்கள இராணுவம் வெளியேறு !
எமது தமிழீழ தொழிலாளர்களும் மீனவர்களும் மீள, சுதந்திரமாக தொழில்புரிய அனுமதி !

பட்டினியால் பற்றி எரியும் எம் தேசத்து துயரங்களை சத்தமிட்டு உரைத்திட திரண்டு வாருங்கள் !
உலகத் தொழிலாளர்களின் கரம் பற்றி எங்கள் தேசத்து விடுதலைப் போருக்கு பலம் சேர்ப்போம் !

**ஒன்றுகூடும் இடம்: Place de la Republique**

**ஊர்வலப் பாதை : Republique - Basille - Nation**

**நேரம் :** பிற்பகல் 2 மணி

மேலதிக தொடர்புகட்கு: தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - பிரான்ஸ் ( 01 43 58 11 42 )

# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் பன்னிரெண்டு

(தொடர்ச்சி)

அந்த மாதப் பின்பகுதியில், யூதர்களைப் பிடிக்க ஜெர்மனியர் வலை விரித்தனர். ஒரு யூதன் கூட பிடிபடுவதற்கு அங்கிருக்கவில்லை.

கரேன், தீங்கெதுவும் இல்லாமல் கொப்பன்ஹேஹனில் ஹான்சன் தம்பதியினருடன் இருந்தாலும், இத்தீர்மானத்திற்கான பொறுப்பு பெரிதும் மேற்றாவையே சார்ந்திருந்தது. அந்த நிமிடத்திலிருந்து ஜெர்மன் ஆக்கிரமிப்பு ஒரு நீடித்த துர்க்கனவு போலாமிற்று.




டசின் கணக்கான புதிய வதந்திகள் அவளைப் பதற்றத்திற்கு உள்ளாக்கின. மூன்று, நான்கு முறை கரேனுடன் அவள் யூட்லனட்டுக்கு தன் உறவினருடன் ஓடிப்போனாள்.

ஆகே மேலும் மேலும் தலைமறைவு இயக்கத்திலே சேர்ந்தியங்கத் தொடங்கினார். வாரத்தில் மூன்று நான்கு இரவுகள் அவர் போய்விடுவார். இந்த இரவுகள் நீண்டனவாகவும், பயங்கரமானவையாகவும் மேற்றாவுக்குத் தோன்றின.

தற்போது நன்கு ஒருங்கிணைக்கப்பட்டு வழிநடத்தப்பட்ட டென்மார்க் தலைமறைவு எதிர்ப்பியக்கத்தினர் தமது சக்தியை ஜெர்மன் போக்குவரத்துக்களுக்கு எதிராகத் திருப்பினர். ஒவ்வொரு அரைமணிக்கொருமுறை ஒவ்வொரு புகையிரதப்பாதை வெடிவைத்துத் தகர்க்கப்பட்டது. விரைவில் நாட்டின் சகல புகையிரதப் பாதைகளும் சிதறி வீசப்பட்ட புகையிரதங்களால் நிறைந்தன.

மக்களால் மிகவும் விரும்பப்பட்ட ரியொலி பூங்காவை வெடிவைத்துத் தகர்ப்பதன்மூலம் ஹிப்போஸ் தங்கள் பழிவாங்கலை மேற்கொண்டனர்.

டென்மார்க்கியர்கள், ஜெர்மனியர்களுக்கு எதிராக ஒரு பொது வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்தனர். அவர்கள் தெருக்களில் கூட்டம் கூட்டமாக இறங்கி, டென்மார்க், அமெரிக்க, பிரிட்டிஷ், ரஷ்ய கொடிகளோடு கூடிய வீதித்தடைகளை ஏற்படுத்தினர்.

ஜெர்மனியர் கொப்பன்ஹேஹனை முற்றுகைக்குள்ளன நகரமாகப் பிரகடனப்படுத்தினர். ஹோட்டல் டி அங்கல்ரரில் அமைந்திருந்த ஜெர்மன் தலைமைக் காரியாலயத்தில் இருந்து கொண்டு டாக்டர் வேர்ணர் பெஸ்ட் கத்தினார், "கொப்பன் ஹேஹனில் ஒழுக்கமில்லாத கும்பல்கள் சவுக்கடி வாங்கப் போகிறார்கள்." பொது வேலைநிறுத்தம் முறியடிக்கப்பட்டாலும், தலைமறைவு இயக்கம் தன் அழிவு வேலையைத் தொடர்ந்து நடத்தியது.

*புரட்டாதி 19, 1944.*

மக்களைக் கட்டுப்படுத்தத் தவறியதற்காகவும், ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிரானவர்கள் நடவடிக்கைகளுக்கு மறைமுகமாக ஆதரவு வழங்கியமைக்காகவும் டென்மார்க்கின் முழுப் பொலிஸ்படையும் காவலில் வைக்கப்பட்டது. பதிலாகத் தலைமறைவு இயக்கத்தினர், துணிச்சலான ஒரு தாக்குதல் மூலம், நாஸி ஆவண காப்பகத்தை நாசம் செய்தனர். தலைமறைவு இயக்கத்தினர், சிறியரக ஆயுதங்களை உற்பத்தி செய்ததோடு, சுதந்திர டென்மார்க் படைகளுடன் சேர்ந்து கொள்ளப் போராளிகளைச் சுவீடனுக்குக் கடத்திச் சென்றனர். அது தனது ஆத்திரத்தை, ஹிப்போஸ்மீது திருப்பி, ஹிப்போஸ் அங்கத்தினர் சிலரையும், டென்மார்க் துரோகிகள் சிலரையும் விரைவாகக் கொன்றொழித்தனர். சினமடைந்த ஹிப்போசும், ஜெர்மனியரும் இரக்கமற்ற பழிவாங்கும் முறையிலான கொலைகளைச் செய்வதில் ஈடுபட்டனர்.

இச்சமயத்தில் ஜெர்மன் அகதிகள், எல்லைகளுக்கூடாக வந்து குவியத் தொடங்கினர். இவர்கள் நேச நாட்டினரின் குண்டுவீச்சால் வெளியேறியவர்கள். அவர்கள் நாடெங்கும்பரவி, கேட்காமலே உணவையும் இல்லிடங்களையும் எடுத்துக்கொள்ளத் தொடங்கினர். இவர்கள் டென்மார்க் மக்களிடமிருந்து திருடவும் சுரண்டவும் தொடங்கினர். டென்மார்க் மக்கள் இந்த அகதிகளை மிகுந்த அலட்சியத்துடன் நடத்தினர். 1945 சித்திரைமாதமான போது ஏராளமான வதந்திகள் உலாவின.

*1945 வைகாசி.*

அப்பா! அம்மா! போர் முடிந்துவிட்டது! போர் முடிந்துவிட்டது!

### அத்தியாயம் பதின்மூன்று

வெற்றிவீரர்கள் டென்மார்க்கினுள் பிரவேசித்தனர் – பிரிட்டிஸ், அமெரிக்க, சுதந்திர டென்மார்க்கின் படைகள் அது ஒரு மறக்கமுடியாத வாரம் ஹப்போசுக்கும், டென்மார்க் துரோகிகளுக்கும், டொக்டர் வேர்ணர் பெஸ்ட்டுக்கும் கெஸ்டாபோவிற்கும், பதிலடி கொடுத்த வாரம். மிகுந்த கல்கலப்பாகவும் வெறிபிடித்தது போல் மகிழ்ச்சியாயிருந்த வாரத்தின் உச்சக்கட்டமாக வயோதிப அரசர் கிறிஸ்ரியரின் டென்மார்க் பாராளுமன்றத்தை மீள ஆரம்பித்து வைத்தார். உணர்வலைகளால் உடைந்த களைப்பான குரலில் ஆனால் மிக்கப் பெருமையுடன் அந்நிகழ்ச்சியில் பேசினார்.

மேற்றா, ஆகே ஹான்சன் தம்பதியினருக்கு ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட முதல்வாரம் பெரும் சோகமான வாரமாக இருந்தது. ஏழு வருடங்களுக்குமுன், ஒரு குழந்தையை ஆபத்திலிருந்து காப்பாற்றி, ஒரு நல்ல இளம் நங்கையாக அவளை மலர வைத்திருந்தனர். அவ்வளவு அழகான பெண் அவள். கரேன் மகிமை, அழகு, சிரிப்பு ஆகியவற்றின் மொத்த வடிவமாக இருந்தாள். அவளது குரல் தூயதாகவும், இனிமையானதாகவும் இருந்தது. காலில் மந்திரத்தாலான இறக்கைகள் கட்டியது போல் நடனம் ஆடினாள். இப்பொழுது தீர்ப்பின் நாள் வந்துவிட்டது.

ஒருசமயம் சோகத்தின் பிடியில், கரேனை ஒருபோதும் விட்டுக்கொடுக்க மாட்டேன் என்று மேற்றா ஹான்சன் சொன்னது உண்மைதான். ஆனால் இப்போ, மேற்றா ஹான்சன் தனது சொந்த நாகரிகமான வாழ்க்கை முறைக்குப் பலியாக வேண்டியிருந்தது. இப்போது போராட எந்த ஜேர்மனியனும் இல்லை. பதிலாக அவளுடைய நல்ல கிறிஸ்தவ மனமே இருந்தது. ஆகேயும் நடக்க வேண்டியதைப் போலவே தனது டென்மார்க்கிய கௌரவ உணர்ச்சிக்குப் பலியாகினான். விடுதலையானது தங்களை எதிர்கொள்ளக்காத்திருக்கும், கரேன் இல்லாத வெறுமையான வாழ்க்கைக்கும், நினைவுகளால் ஆட்கொள்ளப்படப் போகும் இரவுகளைப்பற்றிய பயத்தைக் கொண்டு வந்தது. ஹான்சன் தம்பதியினரும் இந்தக்கடந்த ஏழு வருடங்களில் நிறையவே முதுமையடைந்திருந்தார்கள். போரின் பதற்றங்கள் தணிந்ததும், வாழ்க்கை நிகழ்வுகள் எவ்வளவுதான் கடுமையாக இருந்தாலும், மகிழ்ச்சி கொண்டாடவும் எப்படியாவது இடம் கிடைத்தது. முழு டென்மார்க்கும் சிரித்திருக்கும்போது, அவர்கள் மட்டும் சோகமாய் இருக்க வேண்டியிருந்தது. அவர்களுக்குத் தேவையாயிருந்ததெல்லாம், கரேனது அறையில் மணித்தியாலக்கணக்காக நேரத்தைச் செலவிட்டு, அவளைப் பார்த்துக் கொண்டிருந்து, அவளோடு கதைத்துக் கொண்டிருத்தல் மூலம் ஒரு வாழ்நாள் பூராவுக்கும் தேவையான இனிய நிகழ்வுகளைச் சேகரித்துக் கொள்வதே. கரேனுக்கு இந்நிலைமை கிட்டவந்து கொண்டிருப்பது தெரிந்தேயிருந்தது. அவள் ஹான்சன் தம்பதியினரை மிகவும் நேசித்தாள். ஆகே சரியானவற்றை எப்போதும் செய்துவந்த மனிதர். அவரே முதலில் கதையைத் தொடங்கட்டும் என கரேன் காத்துக்கொண்டிருந்தாள்.

விடுதலைக்குப்பின் இரு வாரங்களாக இந்த சோகமேகம் மேலும் கனமடைந்தே வந்தது. கடைசியாக ஒரு மாலைவேளையிலே, இன்னொரு மௌனமான சாப்பாட்டுக்குப்பின் ஆகே மேசையிலிருந்து எழும்பி கைதுடைக்கும் துணியைக் கீழே வைத்தார். அவரின் கனிவானமுகம் சுருக்கம் விழுந்து, குரலும் இலக்கில்லாத பிசிறடித்ததாக இருந்தது. "நாங்கள் உனது பெற்றோரைக் கண்டுபிடிக்க முயற்சி செய்ய வேண்டும். கரேன்.... அதுதான் செய்யவேண்டும்....." சொல்லிக்கொண்டே வெளியே போய்விட்டார். கரேன் வெறுமையாகத் தெரிந்த கதவை ஒருமுறை பார்த்து விட்டு, மேசைக்குக் குறுக்காக மேற்றாவைப் பார்த்தாள்.

"நான் உங்களை மிகவும் நேசிக்கிறேன்." சொல்லிவிட்டு ஓடிய கரேன் கட்டில்மீது விழுந்து, இவ்வித துக்கத்தை அவர்கள் அடையக் காரணமாக இருந்தது பற்றி, தன்னைத்தானே வெறுத்த வண்ணம், விம்மிவிம்மி அழுதாள். இப்பொழுது தன்னைத்தானே வேறொரு காரணத்துக்காக வெறுத்துக் கொண்டாள். அவளுக்குத் தனது கடந்த காலத்தைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது. சில நாட்களில் சர்வதேச அகதிகள் அமைப்போடு தொடர்பு கொண்டனர்.

"இது எங்களுடைய வளர்ப்பு மகள்" என ஆகே அறிமுகப்படுத்தினார். அங்கு இந்த விடயத்துக்குப் பொறுப்பான தொண்டர், விடுதலைக்குப்பிறகு வேலைக்குச் சேர்ந்து சில வாரங்களே ஆகியிருந்தது.

**தங்கள் தாயகத்தை விட்டு அடித்துத் துரத்தப்பட்ட யூத மக்கள் 10க்கு மேற்பட்ட நாடுகளில் குடியேறியிருந்தார்கள். ஆனால் 2000 ஆண்டுகளாக, அடுத்த செடார் திருநாளை ஜெருசலேத்தில் கொண்டாடுவோம் என்ற வசனத்தை அவர்களது வருடாந்த செடார் பண்டிகையின் போது பிராத்தனையின் இறுதியில் கூறி வந்தார்கள்.**

**லியோன் யூரிஸ்**

ஆயினும் ஆகே, கரேன் போன்றவர்கள் பலரைக்கண்டு, மிகவும் சலித்துப்போய் விட்டாள். இப்படியான கொடுமைகளில், தொடர்ந்து கொண்டிருந்த நாட்களில் பங்கெடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. டென்மார்க், ஒல்லாந்து, பெல்ஜியம், பிரான்ஸ் எங்கிலும் இதைப்போலவே பிள்ளைகளை ஒளித்து வைத்துக் காப்பாற்றி வளர்த்தெடுத்து விட்ட பல தம்பதிகள், தங்கள் தங்கள் முயற்சிக்கான கசப்பான பரிசுகளைப் பெற்றுக்கொள்ள முன்வந்து நின்றனர்.

"நீங்கள் நீண்டகால முயற்சியொன்றிற்குத் தயாராக இருக்கவேண்டும். ஐரோப்பா எங்கும் கோடிக்கணக்கானவர்கள் இடம் பெயர்ந்து இருக்கிறார்கள். பிரிந்த குடும்பங்களை ஒன்றுசேர்க்க எவ்வளவு காலம் பிடிக்கும் என்று எங்களுக்கே சரியாகத் தெரியாது."

தெரிந்த எல்லாத் தகவல்களையும், தெரிந்த எல்லா உறவினர்களின் பெயர் விபரங்கள், கடைசியாக அவர்களிடம் இருந்து கிடைத்த கடிதங்கள் போன்றவற்றை அவளிடம் விட்டுவிட்டு வந்தனர். கரேனுடைய குடும்பம் மிகப்பெரியதாக இருந்ததும், கரேனுடைய தந்தை மிகப்பிரபல்யமானவராக இருந்ததும் அவர்களைக் கண்டுபிடிக்க உதவும் என நினைத்தாலும் அப்பெண்மணி அவர்களுக்கு

தொடரும்...

## சிறுகதை

# சிறையிருப்பு

– முல்லைக்கோணேஸ் – (தமிழீழம்)

அந்த அறையின் யன்னலோரத்திலிருந்த மேசை, புத்தகங்களாலும் கொப்பிகளாலும் நிறைந்திருந்தது.

மேசையின் முன்னால் கதிரையில் அமர்ந்தபடி, மனோ வெளியே பார்த்தான். தெரு வெறிச்சென்றிருந்தது. இந்தப் பட்டப்பகலில் இப்படி ஒரு அமைதியா என்று நினைக்கும்படியாக எந்தச் சலனமுமில்லாமல் வீதியோர மரங்களும் அசைவற்று நின்றிருந்தன.

மிக நீண்டநேரம் கழித்து ஒரு சைக்கிள் யன்னலைக் கடந்து அவனது பார்வையிலிருந்தும் விலகி இடதுபக்கமாய்ச் சென்று மறைந்து விடுகிறது.

தெருவைத் தாண்டி வலது பக்கமாய் நூறு மீற்றர் தூரத்தில் அமைந்திருந்த மீன்சந்தையில் இப்போது நாலைந்து சனங்கள் நடமாடத்தொடங்குவதைக் காணமுடிகிறது.

சிலர் மீன்களைக் கொண்டுவந்து கொட்டிவிட்டு குழையால் வீசியபடி குந்தியிருக்கின்றனர். அதிலும் வயதான பெண்கள்தான் அதிகமாய்த் தெரிந்தார்கள்.

மீன்வாங்குதற்காக எப்போதாவது ஒருவர் வந்து வாய்த்தர்க்கம் ஒன்றும் இல்லாமலே மீனை வாங்கிக்கொண்டு வந்தவேகத்துடனேயே சென்றுவிடுகிறார்.

வேட்டி கட்டிய ஒரு நடுத்தர வயதுக்காரர் கையில் பையுடன் சந்தையை நோக்கி நடந்து வருகிறார். அவர் மலங்க மலங்க விழித்தபடி நடையில் பதற்றம் தெரிய வந்து கொண்டிருப்பது இங்கிருந்து பார்க்கவே தெளிவாகத் தெரிகிறது.

வந்தவர் சந்தையின் உட்பகுதியை பார்வையால் துழாவுகிறார். கிலிகொண்ட அவரது முகம் பார்ப்பதற்கு சவமாய்த் தெரிந்தது. அதுகள், மதிலோடு மதிலாய், மரத்தோடு மரமாய் ஒட்டி நிற்கின்றனவா என நின்று அவதானித்து, அவரது கண்கள் தேடியலைந்தவைகள் இரு புறமும் இல்லையென்று உறுதி செய்த பின்னரே "அப்பாடா" எனக் கூறுவது போன்ற நிம்மதி முகத்தில் தெரிய சந்தைக்குள் நுழைகிறார்.

சிவனே! என்று இயல்பாய் நிற்கும்போது அவைகள் எதிர்பாராத நேரத்தில் முன்னால் முகம் காட்டி அச்சுறுத்துவனவாய் இருந்தன." அவ்வாறான நேரங்களில் ஈரல் கலங்கிப்போய் உடலெல்லாம் வெடவெடக்கும்.

இப்போதெல்லாம் யாரும் யாருடனும் நின்று கதைத்துச் சிரித்துப்போவதைக் காண முடிவதில்லை. ஏதோ கிலிபிடித்தவர்களது முகங்களைப்போலவே பீதியில் வெளிறிப்போய்க் காணப்படுகிறது. எப்போது, எங்கே தமக்கு என்ன நேருமோ என்ற பீதி கொண்டவர்களாகவே திரிந்தார்கள்.

முன்னரென்றால் சந்தையில் ஏற்படும் கலகலப்புக்கூட அறைவரைக்கும் தெளிவாய்க் கேட்கும். சனங்கள் மீன் வாங்குவதற்கென்று வந்து குவிவார்கள். கார்த்திகை மார்கழியில் பெய்யுற மழையில கடல் கலங்கிப்போய் தை மாதத்தில றால் நன்றாய்ப்பிடிபடும். அந்த நேரம் சந்தை நிறைந்து போய்க் கிடக்கும்.

பெட்டியில் கொண்டு வந்த றாலைக் கொட்டிவிட்டு. மடித்துக்கட்டிய சாறத்திலிருந்து தண்ணீர் சொட்டச் சொட்ட நின்று கொண்டிருப்பார்கள். முண்டியடித்துக்கொண்டு சனங்கள் அங்குமிங்கும் அலைவார்கள்.

அப்போதைய சந்தையின் சோபிதம் கண்களுக்குள் வந்து மறைந்தது.

'இந்தக் கிறீச்சிடும் கதிரைக்கும் எனக்கும் தான் எவ்வளவு நெருக்கமான உறவாகிவிட்டது' நினைத்துக் கொண்டே இரண்டு கைகளையும் உயர்த்தித் தலைக்குப் பின்புறமாகக் கோர்த்து சோம்பல் முறித்துக்கொண்டான்.


கல்லூரி வகுப்பு நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களிலெல்லாம் இந்தக் கதிரையிலிருந்தபடியே யன்னலூடு தெரியும் தெரு வெளியைப் பார்த்தபடி இருப்பதுதான் தொடரும் விடயமாகிப் போய்விட்டது.

'லெக்சரு'க்குச் செல்லும் போதும் முடிந்து வரும் நேரங்களிலும் உடலில் உயிரே இருக்காது. வழியில் அவர்கள் உறுக்கி உறுக்கிக் கேட்கும் புரியாத மொழிக் கேள்விகளால், நாவரண்டு உதடுகள் ஒட்டிக்கொள்ளும். நெஞ்சு 'படக்... படக்' என்று வேகமாய் அடிக்கும்.

வகுப்பில் படிக்கும்போது கூட இந்தப் பயமுறுத்தல் ஞாபகங்களே வந்து விடுகின்றன. பாடங்களில் கவனம் தவறிவிடுகிறது. முழத்துக்கு முழம் முளைத்துள்ள அரண்களிலெல்லாம் விசாரணை முடிந்து 'றூமு'க்கு வரும்போது தான் ஓரளவு உயிர் வந்தது போலிருக்கும்.

போன வாரம் கூட மருத்துவ பீடத்தில் படித்துக்கொண்டிருந்த மூன்றாம் வருட மாணவி ஒருத்தி திடீரென்று காணாமல் போய்விட்டாள். அவளை அவனுக்கு நன்றாகவே ஞாபகம் இருந்தது. தலைமுடியை 'டயான ஸ்ரைலில்' வெட்டியிருந்தாள். நல்ல நிறம். வட்டமுகத்தில் நாடி மட்டும் கொஞ்சம் சின்தாய் இருக்கும் கைகளிலும் காதோரங்களிலும், மெல்லிய ஆனால் கருப்பான ரோமங்கள் கவர்ச்சியாய்த் தெரிய வளர்த்திக்கேற்ற உடலமைப்புப் பொருந்தி மிகவும் அழகாக இருந்தாள்.

அவளுக்கு அண்ணனோ, தம்பியோ அல்லது அண்ணன்களோ, தம்பிகளோ நல்ல வருவாய் உள்ள நாடுகளில் தங்களைக் கரைத்திருக்க வேண்டும். அவ்வளவு பணச்செழுமை அவள்



ஆடைகளில் தெரிந்தது.

மாணவர்களிடையே அநேகமாக அவள்தான் கதாநாயகியாக இருந்தாள். எல்லோரிடமும் வளவளவென்று ஏதாவது பேசிக்கொண்டேயிருப்பாள். விழாக்களில்கூட அவள்தான் அதிகமாகப் பங்கேற்றாள்.

'லெக்சர்' முடிந்து வரும் நேரங்களில் அவள் நிறத்தையொத்த கண்ணாடி போட்ட இன்னுமொரு மாணவி அவளுடன் கூடவே சைக்கிளில் வருவதையும் அவன் பார்த்திருக்கிறான். அவள் காணாமல் போய்விட்ட பிறகு, அந்தக் கண்ணாடித் தோழி கொஞ்ச நாள் வளாகப் பக்கமே வரவில்லை. இருவாரம் கழித்து அவளை அவளது பெற்றோர்கள் படிப்பை நிறுத்தி வீட்டோடு மறித்துவிட்டார்களாம் என்று அறிந்தான்.

மேசைமீதிருந்த புத்தகங்களின்மீது பார்வை தாவியது. படிக்கிற 'மூட்'டும் இல்லை... திவாகரன்ர றூமுக்கும் போய் அவனோட கதைச்சுப்போட்டுவந்தாலே படிக்கிற 'மூட்' வந்துவிடும். "என்னடா மனோ!... எப்பிடி இன்றைக்கு லெக்சரெல்லாம்? 'பொலிற்றிகல் நோட்ஸ்' ஒழுங்காய் எடுத்தியா? இல்லேண்டால் என்ர 'நோட்ஸ்'சைக் கொண்டுபோய் எழுதிப்போட்டு நாளைக்குக் கொண்டுவா! டேய்! என்னதான் நாங்கள் பண்ணிலாலும் படிப்பில மட்டும் அக்கறையாய் இருக்கவேணும். வீட்டில எங்கட தாய் தகப்பன் எவ்வளவு கஸ்ரப்பட்டு எங்களை இங்க படிக்கவிட்டிருக்குதுகள்" என்றெல்லாம் கூறும்போது அவனது பக்குவமான வார்த்தைகளைக்கேட்ட மறுநிமிடமே படி படி படியென்று ஒரு அகோர வெறி எழும்பும். 'றூமை' விட்டு இருவரும் வந்து வெளியில் வந்து எதிரே இருக்கும் தேநீர்க் கடையில் 'ரீ' குடித்துவிட்டு சைக்கிளில் கிளம்பினால் தெரு என்னமாய்க் களைகட்டியிருக்கும். சிரிப்புகளும், குதூகலங்களும், அதையும் தாண்டிய இதயம் நுழையும் பார்வைகளும் சே!... என்ன வாழ்க்கையப்பா. திவாகரனும் என்னைமாதிரித்தான் 'றூமில' அடைஞ்சுபோய்க் கிடப்பான்.

ஒரு கணம் திவாகரனது 'றூமு'க்குப் போய்வருவோமோ என்றும் எதற்காக இப்படிப் பயந்து அடைபட்டுக்கிடக் வேண்டும் என்றும் நினைத்தான். மறுகணமே அது எவ்வளவு அபத்தமானது என்பதை உணர்ந்தவனாய் அலுத்துக்கொண்டான்.

விடிஞ்சதுக்கு இந்தத் தெருவால ஏதும் இளசுகள் போயிருக்கே பக்கத்து வீட்டு சுலோ அன்ரியாக்கள் இருக்கும் போதென்றால் அடிக்கடி அவவும் பிள்ளைகளும் வந்து பம்பலாய்க் கதைச்சிட்டுப் போகுங்கள். வீட்டில ஏதாவது தின்பண்டங்கள் செய்தாலும் கொண்டுவந்து தருங்கள். இப்ப..?

அந்த வீடு திறந்து கிடக்கிறது. வீட்டைச்சுற்றிப் புல் முளைத்திருக்கிறது. வாசற்படியோரம் நிழலுக்காய் ஒதுங்கிய நாயொன்று நாக்கைத் தொங்கப் போட்டபடி இளைப்பாறிக்கொண்டு கிடக்கிறது.

'சுலோ அன்ரியாக்கள்' கொடுத்து வைச்சதுகள். வன்னியில எங்கேயோ ஒரு இடத்தில நிம்மதியாய்... சுதந்திரமாய்...

இறங்கு வெயில் சந்தைக் கட்டிடத்தில் மஞ்சள் அடித்தது.

மாலையாகியதால் பயமும், பதற்றமும் அவனைச்சூழ்ந்து கொண்டது.

பகல் நேரத்தில் என்னதான் பயமிருந்தாலும் அது அவ்வளவு கனதியாய் அவனுக்குத் தெரிவதில்லை. இரவாகிப் போனால் நெஞ்சே காய்ந்துபோய், எப்போது விடியும் என்றிருக்கும்.

இரவு பூராவும் தூங்குவதும் அடிக்கடி திடுக்குற்று விழிப்பதுமாய் அழியும்.

விடிந்தால் இரவுத் தூக்கம் சீரில்லாததால் தலையிடிக்கும். கல்லூரிக்கும் போகவே மனம் வராது.

நிலாக் காலமாதலால் இருளின் பூதாகரம் ஆங்காங்கு கட்டிடங்களில் மூலை முடுக்குகளிலும், மரங்களின் கீழும் உறைந்துபோய்க்கிடந்தது. சந்தைக் கட்டிடத்தின் மேற்கூரையில் பக்கத்தில் நின்றிருந்த மரக்கிளையின் நிழல் அசைந்தது. மீதி இடம் வெளேரென்றிருந்தது. உட்பக்கம் இருள் அப்பிப்போயிருக்க, வெளிப்புறத்தில் மாடொன்று படுத்துக்கிடந்தபடி வாலசைப்பது தெரிந்தது.

படிப்பதற்காய்ப் புத்தகத்தை விரித்தபடி பார்த்துக் கொண்டிருந்தானே தவிர, புலன் மட்டும் எங்கோ அலைந்தபடி இருந்தது. தாறுமாறாய் ஒற்றையைப்புரட்டியபடி இருந்தான். ஒற்றையைப் புரட்டும் 'சரக் சரக்' ஒலி கூட ஒருவித அச்சத்தை உண்டுபண்ணியது.

புத்தகத்தை மூடினான். திடீரென்று வெளியில் தெருப்பக்கம் ஏதோ அரவம் கேட்டவே, லாம்பை எடுத்து அவசர அவசரமாகத் திரியை தணித்துவிட்டு ஹோலில் கொண்டு வந்து வைத்தான். மீண்டும் அறைக்குள் சென்று கதிரையில் அமர்ந்தபடி அறையெங்கும் கப்பிக்கிடந்த இருளில் இருந்தவாறே யன்னலூடே வெளியில் பார்த்தான். தூரத்தில் ஒரு எலி ஓடினால்க்கூட காணக்கூடியளவிற்கு தெரு நிலவில் பளிச்சென்றிருந்தது.

ஒரு கணம் வீதியின் இரு மருங்கிலும் பிசாசுகள் வரிசைவரிசையாக வருவதாக... நரபலி கொள்ளும் ஆயுதங்களைக் கைகளில் ஏந்தி வருவதாகக் கண்களில் தெரிந்தது.

நெஞ்சு குபீரென்று பயத்தால் பட படக்க கைகால்கள் லேசாய் ஆட்டம் கண்டன. நன்றாக உற்றுப்பார்த்தான். தெரு வெறிச்சோடிக் கிடந்தது. நின்ற மூச்சு வந்ததுபோல் இருந்தது.

மரக்கிளைகள் சல சலப்பில்லாமல் அசைந்து கொண்டிருந்தன. அந்தக் கிளைகளுக்கு மேலால் நிலவு எட்டிப்பார்த்தது.

நிழலலென்றால் அவனுக்குப் பிடிக்கும். ஊரில் இருக்கும்போது வீட்டு முற்றத்தில் தம்பிமாருடன் நிலவைப் பார்த்து ரசித்தவண்ணம் நீண்ட நேரம் கதைத்துக்கொண்டிருப்பதும், அவர்கள் உறங்கிவிட்டதன் பிறகும் தென்னங் கீற்றுக்களிலும், மாமரக் கிளைகளைளிலும் நிலவொளி சிந்திக் கிடக்கும். அந்த மனோகரமான பொழுதுகளில் தனிமையில்

தொடர்ச்சி 14 ம் பக்கம்...

# சிறையிருப்பு....

கொஞ்ச நேரம் முற்றத்தில் உலாத்துவதும் அவனுக்குப் பிடித்தமானது.

நிலவின் தோற்றம் அவனைக் காட்டிக் கொடுக்கும் ஒரு உளவாளியாய் அச்சுறுத்தியது. அதன் அழகு பொய்யாகவும், கொடூரமுள்ளதான இன்னுமொரு முகம் அதற்கு இருப்பதாகவும், இப்போது தெரிவது கொடூரமானதாகவும், நிறைய அசுத்தங்களை எல்லாம் தன்னில் கொண்டுள்ளதாகவும் அவனுக்குப் பட்டது. இதை விட அமாவாசை இருட்டே எவ்வளவோ மேல் என்று தோன்றியது.

அதன் ஒளியில் உலாவி வரவேண்டுமெனறோ அது முகில்களுக்குள் ஓடி ஒளிந்து கொள்வதை ரசிக்க வேண்டும் என்றோ அவனுக்குத் தோன்றவில்லை.

கதிரையைவிட்டு எழும்பி வந்து ஹோலில் வைத்த லாம்பை எடுத்துத் திரியைத் தூண்டிக் கொண்டே அறைக்குள் திரும்பச் சென்று மேசையில் வைத்தான்.

எரிச்சலாக இருந்தது. இந்த அங்கிளையும் காணேல்ல.முந்தியெண்டால் படிக்கவிடாமல் வந்து அலட்டிக் கொண்டிருக்கும்... அப்போதெல்லாம் தொடர்ந்து இந்த 'றூமில' இருக்க வேணுமென்பதற்காகவே அவரைத் திருப்திப்படுத்த எஙகோ புலன விழுத்திக் கொண்டு "ம்... ம்...' எண்டு கதை கேட்கிறது. இப்ப மனுசன் தானும் தன்ரபாடும் எண்டு இருந்திடுற தோடில்லாமல் ஏழுமணிக்கெல்லாம் தன்ர 'றூமில' போய் அடைஞ்சு கொள்ளுது.

'விர்றூம்' கதவு திறக்கும் ஓசையும் தொடர்ந்து ஹோலில் நடந்து வரும் சத்தமும் கேட்டது. திரும்பிப் பார்த்தான். 'அங்கிள்' ஓசைப்படாமல் அவனது அறைக் கதவைத் திறந்தார்.

பளுப்பு நிறச் சாறமும், வெள்ளை அரைக்கை பெனியனோடும் வந்தவர் கண்களைச் சுருக்கியபடி அவனைப் பார்த்து "மனோ! இரவில் கன நேரம் படியாதையும். லாம்பு வெளிச்சம் தெருவுக்குத் தெரியும். நேரத்தோட நூத்துப்போட்டுப் படும்" குசுகுசுத்தார்.

"ஓமங்கிள்"

"மனோ யன்னலைத் திறந்து போட்டிருக்கிறீர், அடிக்கடி அவங்கடை வாகனம் வரும் படிக்கிற பொடியள் எண்டிருக்கோ, படியாத பொடியள் எண்டிருக்கோ" என்று கூறிக் கொண்டே அவரே இழுத்துக் கதவை அடைத்துவிட்டுப்போனார்.

நேரம் எட்டு மணியைத் தொட்டிராத அந்த முன்னிரவிலும் எந்தச் சலனமும் இல்லாமல் நிசப்தம் நீண்டு கொண்டே போனது. இராப் பூச்சிகளின் 'குய்' என்ற சத்தம்தான் எங்கும் ஒலித்தது.

ஊரை நோக்கிய நினைவுகள் வந்து வந்து போயின.

'தம்பி! உனக்கென்ன வயசே போட்டுது? ரெண்டு வருசம் கழிச்சுப்போனால் என்ன? அடுத்தடுத்த வருசத்தில நாட்டுச் சீரப்பாத்து போய்ப் படியன்'

'இல்லேய்யா. என்ர 'பச்' பொடியள் எல்லாம் போட்டாங்கள் நான் மட்டும் நிண்டால் ஒரு வருசம் வீண்தானே"

"ஏதோ எனக்கெண்டால் நல்லாய்ப் படேல்ல. நீ போறன் எண்டு நிக்கேக்க இனி மறிக்கிறதில்ல பயனில்ல. நல்லபடியாய்ப் போட்டுவா.' கடைசி நேரத்தில் 'பஸ்' ஏற முதல் ஐயா கூறியது காதுகளில் ஒலித்தது. இப்ப நெஞ்சுக்குள் வலித்தது.

சே! எவ்வளவு தப்புப் பண்ணிட்டன். ஊரில இருந்து இவ்வளவு அவசரப்பட்டு யாழ்ப்பாணம் வந்திருக்கவே கூடாது.

இரவின் அமைதி அந்தகாரமாயிருந்தது.

"ங்கொ.....மியாவோ" குழந்தை ஒன்றின் அழுகுரலைப்போல ஆரம்பித்து, இரவின் அமைதியைக் குலைத்துப் பயங்கரமாக ஒலி எழுப்பியது கடுவன் பூனை ஒன்று. சற்று நேரத்தில் வேறும் சில பூனைகள் சேர்ந்து எழுப்பும் அருவருப்பான ஒலிகள் ஒருகணம் பயத்தைத் தருவித்தன. கொஞ்ச நேரம் ஆடாமல் அசையாமல் அப்படியே இருந்தான்.

"சனியனுகள்" என்று திட்டிக்கொண்டே லாம்பை அணைத்து விட்டு எழும்பும்போது கதிரை கிறீச்சிட்டது.

ஓசைப்படாமல் கட்டிலில் சாய்ந்தான்.

ஊர் நினைவுகள் தான் அடிக்கடி வந்து அம்மாவைப் பார்க்க வேணும் போல் ஆசையாய் இருந்தது.

எங்கோ தூரத்தில் ட்ரக் வண்டிகளின் இரைச்சல் ஒன்றன்பின் ஒன்றாய் கேட்டது. நெஞ்சு 'திக் திக்' என்று அடிக்க, கை கால்கள் சோர்ந்து போய் கிடந்தன. உடலெங்கும் அசைய முடியாதபடிக்கு ஆணி அடித்து இறுக்கியது போல் அப்படியே கிடந்தது. அங்கங்களின் ஒவ்வொரு முனையிலும் ஏதோ ஒரு எரி திரவம் ஊற்றப்படுவதாய்.... அது கொஞ்சம் கொஞ்சமாக அரித்து அரித்து உடலுறுப்புக்களையும் சல்லடைக் கண்களாக்குவதாய்... அவஸ்தைப்பட்டான்.

'ட்ரக்' வண்டிகளின் இரைச்சல் நெருங்க நெருங்க வாழ்வின் கடைசி நிமிடங்களுக்கும் மரணத்துக்கும் இடையிலான பெரும்பாடு.

ஐயா, அம்மா யாருமே இல்லாத இடத்தில் அநாதரவாகப் பிடிபடப்போவதை நினைத்துப்பார்த்தான். அவனது முகத் துக்கு மேலே ஏராளமான பிசாசுகளின் மூர்க்கத்தனமான முகங்கள் கெக்க லித்தபடி வருவதாய்... கண்களை இறுக மூடிக்கொண்டான்.

வந்த 'ட்ரக்' குகள் சந்தை முடக்கால் திரும்பி, வடக்கு நோக்கிப் போவதாகச் சத்தம் ஓய்ந்து போனது.

கொஞ்சம் கொஞ்சமாய் இதயத் துடிப்பு சீராகியது. மனசில் நிம்மதியை வரவழைக்க மிகவும் பிரயத் தனப்பட்டுக்கொண்டு படுத்திருந்தான்.

'இரவு ஏதோ ஒரு ஊர் சுற்றி வளைக்கப்படும். அதிகாலையில் தாம் தூம் என்று கதவு தட்டப்படும். திறந்தால் குலைநடுங்க வைக்கும் பீதியைத்தரக் கூடிய கொடிய தோற்றத்தில் தலைக்கவசமும் துப்பாக்கியுமாய் குவிந்து போய் நிற்பர். வீட்டில் உள்ள இளசு பழசெல்லாம் விசாரணைக்கென்று அழைத்துச் செல்லப்படுவர். அவர்களில் யார் யார் திரும்புவார்களோ? எத்தனை பேர் மிஞ்சுவார்களோ?

தூக்கமின்றி கட்டிலில் புரண்டபடி கிடந்தான். இரவு இருளில் கரைந்து கொண்டிருந்தது. ✷

# தமிழீழ விடுதலைப் போர் விடுதலைப் புலிகளின்.....

நூற்றிமுப்பது படையினர் அலம்பில் கடற்கரையில் பிணமானார்கள். மிகுதிப்பேர் தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று கழுத்தளவு தண்ணீரில் அவர்களைக் காப்பாற்றவந்த கப்பலில் முண்டியடித்துக்கொண்டு ஏறுவதை முல்லைப் பெருஞ்சமர் நேரடிக் காட்சியைப் பார்த்தவர்கள் ரசித்திருப் பார்கள்.

தென் இலங்கையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பேசிய சனாதிபதி சந்திரிகா யாழ்ப்பாணக் குடாநாட்டையும், பரந்தன் – கிளிநொச்சிப் பிரதேசத்தையும், வவுனியா – மன்னார் நெடுஞ் சாலையையும் சிறிலங்கா இராணுவம் பிடித்துவிட்டதைப் பெருமையாகப் பேசியுள்ளார்.

ஐ.தே கட்சியோ தங்களது ஆட்சிக் காலத்தில் தங்கள் கட்டுப் பாட்டிலிருந்த கிழக்கை, சந்திரிகாவின் மக்கள் முன்னணி அரசு விடுதலைப் புலிகளிடம் பறிகொடுத்துவிட்டதாகப் பதிலுக்குக் குற்றஞ்சாட்டியுள்ளது.

எடிபல இராணுவ நடவடிக்கையைக் காட்டி, தேர்தல் மேடைகளில் வீரப்பிரதாபம் பேசிவந்த சந்திரிகா, சீனன்குடா விமானத்தளம், வவுணதீவு, வலையிறவு இராணுவ முகாம்கள் மட்டக்களப்புத் தலைமையகம் மீதான விடுதலைப்புலிகளின் குறிதவறாத அதிரடித் தாக்குதல்களினால் நிலை குலைந்து போனார்.

சென்ற பாராளுமன்ற சனாதிபதித் தேர்தல்களில் யுத்தத்தினால் ஏற்படும் அழிவுகளையும், இரத்த ஆற்றையும் முடிவுக்குக்கொண்டுவந்து நாட்டில் சமாதானத்தையும், சாந்தியையும், சுபீட்சத்தையும் நிலைநிறுத்தப் போவதாகப் பிரச்சாரம் செய்த சந்திரிகா, இப்போது ஐ.தே.கட்சியால் வெற்றி கொள்ளமுடியாத போரை தனது கட்சி வெற்றிகரமாக நடத்திவருவதாக எந்த முகத்தோடு சொல்லி வந்தார் என்பது தெரியவில்லை.

றோகான் தளுவத்த தனது செவ்வியில், விடுதலைப் புலிகள் தங்கள் பயங்கரவாத இயக்கத்திற்குப் பணம் சேர்க்கவும் ஆள் சேர்க்கவும் நம்பியிருந்த தமிழ் மக்களை இழந்து விட்டதாகக் கூறியிருக்கிறார்.

ஏதோ யாழ்பாணக்குடாநாட்டில் இராணு வப்பிடிக்குள் சிக்கிவிட்ட தமிழ் மக்கள், வேறு வழியின்றி வீடு திரும்பிய தமிழ் மக்கள் சிங்கள இராணுவ ஆட்சியை ஏற்றுக்கொண்டு விட்ட தாகவும் அவர்கள் எல்லோரும் இப்போது மகிழ்ச்சிக் கடலில் மிதப்பதாகவும் றோகான் தளுவத்த கனவு காண்கிறார்.

தமிழ் மக்கள் சிங்கள அடக்குமுறை ஆட்சியை, கொடுங்கோலை இந்தப்பிற வியில் மட்டுமல்ல, இனி எந்தப் பிறவியிலும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதே இன்றைய யதார்த்தமாகும்.

சங்கம் வைத்து முத்தமிழ் வளர்த்த இனம், திரைகடல் ஓடித் திரவியம் தேடிய மக்கள், இமயத்தைச் சாடி புலிக்கொடி பொறித்த பரம்பரை, கங்கையும் கடாரமும் வென்ற சந்ததி, சிங்கத்திற்குப் பிறந்த பரம்பரையென்று சொல்லிக்கொள்ளும் காட்டுமிராண்டிகளின் ஆட்சிகளின் கீழ் மண்டியிட்டு வாழுமென்று சந்திரிகா, ரோகான் தளுவத்த போன்றோர் கனவு காணக்கூடாது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இதுவரை ஆமிரத்திற்கும் அதிகமானோர் காணாமல் போயுள்ளார்கள்.

நூற்றுக்கணக்கானோர் சிங்களக் காட்டுமிராண்டி இராணுவத்தினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். வெட்டிப் புதைக்கப்பட்டுள்ளார்கள்.

கிரிசாந்தி குமாரசுவாமி, ரஜனி வேலாயுதபிள்ளை போன்ற அன்றலர்ந்த ரோஜாக்கள் சிங்கள மிருகங்களால் கசக்கப்பட்டு கொலை செய்யப்பட் டுள்ளார்கள். தேனுகா செல்வராசா என்ற மலராத மல்லிகை மொட்டு சிங்களக் காடையர்களால் கசக்கி முகரப்பட்டுள்ளார்.

ரோகான் தளுவத்தையின் சிங்களக் காட்டுமிராண்டிப் படையை, தமிழ் மக்கள் உயிர் பறிக்கும் இயமர்களாகவே பார்க்கிறார்கள். இதுதான் உண்மை. இதுவே யதார்த்தம். இதுவே சத்தியம்.

தமிழர்களின் தாயக பூமியான பரந்தனையும் கிளிநொச்சியையும் சிங்கள இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டி ருப்பதை ஒப்புக் கொள்கிறோம்.

வவுனியா – மன்னார் பாதை திறக்கப்பட்டதையும் மறுக்கவில்லை.

ஆனால் அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் எங்கே?

சிங்கள இராணுவப் பிடியிலிருந்து தப்ப, அந்த மக்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் பூமிக்கு ஓடினார்களா இல்லையா?

அதனாலேயே இப்போது, இத்தனை சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பைப் பிடித்து விட்டதாக சந்திரிகா பிதற்றுகிறாரே ஒழிய, இத்தனை இலட்சம் தமிழ் மக்களை விடுதலைப்புலிகளது பிடியிலிருந்து விடுவித்து விட்டதாக அவரால் சொல்ல முடியவில்லை.

தமிழ் மக்களை, வேண்டுமென்றால் துப்பாக்கி முனையில் மதிற்சுவர்களுக்குப் பின்னால் பதுங்கு குழிகளுக்குள் இருந்து கொண்டு, முழத்திற்கு நாலு இராணுவ சிப்பாய்களை நிறுத்தி ஆள முயற்சிக்கலாமேயொழிய, அவர்களை ஆள முடியாது. அப்படி ஆள நினைப்பது கடைந்தெடுத்த முட்டாள்த் தனம். வடித்தெடுத்த பயித்தியக்காரத்தனம்.

தமிழ் மக்கள் ஆதிவாசிகளாக காடுகளில் கனிகளை உண்டு, பச்சைத் தண்ணீரைக் குடித்து, வானத்தைக் கூரையாக்கி, பூமியைப் பாயாக்கி, கைகளைத் தலையணையாக்கி, சுதந்திரக் காற்றைச் சுவாசித்து வாழ்வார்களே ஒழிய எந்த யென்மத்திலும் சிங்கள – பௌத்த பேரினவாதக் காட்டுமிராண்டி ஆட்சியை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அந்தக் கொடுங்கோல் ஆட்சிக்கு உட்பட மாட்டார்கள்.

விடுதலைப்புலிகள் சீனன்குடா, வவுணதீவு, வலையிறவு இவற்றில் சிங்கள இராணுவத்திற்குச் சொல்லிக் கொடுத்த பாடத்தை மீண்டும் மீண்டும் சொல்லிக் கொடுத்துக் கொண்டே இருப்பார்கள்.

செச்சினியாவிலிருந்து உருசியப் படையை, எரித்திரியாவிலிருந்து எத்தியோப்பியப் படையை அந்தநாட்டுப் புரட்சிப் படைகள் நல்ல பாடம் படிப்பித்து விரட்டியடித்துத் துரத்தியது போல, சிங்களக் காட்டுமிராண்டிப் படையையும் எங்கள் தமிழீழ தாயகப் பூமியிலிருந்து, எங்கள் அப்புவும் ஆச்சியும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் மகிழ்ந்து குலாவியிருந்த மண்ணிலிருந்து, நாங்கள் கண்ணாம் பூச்சி விளையாடித் திரிந்த பூமியிலிருந்து விரட்டும் வரை, சாவுக்கு ஓலை அனுப்பிவிட்டு சிரித்த முகத்துடன் செங்களம் ஆடிவரும் புலிப்படை ஓயப்போவதில்லை. ஏனெனில் தமிழீழ விடுதலைப்போர், விடுதலைப்புலிகளின் ஓயாத அலைகள். ✷

# வன்னிப்பிரதேச நிலவரங்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அபிவிருத்தி வேலைகளும்

## அரசின் நியாயமற்ற செயற்படாத் தன்மை அரசாங்க அதிபரால் விமர்சிக்கப்படுகிறது

இராணு வக்கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு அரசு, உணவு மற்றும் மருந்து வகைகளுக்கு விதிக்கும் தடையால் பல அப்பாவித் தமிழ் மக்கள் உயிரிழந்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார். இவரிடம் ஆயிரக கணக்கான மக்கள் மனிதாபிமானமற்ற முறையில் யுத்த உபாயமாக அரசு செய்யும் இத்தடைகளுக்கு எதிராக ஆட்சேபம் தெரிவிக்கும் ஒன்று கூடலின் பின் கொடுத்த கடிதத்திற்குப் பதில் அளிக்கையில் இவ்வாறு தெரிவித்தார். 1996 இல் அதிர்ச்சி யுண்டாக்கும் வகையில் 75 வீதம் மருந்து விநியோகத்தை அரசு துண்டித்ததாக அரச அதிபர் கூறினார். அரசு பொறுப்புடன் நடந்திருந்தால் தனது மாவட்டத்தில் பல தமிழ் மக்களின் இறப்புக்களைத் தடுத்திருக்கலாம் எனக் கூறினார்.

அண்மைக்காலங்களில் தமிழ் மக்களுக்கெதிரான இராணு வ நடவடிக்கை ஆரம்பமான நாளில் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்திருப்பார்கள் என்று தெரிந்தும் அரசு அவர்களுக்கு நிவாரணம் வழங்க எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் சுட்டிக் காட்டினார்.

## கிழக்கிலங்கையில் வாகரைக்கு மருந்துதவி மறுக்கப்பட்டது

இலங்கை அரசின் அதிகாரிகளால் கிழக்குக் கரை யோரப்பகுதியான வாகரைக்கு மருந்து விநியோகம் நிறுத்தப்பட்டு, அங்கு வாழும் ஆயிரக்கணக்கான தமிழர்களுக்கான வைத்திய நிலையங்கள் யாவும் செயற்பட முடியாத நிலையில் உள்ளன. சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களான செஞ்சிலு வையின் அனைத்துலகச்சபை போன்ற நிறுவ னங்கள் மனிதாபிமான முறையில் நிவாரணம் வழங்க எடுத்த முயற்சியும் இராணு வத்தால் தடைப்படுத்தப் பட்டுள்ளது.

### வன்னியில் புதிய போசாக்கு நிலையம்

கடுமையான உணவு பற்றாக்குறை காரணமாக வன்னிப்பகுதிக்குள் பல போசாக்கு நிலையங்கள் சிறுவர்களுக்காகத் திறக்கப்பட்டுள்ளன. தற்போது இயங்குபவை உட்பட 1996 ஒக்டோபரில் இலங்கை இராணு வம் கிளிநொச்சியில் நிலை கொண்ட நாளில் இருந்து மொத்தமாக 29 நிலையங்கள் செயற்படுகின்றன. ஆரம்பத்தில் ஐந்து வயதிற்குட்பட்ட பிள்ளைகளைப் பராமரிக் கவே இப்போசாக்கு நிலையங்கள் திறக்கப்பட்டன. போசாக்கின்மையால் குறிப்பிடக்கூடியளவு குழந்தைகள் இறந்ததால் தான் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இராணு வம் நிலை கொள் ளாத பகுதிகளுக்கு அரசு போசாக்குணவைத் த்டை செய்தமையே குழந்தைகளின் இறப்புக்குக் காரணமாகும். தகுந்த போசாக்கின்றி வன்னிப் பகுதியில வளரும் குழந்தைகளுக்குச் சரீர மற்றும் மூளை வளர்ச்சி பாதிப்புற்றுள்ளது.

யுத்த ஆயுதமாக இந்த உணவு விநியோகத்தை சிறிலங்கா அரசு பயன்படுத்துவது கவலைக்கி டமானதாகும்.பல தமிழ்ச்சிறார்கள் கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் அதாவது அரசு, வடக்கு, கிழக்கு தமிழ்ப்பகுதிகளைப்பிடிக்க மேற்கொள்ளப் பட்ட இராணு வ நடவடிக்கையின் ஆரம்ப காலகட்டத்தில் இருந்து தகுந்த உண வின்றி இருந்திருககிறார்கள் என அறியப்படு கின்றது.

இப்போது இருக்கும் நிலையங்களை விட மேலதிக மாக இரண்டு நிலையங்களை தமிழர் புனர்வாழ் வுக்கழகம் கடந்த மாதம் திறந்து வைத்துள்ளது. ஒன்று மன்னார், முருங்கன்பிட்டியில் (ஐந்து வயதிற்குட்பட்டோருக்கு) அடுத்துள்ள கிராமங் களில் உள்ள பாலூட்டும் தாய்மாருக்கும், மற்றை யது போசாக்குள்ள குழந்தைகளுக்காக அக்கராய னில் வைபவ ரீதியாக தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தினரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (தொடரும்


### அன்பார்ந்த தமிழ் மக்களே!

**சொந்த மண்ணில் எம் மக்களின் நொந்த நிலையை எண்ணிப் பாருங்கள். காலத்தின் தேவையை அறிந்து இன்று நாம் அவர்களுக்கு உதவத்தவறின், எம் இனத்திற்குப் பெரும் துரோகம் இழைத்தவர்கள் ஆவோம். சிறு துளி பெரு வெள்ளம். இன்னலுறும் எம் மக்களுக்கு நாம் அளிக்கும் சிறிய அளவு பணம் அவர்களின் நல்வாழ்வுக்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கும். எனவே தாமதியாது உதவுங்கள்.**

மேலதிக தொடர்புகளுக்கு
தமிழர் புனர்வாழ்வுக்கழகம்(பிரித்தானிய கிளை)
Registered Charity No: 1010029
79 Hoe Street, Walthamstow,
London E17 4SA
தொலைபேசி இல: 0181 - 520 5876


# தேசிய ரீதியில் நடைபெற்ற மரதன் ஓட்டப் போட்டியும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும்

ஆண்டுதோறும் லண்டனில் நடைபெறும் லண்டன் மரதன் (Marathon) ஓட்டத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவில் இவ்வருடம் 11 வீரர்கள் பங்குபற்றினார்கள்

அவர்கள் ஏற்கனவே Haisting என்ற இடத்தில் நடைபெற்ற 1/2 மரதன் ஓட்டத்தில் Silver, Brounce பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.

தாயகத்தில் போர்ச்சூழலினால் இடம்பெயர்ந்து வாழும் எமது குழந்தைகளினதும் வயோதிபர்களினதும் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்து வரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திட்டங்களுக்கு இம்மரதன் மூலம் சேகரிக்கப்பட்ட நிதி அனுப்பி வைக்கப்படும்.

இப்போட்டியில் கலந்து கொண்டவர்களின் பெயர்கள் வருமாறு

1. M.ராஜேந்திரன்
2. V.ஆனந்தசோதி
3. S.ஈஸ்வரநாதன்
4. O.N.தமிழழகன்
5. R.யோகேந்திரன்
6. S.ராமதாஸ்
7. S.கிருஸ்ணமூர்த்தி
8. K.கலாவண்ணன்
9. N.ஜெயசீலன்
10. R.முருகானந்தன்
11. T.செல்வரத்தினம்

அனைத்து வீரர்களும் இந்த 26 மைல்கள் ஓட்டப்போட்டியை நிறைவு செய்தது குறிப்பிடத் தக்கது.

அப்போட்டியில் கலந்து கொண்ட திரு ஆனந்தசோதியுடன் மெற்கொண்ட சம்பாசணையின் சாரம்சம் வருமாறு:

**கேள்வி: லண்டன் மரதன் போட்டி என்றால் என்ன?**

பதில்: அரசாங்கங்களால் நிதியுதவி பூரணமாக அளிக்க முடியாத பல அறநிலையங்களுக்கு இத்தகைய மரதன் ஓட்டப் போட்டி மூலம் சேகரிக்கும் நிதி அவர்களின் சேவையைத் தொடரப் பயன்படுத்தப்படும். அத்துடன் தனிப்பட்ட முறையில் உடல் ஆரோக்கியம் பேணப்படுவதற்காகவும் கொலஸ்திரோல் போன்ற வியாதிகள் ஏற்படாமல் உடலைப் பாதுகாக்கவும் இத்தகைய ஓட்டப் போட்டிகள் துணைபுரிகின்றன.

**நீங்கள் எங்கு ஆரம்பித்து எங்கு இப்போட்டியை நிறைவு செய்தீர்கள்?**

நாம் பிளக்கீத் என்ற இடத்தில் ஆரம்பித்து பக்கிங்ஹாம் பலசின் அருகில் நிறைவு செய்தோம்.

**அடுத்த வருடம் இம்மரதன் ஓட்டப்போட்டியை எவ்வகையில் நடாத்த உத்தேசித்துள்ளீர்கள்?**

அடுத்தவருடம் குறைந்தது நூறு பேர்களையாவது தேர்ந்தெடுத்து சிறந்த பயிற்சி அளித்து இம்முறை போல் வெற்றியாகக் கொண்டாடப்படுவதோடு பெருமளவு நிதியைச் சேகரித்து தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தின் திட்டங்களுக்குத் தொடர்ந்து உதவி புரியலாம் என எண்ணு கிறோம்.

**கீழே உள்ள படத்தில் மரதன் ஓட்டப் போட்டியில் பங்கு பற்றிய எமது வீரர்களையும் அவர்களை உற்சாகப்படுத்தும் கழகத் தொண்டர்களையும் காணலாம்.**





# போரும் பொருண்மியமும்

## பசும் புரட்சியைத் தொடரும் நீலப்புரட்சி

இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்னர் வளர்ச்சியடையாத நாடுகள் பெரும் பட்டினிச் சாவை எதிர் கொள்ளக் கூடிய நிலை தோன்றியது. வரட்சியின் காரணமாக இந்தியா போன்ற நாடுகளில் பெரும் வறுமை நிலவியது. ஆனால் இந்த நிலையிலிருந்து மக்கள் காப்பாற்றப் பட்டதற்கு மிக முக்கியமாக அமைந்தது பசும் புரட்சி (Green revolution) என்று அழைக்கப்படும் விவசாயத் திட்டம் மிக வெற்றிகரமாக முன்னெடுக்கப் பட்டமையேயாகும்.

இன்று உலகில் இன்னுமோர் திட்டம் "நீலப் புரட்சி" சிறப்பாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. உலகின் சமுத்திர மீன் பிடிப்பு மிகவும் பாதிப்புற்று வருவதனாலே, தற்சமய ஆழ்கடல் மீன்பிடிப்புத் தொகை 1989ம் ஆண்டின் பின் வீழ்ச்சியடைந்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. மீன் பிடிக்கும் கப்பல்களின் தொகை கூடிக்கொண்டு போனபோதும் பிடிக்கப்பட்ட மீனின் தொகை 1989ம் ஆண்டு 8கோடி தொன்னாக இருந்தது. இன்று இத்தொகை வீழ்ச்சியடைந்து வருகிறது. ஆனால் வளர்ச்சியடைந்து வரும் உலக சனத்தொகைக்கு மேலும் மேலும் மீன் உணவுவகைத்



வளமையான மீன்பிடியில் ஏமாறும் ஒரு தொழிலாளி

தேவைப்பாடு அதிகரித்து வருகிறது.

நவீன மீன்பிடிப்புக் கப்பல்கள் ஆழ் சமுத்திரத்தில் 5 மீற்றர் உயரத்தில் மிக நுட்பமாக வலைகளைப் போட்டு மீன்களைப் பிடிக்கத் தக்கதாக இருந்த போதும் மீன்பிடி வீழ்ச்சிக்குக் காரணம் ஆழ்கடலில் உள்ள மீனின் தொகை குறைவாக இருப்பது மட்டுமன்றி, விரயமாக்கப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட சிறு குஞ்சுகளின் தொகையும் கூடியதேயாகும்.

ஒரு மீன்பிடித் தொழிலாளி தனது வாழ்க்கையைத் தானே திட்டமிட்டு அமைக்க முடியாமல் காலநிலை, அதிர்ஷ்டம் போன்றவற்றில் தங்க வேண்டிய நிலைக்கும் தள்ளப்படுகின்றான். கடலில் வலைகளை வீசினால் மீன்கள் அகப்படுமா என்பது அவனது கைகளில் இல்லாமற் போய்விடுகிறது. இது பழைய காலங்களில் மனிதன் இறைச்சி வகைக்கு காடுகளில் மிருகங்களைத் தேடி அலைவது போன்றதற்கு ஒப்பாகும். ஆனால் இன்று பண்ணை முறைகளில் ஆடு, மாடு , கோழி வளர்ப்பு முறைகள் ஏற்பட்ட பின் மனிதனுடைய இறைச்சித் தேவை வேட்டையாடலில் தங்காமல் முழுமையாகப் பண்ணை முறைக்கு மாற்றப்பட்டு விட்டது. இன்றைய கடல் மீன்பிடித் தொழிலானது அன்று காடுகளில் இறைச்சியைத் தேடிய மனிதனின் நிலைமையைப் போல இருக்கின்றது. ஆனால் கடல் மீன்பிடி வீழ்ச்சியின் காரணத்தால் இன்று நிலைமை மாறிவருவதை அவதானிக்க முடிகின்றது.

இந்த நிலையில் இன்று மீன்பிடி ஒரு திருப்பு முனையில் வந்துள்ளதாக அமெரிக்க மீன்பிடி இலாகா விஞ்ஞானியயான கால் சபீனா (Carl safina) கூறுகிறார். இன்னும் 20 ஆண்டுகளில் கடலில் பிடிக் கப்படும் மீன்களின் நுகர்வு குறைந்து, இலகுவில் வளர்க்கக் கூடிய மீன் இனத்தை நன்னீரிலோ அல்லது குடாக்களிலோ கட்டுப்படுத்தி வளர்ப்பதில் தான் மீன் நுகர்வு தங்கும் என்று கூறுகிறார். விஞ்ஞானிகள் இன்று மீன் வளர்ப்புத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட இனங்களை உருவாக்கி வருகிறார்கள். விவசாயத்தில் அதிக விளைச்சல் தரும் நெல்லினங்கள், கால்நடைகளில் அதிக பாலுணவைத் தரும் பசுக்கள், இலகுவில் வளர்க்கக் கூடிய கோழி இளங்கள் உருவாக்கப்பட்டது போன்ற முறைகளை மீன் இனத்திலும் உருவாக்கப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் எந்தவொரு மீன்வகையையும் மீன்வளர்ப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள முடியுமாயினும், விளைமீன், ஒட்டி, சீலா, அறக்குளா, முரல் போன்ற இனங்களை வளர்ப்பதற்கு விஷேட உணவு வகையும் நீரின் வெப்ப நிலையும் தேவைப்படும். ஆனால் இறால், கணவாய்,நண்டு ஆகிய இனங்களை இலகுவாக வளர்க்கலாமெனவும் இவை எந்தவகை உணவுகளையும் உண்ணக் கூடியவையெனவும் கூறப்படுகிறது.

சீனாவில் கமத் தொழிலாளிகள் தற்சமயம் தமது காணிகளில் சிறு



தமிழீழம் போன்ற ஒரிடத்தில் இறால் வளர்ப்புத் திட்டம்

பகுதியை நீரைத் தேக்கி சிறு குட்டை, குளங்களைப் போல் ஆக்கி அவற்றில் மீன்வளர்ப்பினை கமத்தொழிலுடன் சேர்த்துச் செய்து வருகிறார்கள். இம்முறையை ஏனைய ஆசிய ஆபிரிக்க நாடுகள் படிப்படியாகப் பின்பற்றி வருவதனை அவதானிக்கக் கூடியதாக வுள்ளதாகப் பிலிப்பைன்ஸிலுள்ள உலக மீன் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் வில்லியம்ஸ் (Meryl Williams) கூறுகிறார். வளர்ப்பு மீன் இனத்திற்குத் தேவைப்படும் உணவுவகைகளை மிக இலகுவாகத் தயாரிக்கிறார்கள். உதாரணமாக முக்கியமான புரொட்டீன் (Protein) சோயா அவரையிலோ அல்லது மிருக உணவு வகையிலோ இல்லாமல் இலகுவில் தயாரிக்கப் படக்கூடிய சோழன் தண்டுகளில் ஈஸ்டை (Yeast) வளர விடுவதனால் தயாரிக்கிறார்கள். மேலேயுள்ள படங்கள் ஒரு தொழிலாளி தளது வழமையான கடற்றொழிலில் ஈடுபட்டு ஏமாற்றத்துடன் தனது கூடையைப் பார்ப்பதாகவும், இன்னொருவர் தமிழீழம் போன்ற ஒரு இடத்தில் பனைகள் நிறை ந்த நிலத்திலுள்ள சிறுநீர் குட்டைகளில் இறால் வளர்த்துக் கைநிறைய ச்சம்பாதிப்பதையும் படம் காட்டுகிறது.



தமிழீழத்தில் பயன்பாடற்றுக் கிடக்கும் மீன்வளர்ப்புத் திட்டத்திற்குப் பொருத்தமான நிலங்கள்

தாய்லாந்தில் 1994ம் ஆண்டு மட்டும் நன்னீரில் வளர்க்கப்பட்டுப் பிடிக்கப்பட்ட இறால் இனத்தின் தொகை 2 இலட்சம் தொன்னிற்கு மேலாகும். ஆனால் இதனால் உள்ள நட்டங்களையும் நாம் பார்க்க வேண்டும். தாய்லாந்தில் இறால் வளர்க்குமிடத்தின் அளவு 80ஆயிரம் ஏக்கர் எனவும் இறால் வளர்ப்புக்குத் தேவையான நன்னீர் 1.29 மில்லியன் கனமீற்றர் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

ஆக்கம்: வசந்தன்

தமிழீழ மண்ணின் வளங்களை, நல்முறையில் எவ்வாறு பயன்படுத்தலாம், பேணலாம் என்பது சம்பந்தமாகவும், எமது மண்ணின் பொருளாதார நல்வாழ்வை எவ்வாறு கட்டி எழுப்பலாம் என்பது சம்பந்தமாகவும் களத்தில் பத்திரிகையில் வெளியிடுவதற்கு கட்டுரைகள், ஆய்வுகள் வரவேற்கப்படு கின்றன. விரும்புவோர் தயவுசெய்து தொடர்பு கொள்ள வும்.

தொடர்புகட்கு: 0181 365 0249

**TEEDOR - UK**
**202 Eelam House**
**London SE1 4QB**

# உலக அரங்கு

## இந்தியா

# அரசியலுக்குள் அரசியல்
# இந்தியா - தலைமைகள் பந்தயம்

### - ஓர் கண்ணோட்டம் -

ஒரு நாடோடிப் பாடல் அழகாகச் சொல்கிறது:

"நந்தவனத்திலோர் ஆண்டி,
அவன் நாலைந்து மாசமாய்
குயவனை வேண்டி,
கொண்டு வந்தான் ஒரு தோண்டி,
அதைக் கூத்தாடிக் கூத்தாடி
போட்டுடைத்தாண்டி"

அரசியலில் ஒருவனது எதிர்பார்ப்பு – இன்னொருவனது பேரழிவு. புது டெல்லியில் ஐக்கிய கூட்டு முன்னணி அரசு சித்திரை 11ஆம் திகதி இறந்துவிட்டது. முன்னாள் பிரதமர் நரசிம்மராவிடம் இருந்து, அவரின் தலைமைத்துவத்தின் பலவீனங்களைப் பயன்படுத்தி, இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவியை பெற்றுக் கொண்ட திரு. சீதாராம் கேசரி தனது அரசியல் தொழிலின் அடுத்தகட்ட குறியாக, இந்தியப் பிரதமரின் கதிரையைத் தேர்ந்தெடுத்தார் (கவரப்பட்டார்). வயது 80ஐத் தாண்டிவிட்ட கேசரிக்கு, அடுத்த பொதுத் தேர்தல் வரை காத்திருந்து, அதன்பின்னர் பிரதமர் பதவி பற்றிச் சிந்திக்க காலத்திலும் நேரத்திலும் அதிக நம்பிக்கை இருக்கவில்லை. நிச்சயமற்ற நிலையால் நம்பிக்கையின்மையே மேலோங்கி இருந்தது.

இந் நிலைக்கு அகப்புற நிலையில் பல்வேறு காரணிகள் இருந்தபோதும் மிகவும் நெருக்கடிகளாய் இருந்தவை:

1.அதிகாரத்துடன் இருந்து, அதிகாரங்கள் அற்ற நிலைக்குத் தள்ளப்பட்ட கட்சியின் அங்கத்தவர்களைக் கட்டுக்குள் இணைத்து வைத்திருத்தலுடன், பிளவுபடும் நிலையில் இருந்த கட்சியை உடையாமல் பாதுகாத்தல்.


2. தென் மாநிலத்திலிருந்து வந்தவரும் ஐக்கிய முன்னணியின் தலைவராகவும் அரசின் பிரதமராகவுமிருந்த திரு. எச். டி. தேவகௌடாவின் அரசியல் சதுரங்க நடவடிக்கைகளை முகங்கொள்வதுடன் சில சட்டரீதியான அரசின் பழிவாங்கல்களிலிருந்து தப்பித்துக் கொள்ளுதலும் ஆகும்.

இந்திய அரசியற் சூறாவளி சுற்றிச் சுழன்று இந்தியா முழுவதும் வீசி இறுதியில், மார்ச் 30ஆம் திகதி எங்கிருந்து புறப்பட்டதோ மீண்டும் அதே இடத்திற்கு வந்து சேர்ந்துள்ளதையே காங்கிரஸின் இவ் ஆதரவுக்கரம் வெளிப்படுத்துகின்றது. ஆனால் ஒரு வித்தியாசம், ஐக்கிய முன்னணி தனது தலைவரை மட்டும் ஒதுக்கிவிட்டு தான் தப்பித்துக் கொண்டது. இது அரசியல் சதுரங்கத்திற்கு மட்டுமே பொருந்தும். ஆனால் இந்தியாவின் உண்மையான அரசியல் ஸ்திரத்திக்கு வழிவகுக்குமா.........? காலம்தான் பதில் சொல்லும்.

எனவே, எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினைகளைத் தோற்கடிக்கவும், ...ருக்கொண்டிருந்த தனது பிரதமர் கனவை நனவாக்கவும் திரு. கேசரி எது நடந்தாலும் சரி – எவர் செலவிலும் எது பொருளாதார விரயம் அல்லது அரசியல் அநாகரிகமாயினும் இவையெல்லாவற்றுக்கும் மேலாகவுள்ள நாட்டின் நலன் அனைத்தையும் ஒருபுறம் வைத்துவிட்டு அரசை சட்டரீதியாகக் கவிழ்க்க முடிவு செய்தார். இதன்படி, தனது பாதையில் நந்தி போல் இருந்த, "ஐக்கிய கூட்டு முன்னணி அரசின் தலைவர் – அரசின் பிரதமர், கட்சியின் தலைவர் பதவியில் இருந்து மாற்றப்பட வேண்டும் பின்னர் புதிய பிரதமர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்" என்ற வரையறை கொண்ட தீர்மானம் ஒன்று திரு. கேசரியினால் நாட்டின் தலைவர் சங்கர் தயாள் சர்மாவிற்குக் கொடுக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து பங்குனி 30ஆம் திகதி, இந்திய காங்கிரஸ் கட்சி ஐக்கிய முன்னணி அரசிற்கு வழங்கிக் கொண்டிருந்த ஆதரவை நிறுத்தியது.

இந்நிலையில் கேசரியின் எதிர்பார்ப்பு பின்வருமாறு இருந்தது. அதாவது, ஐக்கிய முன்னணியில் தலைமைப் பதவிப் போட்டிகள் ஏற்பட்டு கட்சிகள் சிதறுண்டு போக இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி 13 ஐக்கிய கூட்டு முன்னணியின் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்று மீதி அலுவல்களைக் கவனித்தல் என்பதுவே திறந்துவிடப்பட்ட மூடுமந்திரமாக இருந்தது. ஆனால், கேசரியின் அதிர்ச்சி வைத்தியம் முறைப்படி வேலை




1. இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் சீதாராம் கேரி

2. தமிழ்நாட்டு மாநில காங்கிரஸ் தலைவர் மூப்பனார்

3. வெளிவிவகார அமைச்சர் குஜ்ரால் (ஐக்கிய முன்னணியின் புதிய தலைவர்)

4. முன்னாள் பிரதமர் நரசிம்மராவ்

5. ஐக்கிய முன்னணியின் முன்னாள் தலைவர் தேவகௌடா

செய்யவில்லை. எல்லாம் குழம்பியபடி அப்படியே இருந்தன. ஆனால், காங்கிரசின் செல்வாக்கு பலமாகச் சரியத் தொடங்கியது. மீண்டும் தேர்தல் வந்தால் காங்கிரஸ் நிலைமை பரிதாபகரமாக மணக்கவும் நிலை தென்படவே ஆட்சியின் பாராளுமன்ற அங்கத்தவர்கள் பதற்றம் அடைந்தனர்.

கேசரியும் பின்வாங்கியபடி தனக்குப் பதவி தேவையில்லை எனினும், புதிய தலைவர் தெரிவு செய்யப்பட வேண்டுமென்று புதிய தீர்மானத்தை வைத்தார். நாட்கள் இப்படியே நகர சித்திரை 11ஆம் திகதி, அரசிற்கு எதிராக கேசரியின் காங்கிரஸ் கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தது. 90 வாக்குகள் ஆதரவாகவும் 338 வாக்குகள் எதிராகவும் விழுந்தது. எல்லோரும் எண்ணியபடி இல்லாமல், எப்படியோ போட்டிகளும் தயக்கங்களும் இருந்தாலும் ஐக்கிய கூட்டு முன்னணி தேவகௌடாவை தள்ளிவிட்டு புதிய தலைவரைத் தெரிவு செய்யத் தீர்மானித்தது.

இந்த வேலையை ஐக்கிய முன்னணி அரசு ஏற்கெனவே மார்ச் 30க்கு முன்னர் செய்திருந்தால் இவ்வளவு குழறுபடி ஏற்பட்டிருக்காது. ஆனால், இது இந்திய அரசியலில் தவிர்க்க முடியாததும் எதிர்பார்க்கப்பட வேண்டியதும் ஆகும்.

மீண்டும் நாட்கள் இப்படியே ஓட, பல்வேறு கட்சிகள் அதாவது, தமிழ் நாட்டு மாநில காங்கிரஸ் – மூப்பனார் மற்றும் வெளிவிவகார அமைச்சர் குஜ்ரால், பீகார் மாநில முதல்வர் லாலூ பிரசாத் ஆகியோர் போட்டியில் முன்னணியில் இருந்தனர். இறுதியாக ஏப்ரல் 19ஆம் திகதி நீண்டநாள் நிச்சயமின்மைகள் ஒருவாறு மாறி ஐக்கிய முன்னணி பச்சை விளக்கைக் காட்டியது. தங்கள் சார்பில் ஜனதா தள கட்சியைச் சேர்ந்த குஜ்ராலை, ஐக்கிய முன்னணியின் தலைவராகவும் பிரதமருக்குரிய விண்ணப்பதாரியாகவும் தெரிவு செய்வதாக ஐக்கிய முன்னணி அறிவித்தது. ஆனால், உடனடியாகவே அத் தெரிவில் வெடிப்பு ஏற்பட்டது. அதாவது, தமிழ்நாட்டு மாநில காங்கிரஸ் கட்சி தாங்கள் "ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவாக இருப்போம். ஆனால் பங்கெடுக்கப் போவதில்லை" என்று தனது வெறுப்பை வெளிக்காட்டியது. ஆனால் கேசரியின் இந்தியக் காங்கிரஸ், புதிய தலைவர் தெரிவில் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இன்று வரையுள்ள நிலைமையைப் பார்த்தால், இந்திய அரசியற் சூறாவளி சுற்றிச் சுழன்று இந்தியா முழுவதும் வீசி இறுதியில், மார்ச் 30ஆம் திகதி எங்கிருந்து புறப்பட்டதோ மீண்டும் அதே இடத்திற்கு வந்து சேர்ந்துள்ளதையே காங்கிரஸின் இவ் . ஆதரவுக்கரம் வெளிப்படுத்துகின்றது. ஆனால் ஒரு வித்தியாசம், ஐக்கிய முன்னணி தனது தலைவரை மட்டும் ஒதுக்கிவிட்டு தான் தப்பித்துக் கொண்டது. இது அரசியல் சதுரங்கத்திற்கு மட்டுமே பொருந்தும். ஆனால் இந்தியாவின் உண்மையான அரசியல் ஸ்திரத்திக்கு வழிவகுக்குமா........? காலம்தான் பதில் சொல்லும். ✷

- நாவுக்கரசன் -

# மேலதிக ஒப்பந்தம் 1யை அமெரிக்கா உறுதிப்படுத்த வேண்டும் என்பது எனது நிலைப்பாடு

## - பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம்

உலகத்தமிழர் இயக்கப் பொறுப்பாளர் மாணிக்கவாசகம் சுரேஷ் அவர்களுக்கு எதிராக, குடிவரவுச்சட்ட விதி 40.1 இன் கீழ் தொடரப்பட்ட வழக்கு விசாரணை, கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகியது. பலநாள் விசாரணையின் பின்னர், இவ் வழக்கு செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.
வழக்கு விசாரணையின்போது, அகில உலக சட்ட நிபுணர்களது சாட்சியங்கள் நீதி மன்றத்தில் சுரேஷ் சார்பாக நெறிப்படுத்தப்பட்டன.

மார்ச் மாதம் 20 ஆம் நாள் மாலை நடந்த நீதிமன்ற விசாரணையின்போது Illinois பல்கலைக்கழகப் பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம் அளித்தார்.

அவரது சாட்சியத்தின் முக்கிய பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்துக் கீழே தருகிறோம். இது முன்னர் வெளிவந்த சாட்சியத்தின் தொடர்ச்சியாகும்.

**கேள்வி:** உங்கள் விளக்கங்களை உங்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

"பயங்கரவாதம்" என்பது திட்டவட்டமான உருவமும் பொருளும் இல்லாத எண்ணமாகும்;

இதற்கு, சர்வதேச மட்டத்தில் ஒத்துக்கொள்ளக்கூடிய சட்ட அர்த்தம் இல்லை. யதார்த்தபூர்வமான அரசியல் மதிப்பும் இல்லையென்று சொல்லத் தேவையில்லை."

**பதில்:**– அதுசரி. எனது அனுபவத்தில் **பயங்கரவாதம்** என்ற எண்ணத்தை பல்வேறு அரசுகள் தங்களுக்கு ஏற்றவாறு கையாள எத்தனித்திருக்கின்றன. அதாவது தங்களுக்குப் பிடிக்காத குழுக்களை, **'பயங்கரவாதிகள்'** என குறியிட்டுக் கொள்கின்றன. அதே சமயம் தங்களுக்குப் பிடித்த குழுக்களை அப்படிச் செய்யாது விட்டுவிடுகின்றன. இதனை நான் ஒரு வழக்கறிஞர் என்ற முறையில் சொல்லிக் கொள்கிறேன்.

நான் ஒரு விவாதத்தை முன் வைக்கிறேன்....... இந்தக் கட்டுரை நான் ஆற்றிய விரிவுரையை அடிப்படையாகக் கொண்டது........ அந்த அதிகாரம் அமெரிக்க வழக்கறிஞர்கள், சட்டப் பேராசிரியர்கள் மற்றும் அகிலவுலக வழக்கறிஞர்கள் இவர்களுக்காக எழுதப்பட்டது. நான் நினைக்கிறேன், இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உகந்த வழி, மேலதிக ஒப்பந்தம் 1யை உறுதிப்படுத்துவதாகும். நான் இந்தக் கட்டுரையை முதலில் எழுதியதற்கான நோக்கம், அமெரிக்க அரசு மேலதிக ஒப்பந்தம் 1யை உறுதிப்படுத்த வேண்டுமா? வேண்டாமா? என்ற விவாதத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்பதற்காகவே. இந்த விவாதத்திற்கு எனது பதில், அமெரிக்க அரசு தனது நலத்தை முன்னிட்டு இந்த மேலதிக ஒப்பந்தத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்பதே.

ஒரு குறிப்பிட்ட காலவரையில் இந்த ஒப்பந்தத்தை அமெரிக்கா அரசு உறுதிப்படுத்த வேண்டும் என, கூட்டுத் தலைமையக தளபதிகள் பரிந்துரை செய்திருக்கிறார்கள்.

**நீதிபதி:** Ms.Jackman இந்தப் புத்தகத்தின் பிரதி உங்களிடம் இருக்கிறதா?

**செல்வி யக்மன்:** இல்லை.

**நீதிபதி:** ஏனென்றால், இப்படியான கேள்விகள் கேட்கப்படுகின்றன. உங்களுக்கு இது பற்றித் தெரியுமா என்பது பற்றி எனக்குத் தெரியாது. என்னிடம் புத்தகப்பிரதி இல்லை.

**திரு. வயலன்கோட்:** நாங்கள் ஒரு பிரதி எடுத்துக்கொள்ளலாம்.

**நீதிபதி:** எனக்குத் தெரியாது. நீங்கள் செல்வி யக்மனைப் பொறுத்தளவில் நியாயமாக நடந்து கொள்கிறீர்களா என்பது எனக்குத் தெரியாது. அவருக்குத் தெரியாத விடயங்கள் பற்றி நீங்கள் கேள்வி கேட்கிறீர்கள். அவருக்கு அந்தப் (புத்தக) பிரதி கொடுக்கப் படவில்லை.

**திரு. வயலன்கோட்:** நான் அதை மெச்சுகிறேன். நான் பேராசிரியர் எதைச் சொல்லப்போகிறார் என்பதை எதிர்பார்க்க முடியவில்லை. எதைப்பற்றி அவர் குறிப்பாகச் சாட்சியம் சொல்லப் போகிறார் என்பது எனக்குத் தெரியவில்லை.

**நீதிபதி:** ஒரு வேளை நாங்கள் பிரதி எடுத்துக் கொள்ளலாம். செல்வி யக்மனுக்கு அது தேவை இல்லா விட்டால் விட்டுவிடலாம்.

**திரு. வயலன்கோட்:** வேறு மாதிரிச் சொன்னால், நான் எனது குறுக்கு விசாரணையைத் திட்டமிட முடியாது.......

**நீதிபதி:** எனக்கு விளங்குகிறது. செல்வி யக்மன், அவர் அவசியம் என்று நினைத்தால். அவருக்கு ஒரு பிரதி கொடுக்கப்படவேண்டும் என்பதுதான் எனது அக்கறை.

**செல்வி யக்மன்:** எனக்கு ஒரு பிரதி தேவை.

**சாட்சி:** நான் வழக்கறிஞன் என்ற முறையில் அமெரிக்காவில் உள்ள எனது சக வழக்கறிஞர்களுக்குத் தெரிவித்தேன்.

**நீதிபதி:** அப்படியானால், நீங்கள் சொன்னதை மட்டுப்படுத்துகிறீர்களா? ஏனெனில் நீங்கள் ஏன் அப்படிச் செய்கிறீர்கள்?

**சாட்சி:** நான் மட்டுப்படுத்தவில்லை. அவர் (வழக்கறிஞர்) அந்தக் கட்டுரை பற்றிக் கேட்கிறார்.

**நீதிபதி:** ஆம். ஆனால் அமெரிக்காவிலுள்ள வழக்கறிஞர்களுக்கு மட்டும் அந்தக் கட்டுரையை வரைந்ததாக ஏன் சொல்கிறீர். எனக்கு இது நன்றாக விளங்கவில்லை. அந்த ஒரு சந்தர்ப்பத்திற்கு மட்டும் அது பொருந்தும் என்று சொல்கிறீரா?

**சாட்சி:** இல்லை. நான் பொதுவாக அகிலவுலக சட்டத்தின் கருதுகோள்களை விவரித்துள்ளேன் என நம்புகிறேன்.

**நீதிபதி:** மெத்த நல்லது.

**சாட்சி:** ஆனால், அமெரிக்காவில் மேலதிக ஒப்பந்தம் 1யை உறுதிப்படுத்த வேண்டுமா இல்லையா என்பது பற்றி ஒரு விவாதம் நடந்தது. அது பற்றிய பிரச்சினைகள் சம்பந்தமாகவே நான் எனது கட்டுரையில் எழுதியிருந்தேன். அது பற்றி மட்டுமே....... நீங்கள் அந்தக்கட்டுரையை வாசித்தால் அது பொதுப்படையாக அமையவில்லை என்பது உண்மைதான்.

இது (கட்டுரை) ஒரு நிபுணரால் மற்ற நிபுணருக்கு எழுதப்பட்டது. அது மட்டுமல்லாது (அமெரிக்காவின்) கொள்கையிலும் தாக்கம் ஏற்படலாம் என்பதற்கு எழுதப்பட்டது.

**திரு. வயலன்கோட்:** என்னை நம்புங்கள். நான் உங்களை எதிர்பாராத விதத்தில் மாட்ட நினைக்கவில்லை.

**நீதிபதி:** நான் நினைக்கவில்லை, அவர் (பேராசிரியர்) எதிர்பாராத விதமாகப் பிடிபட்டுவிட்டார். என்று. அதை விட, அவர் இதனைத் தனது தொழில் அட்டவணையில் காட்டியிருக்கிறார்.

(இதனைத் தொடர்ந்து "உலக அரசியலும், அகிலவுலகச் சட்டமும்" (World politics and International Law) என்ற நூலின் 10வது அதிகாரத்தின் பிரதி, "அகிலவுலக பயங்கரவாதத்தைத் தடுக்க எடுக்கும் நடவடிக்கைகள்" (The Resolution on Measures to prevent International Terrorism) இதன் பிரதி பேராசிரியர் பொயிலின் தொழில் அட்டவணைப் பிரதி. நீதிமன்றத்தில் ஆவணங்களாக அணைக் கப்பட்டன.)

**திரு. வயலன்கோட்:**

**கேள்வி:** அந்தக் கட்டுரை 2, பக்கம் 80: இரண்டாவது பந்தியில் நீங்கள் பயங்கரவாதம் என்ற சொல்லை "அவதூறான, ஆத்திரமூட்டத்தக்கதுமான பதம்" என்று குறிப்பிட்டுள்ளீர்கள்.

**பதில்:** ஆம்

**கேள்வி:** இப்போதும் அப்படித்தான் சொல்கிறீர்?

**பதில்:** நிச்சயமாக. செல்வி யக்மன் அந்தக் கட்டுரையின் பிரதியைத் தந்தால் குறிப்பிட்ட பகுதியைக் காட்ட முடியும்.

**கேள்வி:** அது நியாயம் (என நினைக்கிறேன்).

**பதில்:** மீண்டும் (சொல்கிறேன்). இது எனது அனுபவத்தின் அடிப்படையில் பிறந்தது. குறிப்பாக எண்பதுக்களில், 1974ல் ஜெனிவா மாநாட்டில், தேசிய விடுதலை இயக்கங்களை ஜெனிவா மரபுகளுக்குக் கட்டுப்படுத்தும் நோக்கோடு கூட்டப்பட்ட மாநாட்டில், அமெரிக்க அரசு கலந்து கொள்ளுவதென்ற முடிவு நிக்சன் நிர்வாகத்தின்போது எடுக்கப்பட்டது.

நாங்கள் இங்கு தாராள சனநாயகவாதிகள் பற்றிப் பேசவில்லை. மாறாக, குடியரசு பழமைவாதிகள் பற்றிப் பேசுகிறோம். இது போர்ட் நிர்வாகத்தின்போதும் அதற்குட்



✳ பேராசிரியர் பிரான்சிஸ் பொயில்

பின் காட்டர் நிர்வாகத்தின் போது தொடர்ந்தது. எனது எண்ணப்படி, இந்த மூன்று நிர்வாகங்களும் இந்த விடயத்தை உத்தியோக ரீதியாகவும், பொறுப்போடும் ஒரு சட்டப் பிரச்சினையாக எடுத்துக் கொண்டது. இதனை அரசியல்மயப்படுத்த இவை விரும்பவில்லை. இந்த மேலதிக ஒப்பந்தம் பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்திய நபர்களைத் தனிப்பட்ட முறையில் தெரியும். குறிப்பாக, எனது ஆசிரியரும் நண்பருமான பேராசிரியர் Baxter எனக்குத் தெரியும்.

அமெரிக்காவின் புதிய நிர்வாகம் (றீகன் என்ன செய்ததென்றால், "பயங்கரவாதம் என்ற பதத்தை முற்றாகத் தனது நலத்திற்காக வளைத்தது. எனது எண்ணத்தில் இந்த ஒப்பந்தம் பற் பேச்சுவார்த்தை நடத்தியவர்களை தனிப்பட்ட முறையில் அது தாக்கியது அவர்கள் பேச்சுவார்த்தையின் போது உத்தியோக ரீதியாகவும் சட்ட ரீதியாகவு சரிவர நடந்து கொள்ளவில்லை என் மனப்பான்மை இருந்தது.

**கேள்வி:** இது இன்று நீங்கள் சொன்னதைப் பற்றியது. நீங்கள் சாட்சிய அளித்தபொழுது பயங்கரவாதம் என் பதம் "அமெரிக்கா உட்பட பல நாடுகளா பிரயோகப்படுத்தவும், துஸ்பிர யோகப்படு தவும், இசைந்த பக்கத்திற்கு திரித்துக்கொள்ளவும் பயன்படுத்தப்பட்ட என்று சொன்னீர்கள்...

**பதில்:** இதைச் சொல்வதற் வருத்தப்படுகிறேன். ஆனால் அதுதா உண்மை.

**கேள்வி:** அதிகாரம் 3 ஐப் பார்த்தா அது நியாயமான விமர்சனம். உம நாட்டின் வெளியுறவுக் கொள்கை பற்றிய ஆய்வு, குறிப்பாக சகாப்தத்தின், 89 இற்கும் அதற்கு ஆண்டுகள் பற்றியதாக நாம் கருதல

**பதில்:** நான் சொல்லியது போல, அமெ அரசு அதனை (ஒப்பந்த உறுதிப்படுத்த வேண்டும் என்பது வேண்டுகோளாகும். அந்தக் காரண காகவே அந்தக் கட்டுரையை எழுதி நான் நம்புகிறேன், றீகன் நிர்வா ஒப்பந்தம் 1 யைப் பற்றி ஒரு பாசாங் தனமான நிலைப்பாட்டை எடுத் என்று. ✷

தொடரு

# பூவரசம்வேலி பொறுக்காது பனைவடலிகள் பணியாது

ஆறுமணியுடன் அடங்கிப்போவென
அதட்டுகிறது அரசகட்டளை.

ஏனென்று கேட்க எவருமிலர்.

கரப்புக்கூட்டுக் குஞ்சுகளென
திறந்துவிட்டதும் தீனிபொறுக்கி,
உள்ளே போ என்றதும் ஓடியடங்கி,
அடிமைத் தனத்தை
அறிந்துகொண்டோம்.

எல்லையிடப்பட்ட மண்ணரனுக்குள்ளே
ஒரு வாழ்வமைத்து
எரிந்து கொண்டிருக்கின்றோம்.

மரம்கூடக்கையசைத்து மகிழ்கிறது.

சிரம்தாழ்த்திக் கிடக்கின்றோம் நாம்.

ஒவ்வொரு "சென்றி" யையும்
தாண்டும்போதும்
நீங்கள் எமக்கு அடிமைகளென
"காக்கிப்பார்வைகள" கத்துகின்றன.

ஆமாம் எனத்தலையாட்டி
நடக்கின்றோம் மௌனமாய்.

இதற்குமேலும் இழிவில்லையென்பதை
உணர்கின்றோம் உள்ளே.

வாய்திறக்க முடியாத கதை.
நெருப்பாய் தகிக்கிறது நெஞ்சு.

கோபம் கொப்பளிக்கிறது.
என்ன செய்ய இயலும்?

பொறிக்குள் அகப்பட்ட
பூனைக்குட்டியாய்
கழிகிறது எம்நாட்கள்.

இயல்புவாழ்வு திரும்பியதாய்
"ரூபவாஹினி" அலறுகிறது.

மீட்கப்பட்ட மக்களென
எம்முகங்களைக் காட்டுகிறது.

இல்லை, வெறும்பம்மாத்து.........
சுத்தப்பொய்.
கத்தவேண்டும்போல கோபம் வரும்.

கத்தலாம்

காணாமற்போனோர் பட்டியலில்
பெயர் வரும்
உயிர் வராது.

நள்ளிரவில் கதவு தட்டப்படும்.




■ வியாசன்

திறந ால் பிடித்துச் செல்லப்படுவோம்.
திறக்கா து விட்டால் அடித்துக்
கொல்லப்படுவோம்.

பள் ிக்குப் போவாரெம் தங்கைகள்.

ஒவ் வொரு "சென்றி" யிலும்
கல ர்களாலேயே கற்பழிக்கப்படுவர்.

டை யைத் திறவென்பான்
துப் ப்பாக்கி ஏந்திய சனியன் ஒருவன்.

கையைக் காட்டென்பான் இன்னொரு
தூத்தேறி.

''அச்சாப் பொண்ணு
ஆதரே மினிசு" என்று
பாட்டுப் பாடுவான் இன்னொரு
பரதேசி.

தினமும் தீக்குளித்தபடி சென்று
திரும்புவார்கள்.

''ஏய் புலியைக் கண்டது........
சரிதாங்......... பொய் சொல்லக்
கூடாதிங" – என்றபடி
சுடுகுழலால் நெஞ்சினில் இடிப்பான்.

சந்திகள் யாவிலும் இது
சடங்காகிப்போனது.

அதிகாலை புலராப் பொழுதில்
உயிரை ஏறிமிதிக்கும் சப்பாத்துச்
சத்தம் கேட்கும்.
நெஞ்சுக்கூடு உலர்ந்துவிடும்.

சுற்றிவளைக்கப்பட்டு
"மீட்பர்களால" மிதிக்கப்படுவோம்.

காவலரண்களாலும்
கம்பிச் சுருள்களாலும் பின்னப்பட்டு
மிதிக்கப்படுகிறது எம்மண்.

வலைக்குள் அகப்பட்ட மீனைப்போல
துடிக்கிறது எம் ஊர்கள்.

மூத்திரம் பெய்யவும் முன்னனுமதி
பெறுவதெனில்
ஆத்திரம் வராமல் என்ன செய்யும்.

மீளப் புனரமைப்பு என்று கொழும்பு
சொல்லும்
உதவி வழங்கும் நாடுகளும்
ஒப்புக்கொள்ளும்.

சிறையிருக்கின்றோம் என்பது
தெரியாது அவர்களுக்கு.

முகிலுக்குள்ளே நிலவு விழுந்து
கிடக்கிறது.
இருட்திரைக்குள்ளே எம் இருப்பு.

தேவாரம் கேட்ட திருத்தலங்களிற்
கூட சாராய வாடை.

எம் மனக்கோட்டைகள் யாவும்
எரிந்துபோக
இப்போ அம்மணமாக நிற்பதை
அறிகின்றோம்.

விதியெழுதிய தீர்ப்பென
பேசாமற்கிடக்கவும்
விடுதலை வேட்கை விடவில்லை.

குயில்கள் பாடும் வசந்தத்தை இழந்து
எம் குடியிருப்புக்கள் தவிக்கின்றன.

புயலுக்கு முந்திய அமைதியென
எம் பொழுதுகள் கழிகின்றன.

எனினும் –

"தேவகுமாரர்கள்" வருவாரெனும்
நம்பிக்கையே மடிநிறைந்துள்ளது.

எம்பிள்ளைகள் வருவர்
சப்பாத்துக் கால்களால் மிதிபடும்
தெருக்களில்
மீண்டும் "வரிச்சீருடை" யில்
உலாவருவர்.

இந்த மண்ணரணும்
கம்பிச் சுருள்களும்
"சென்றி" களும் என்ன செய்யும்
அவர்களை?
பிள்ளைகளின் மூச்சுப்பட்டே
பொசுங்கிப்போகும்.

"பஞ்சகல்யாணிக் குதிரை" யேறி
காற்றாய் விரைந்தெம்
தெருவிலிறங்குவர்.

எம்மண்ணின் தலைவன்
வன்னியிலிருந்து வருவான்.

படைநடத்தியபடி அவன் வரும் தேர்
நகர் புகும் போது
பகைவர் எந்தப் பக்கமாய் ஓடுவர்?

ஓடுவதா? அதுதான் இல்லை.

ஒருவர்கூட எஞ்சாது
துடைத்தழிக்கப்படுவர்.

நடக்காமற்போகுமா? இது?
நிச்சயம் நடக்கும் இந்தவரலாற்று
வெற்றி.

சுயத்தை அழித்து
எம்மண்ணைச் சுடுகாடாக்கி
பயத்தின் பிடிக்குள்ளெம்மை
இறுக்கவா நினைத்தாய்?



பகையே! கொஞ்சநாள் ஆடு.

ஆடி முடி.

பூவரசம் வேலி பொறுக்காது.
செம்பாட்டு மண்ணுக்குச் செருக்குப்
பிடிக்காது
பனைவடலிகள் பணியாதென்பது
நீ அறியாததா?

சும்மா வாசத்துக்காக பூத்துவிழும்
மலர்களல்ல எம்பூக்கள்.
வாசமில்லாவிடினும் ரோசம் மிக்கவை
எமது செவ்வரத்தைகள் என்பதறிவாய்
விரைவில்.

தப்புக்கணக்குப் போட்டுள்ளாய்
சந்திரிகா!

எத்தனை நாள் வைத்திருப்பாய்
எம்மண்ணை?

ரத்தத்தால் எழுதும் யுத்தக்கணக்கை
ரத்வத்தையா எழுதுகின்றார்?

ஹொந்தாய்.

வீடுகொளுத்தும் ராணிக்கு.......
நெருப்பெடுத்துக்கொடுக்கும் மந்திரி

மாமனுக்கும், மருமகளுக்கும்
அச்சாப் பொருத்தம்

ஒன்று செய்யுங்கள்

போட்டுமூட பொருத்தமான இடத்தில்
குடாநாட்டினுள் குழிதோண்டுங்கள்

யாரை மூட?

உங்கள் படையினரை மூட.

*"ஒருநாள் விடியும் இருளும் முடியும்*
*உதயம் தெரியும் பொழுதிலே - அந்தத்*
*திருநாளிங்கே வரும்போதினிலே*
*வருவோம். வருவோம் மகிழ்விலே"*

# கடலன்னையின் மடியில் சூலுற்றுவிட்ட விடுதலை முத்துக்கள்



சூரி
ரவி வேலுப்பிள்ளை
வீரமரணம் 18.06.86



சேரன்
ச. சிறிசர்வானந்தா
வீரமரணம் 18.06.86

கடல் பரப்பில் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சிகள் பற்றி காலம் காலமாக கூறுகின்றன அலைகள். கடலோடிய தமிழரின் பரம்பரையில் வந்த கடற்புலிகளின் கடல்அனுபவம். போர்கள். வீரச்செயல்கள். தியாகங்கள். மரணங்கள்....... புதிய வரலாற்றினைப் படைக்கின்றன. அவர்கள் — காற்றின் வேகத்தையும். அலைகளின் கொந்தளிப்பையும். நீரின் சுழிப்பினையும் அறிந்து. சுக்கானை கையில் பிடித்து. வேகமாக. லாவகமாக படகைச் செலுத்தும் ஓட்டிகள் — மீனவர்கள் 'வலை படுத்தி' இருக்கிறார்களா. கரும்புள்ளியாகத் தூரத்தே தெரிந்து பூதாகரமாகச் சீறிப்பாய்ந்து வரும் சிங்கள ரோந்துப் படகு தென்படுகிறதா எனக் கண்களைக் கூர்மையாக்கி. தளத்தில் கால்களை உறுதியாக ஊன்றி. அணியத்தின் முன் அசையாது நின்றவாறு விரிந்த பார்வையில் கடலை அளக்கும் காவலர்கள் — பொங்கும் கடலை அமைதியடையச் செய்ய 'அம்மா'! என்று அன்பான பாவத்துடனும். ஒருவித பயத்துடனும் அழைத்து. படகினுள் துள்ளி விழும் மீன்களுடன் அளவளாவி. வட்டமிடும் பறவைகளுடன் சேர்ந்து பாடி. காற்றுடன் குலாவி. வான்வெளியில் தோன்றும் வண்ணச் சேர்க்கைகளைக் கண்டு குதூகலித்து. தெறிக்கும் உப்பு நீருள் முழுகி. புயல் என்றாலும் பயமின்றிக் கடல் மேல் செல்லும் இயற்கையின் நண்பர்கள் — மீன்களுக்கு இணையான நீச்சல்காரர்கள்.

கடல் நடுவே கண்ட களங்களில் அவர்கள் செய்த தீரச் செயல்களை கடல் அலைகளும். காற்றும் எப்போதும் மண்ணுக்கு உரைத்துக்கொண்டிருக்கின்றன. கடல் அன்னையின் வயிற்றுள் விடுதலை சூலுற்ற முத்துக்களாய் வீழ்ந்துவிட்ட கடலோடிகளுக்கு எமது வீரவணக்கங்கள்.

போராட்டக் கடலில் முத்துக் குளிப்பவர்கள் நாம். முத்தெடுக்கும் காலம் வெகுதூரத்தில் இல்லை.



லெப். தவேந்திரன்
சுந்தரக்குமார்
வீரமரணம் 14.04.85



ஜியாப்
அ. யேசுராஜா
வீரமரணம் 18.06.86

2ம் லெப். ஆனந்தப்பா
க. சண்முகானந்தன்
வீரமரணம் 18.06.86

விசாகன்
வீரமரணம் 18.06.86

கமல்
அ. நந்தகுமார்
வீரமரணம் 14.04.85





கனேஸ் மாமா
வீரமரணம் 14.04.85



2ம் லெப். மணிமாறன்
க. பாலசுப்பிரமணியம்
வீரமரணம் 18.06.86



2ம் லெப். துரைக்குட்டி
கு. இராஜவடிவேல்
வீரமரணம் 27.04.86



சோபஸ் சித்தப்பா
அ. சீ. கனேசதாஸ்
வீரமரணம் 18.06.86





2ம் லெப். அலிப்
பொ. சுப்பிரமணியம்
வீரமரணம் 27.04.86

2ம் லெப் ரங்கா
சி. இராசகுமார்
வீரமரணம் 27.04.86

சுதா
சுதாகர்
வீரமரணம் 14.04.85

நடேஸ் மாமா
மு. நடராஜா
வீரமரணம் 14.04.85

லெப். ரவியப்பா
சோ. யோகலிங்கம்
வீரமரணம் 18.06.











தேவராஜா
ஆனந்த் லம்பேட்
வீரமரணம் 18.06.86

தெய்வா
ஐ. சிவநாதன்
வீரமரணம் 27.04.86

கார்த்திக்
கார்த்திகேசன்
வீரமரணம் 27.04.86

ஞானி
சு. கஜேந்திரமூர்த்தி
வீரமரணம் 27.04.86

காந்தன்
விஜயதாஸ்
வீரமரணம் 27.04.86